# பொன்னி

10-9-52
4 அணா
PONNI...

10




10/4.52

ஐ211,N47R0
N52.6.14
197816

# சிறந்த மூன்று கதைவிருந்து!

## உலக அரங்கில் — விலை ரூ. 1—0—0

டி. கே. சீனிவாசன்
எழுதிய கதைகள்

இப் புத்தகத்தில் 'ஆனந்த பைரவி' என்ற கதையில் இளமையிலேயே துறவுபூண்ட ஆனந்தன் உணர்ச்சி வசப்பட்டு உலக அனுபவம் பெறாமல் கஷ்டப்படுவதையும், 'முடியவில்லை — தொடாராது' என்ற கதையில் சாகப்போகிறவன் மனதில் எழும் எண்ண அலைகளையும், 'உலக அரங்கில்' என்ற கதையில் இயற்கையின் எழிலை அனுபவிக்க விடாமல் ஒரு பெண்ணுக்கு முகத்திரையிட்டுச் செய்யும் கொடுமையையும், அதனால் விளையும் கெடுதல்களையும் விவரிக்கிறார் ஆசிரியர். இதுபோன்ற கதைகள் வளரும் தமிழ் இலக்கியத்தில் இடம்பெறத் தக்கவை.

— தினமணி

## நினைவுச் சின்னம் — விலை ரூ. 1—0—0

இளமைப்பித்தன்
எழுதிய கதைகள்

தோழர் இளமைப்பித்தன் உருவாக்கியிருக்கும் 'நினைவுச் சின்னம்' படிப்போர் இதயங்களில் கவர்ச்சியையும் சலனத்தையும் உண்டாக்கும் வன்மை பெற்றிருக்கிறது. வாழ்வைப் புது நோக்கோடு பார்க்கிறார்; நம்மையும் பார்க்கச் செய்கிறார். பத்துக் கதைகளும் பழுதில்லாத முத்துக்கள்.

— ஞாயிறு

## கடல் முத்து — விலை ரூ. 1—0—0

எஸ். ஆறுமுகம்
எழுதிய கதைகள்

திரு எஸ். ஆறுமுகம் எழுதின பத்துக் கதைகளும் சாலச் சிறந்தவை. ருஷியக் கதாசிரியர் மாக்சிம் கார்க்கியைப்போல இவர் பிச்சைக்காரர்கள், ஏழைக் குடியானவர் போன்றவர்களையே தம் கதைகளில் சித்தரிக்கின்றார். அவலக் கதைகளிலும் இன்பக் கதைகளிலும் இவர் கலையழகு பூரணமாகப் பொலிவுறுகின்றது.

— சுதேசமித்திரன்

விவரங்கட்கு:

**பொன்னி லிமிடெட்**

த. பெ. எண். 1165 :: சென்னை–21

## தாய்மைக்கு மரியாதை

அமெரிக்காவில் 1907-ல் திருமதி அன்னு ஜார்விலின் முயற்சியால் தொடங்கப் பெற்ற 'தாய்மார் தினம்' ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் இரண்டாவது ஞாயிறன்று கொண்டாடப்படுகிறது. தேசமெங்கும் இந்நாளைக் கொண்டாடுமாறு 1914-ல் ஜனுதிபதி வில்ஸன் பிரகடனம் விடுத்தார். இத்தினத்தை விடுமுறை நாளாக அமெரிக்கர்கள் கொண்டாடுகின்றனர். பெண்களும் பிள்ளைகளும் தங்கள் அன்னைகட்குப் பரிசுகளையும் அன்புச் செய்திகளையும் வழங்குகின்றனர்.

தாய்மார் தினக் கொண்டாட்டத்துடன், தாய்மார் போட்டியும் 1933 முதல் வழக்கத்துக்குக் கொண்டுவரப்பட்டது. ஒவ்வொரு மாகாணமும் ஒரு சிறந்த தாயைத் தேர்ந்தெடுக்கிறது. இவ்வாறு பொறுக்கி யெடுக்கப்படும் தாய்மார்களில், அவ்வாண்டுக்கு அமெரிக்கா பூராவுக்குமான தலைசிறந்த தாய் தேர்ந்தெடுக்கப்படுகிறுள். அவள் பெற்றெடுத்த குழந்தைகளின் நல்லொழுக்கம், சாதனைகள், தைரியம், பொறுமை, அன்பு, கருணை, குடும்ப நிர்வாகம் முதலிய தாய்மைப்பண்புகள், அவளது சமூக சேவை ஆகியவற்றையெல்லாம் மதிப்பிட்டே ஒரு அன்னையை மிகச் சிறந்தவளாகத் தேர்ந்தெடுக்கிறுர்கள். அமெரிக்கர்கள் தாய்மார்கள் தினத்தன்று தாய்களின் பாதுகாப்புக்கான ஆஸ்பத்திரிகட்கு நிறைய நன்கொடைகள் வழங்கி உதவுகிறுர்கள்.

1 OCT 1952 MADRAS

பொன்னி

மலர் 6 | செப்டம்பர் 10, 1952 | இதழ் 14

திருவள்ளுவர் ஆண்டு 1983
ஆவணித் திங்கள் 26-ம் நாள்

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தாய்மைக்கு மரியாதை | ... | 1 |
| விளக்கவுரைப் பரிசு | ... | 2 |
| தமிழுக்கு விழா | ... | 3 |
| காலமும் கருத்தும் | ... | 8 |
| சோகப்பதுமை அவள்! | ... | 10 |
| இவன் யார்? | ... | 11 |
| ஆஸ்கார் ஒயில்டு | ... | 14 |
| பொழுதுபோக்கு | ... | 18 |
| சுழல் | ... | 21 |
| ஒற்றை ரோஜா (தொடர்கதை) | ... | 30 |
| காணிக்கை | ... | 37 |
| துனியா | ... | 47 |
| தம்பி (சிறுவர் தொடர்கதை) | ... | 55 |
| தேடாமல் கிடைத்தது | ... | 58 |


★

பொன்னி சந்தா விவரம்: உள்நாடு, இலங்கை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6—0—0; ஆறுமாதம் ரூ. 3—0—0. வெளிநாடு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6-12-0; ஆறுமாதம் ரூ. 3-6-0. இலங்கைக்கு வி.பி.பி. உண்டு.




# விளக்கவுரைப் பரிசு

**காதல்** உலகத்தையே ஆட்டிப்படைக்கிறது; நம் காதலர்களை ஆட்டிப்படைத்ததில் வியப்பென்ன? சென்ற இதழ் அட்டைப் படம் நண்பர்களுக்கு அருமையான சந்தர்ப்பத்தை அளித்திருக்கிறது. நமக்குக் கிடைத்துள்ள விளக்கவுரைகளில் சங்கத் தமிழ் துள்ளி விளையாடுகிறது; புதுமைப் பாரதியும் பாரதிதாசனும் ஏறுநடை போடுகிறார்கள்; மறுமலர்ச்சி பெற்ற தமிழ் உலா வருகிறது. காதலியும் காதலனும் பேசுகிறார்கள்; ஆம். அவர்கள் முக பாவம் பேசுகிறது— எத்தனை கோணங்களில் நின்று எத்தனைவிதமாகப் பேசவைத்திருக்கிறார்கள் நம் நண்பர்கள் என்று காணும்போது நமக்கு ஒரே வியப்பு; மகிழ்ச்சி! சென்னைவாசி ஒருவர், இத்தடவை பரிசு பெறுகிறார்! இத்தடவையும் மற்றும் பல விளக்கவுரைகள் பரிசுபெறத் தகுந்த நிலையில் வந்திருக்கின்றன; அவற்றை அனுப்பிவைத்தவர்களுக்கு அடுத்தடுத்த சந்தர்ப்பங்களில் பரிசு கிடைத்துவிடுமென்பதில் ஐயமென்ன?

புதுயுக மனிதரையும் பூனையையும் இந்த அட்டைப் படத்தில் காணுகிறீர்கள்! உங்கள் சிந்தனையுள்ளம்தான் இப்பொழுது நன்கு பயிற்சிபெற்றுவிட்டதே! எளிய தமிழில், தெளிவான நடையில் உங்கள் விளக்கவுரையை அமையுங்கள். படித்துப் பார்த்தால் தெளிந்த நீரோடைபோல் பொருள் விளங்க வேண்டும்; தடையின்றித் தொடர்ந்து படிக்க இயற்கை ஓட்டம் வேண்டும். இவை உங்கள் எழுத்துத்திறமை வளரச் சில குறிப்புக்கள். **20—9—52**க்குள் விளக்கவுரைகள் எங்களுக்குக் கிடைக்கவேண்டும். முயற்சி திருவினையாக்கும்; (பத்து ரூபாய்) பரிசு ஏன் உங்களுக்குக் கிடைக்கக்கூடாது?

1. விளக்கவுரைகளை நூலஞ்சலில் (புக்போஸ்ட்) அனுப்பினால் போதும்; அத்துடன் கடிதங்கள் இணைக்கவேண்டாம்.
2. விளக்கவுரை 'பொன்னி'யில் ஒரு பக்க அளவை மீறக் கூடாது.
3. ஒருவர் ஒரு விளக்கவுரைதான் அனுப்பலாம்.
4. கீழ்வரும் கூப்பனில் தங்கள் பெயர், விலாசங்களை எழுதி விளக்கவுரையுடன் அனுப்பவேண்டும். கூப்பனின்றி வரும் விளக்கவுரைகள் கவனிக்கப்படமாட்டா.

பொன்னி **10-9-52** இதழ் விளக்கவுரைப்போட்டி

பெயர் : ........................................

முகவரி ........................................

........................................

........................................

தேதி ..................

# தமிழுக்கு விழா

சென்னையில் ஐந்தாம் தமிழ்விழா நடந்து முடிந்திருக்கிறது; பத்திரிகைகள் தமிழ்விழாப் பற்றிய செய்திகளைப் பக்கம் பக்கமாகப் படங்களோடு வெளியிட்டுத் 'தமிழின் பெருமைதான் என்னே! என்னே!' என்று ஒரேயடியாகத் தமிழன்னையை அரியாசனத்தில் தூக்கிவைத்திருக்கும் இச் சமயத்தில் தமிழைப் பற்றிய நினைப்பு யாருக்கும் வருவது இயற்கையே! விழா நிகழ்ச்சிகளும் அங்கே முழங்கிய பேச்சொலிகளும் நம் ஆராய்ச்சிக்குத் தேவை எனினும், அவைபற்றிய விவாதம் அவசியமல்ல என்பது நம் கருத்து.

சென்னை முதலமைச்சர் கனம் ராஜகோபாலாச்சாரியார் விழாவைத் தொடங்கிவைத்திருக்கிறார்; தமிழ்ப் பெரியார் திரு. வி. க. தலைமை தாங்கியிருக்கிறார்; இலங்கை அமைச்சர் திரு. நடேசப் பிள்ளை சிறப்பான பங்கேற்றிருக்கிறார; முன்னாள் அமைச்சர் பக்தவத்சலம் வரவேற்புத் தலைவராக இயங்கியிருக்கிறார்; பெரும் புலவர்கள், அறிஞர்கள் தம் சொற்பொழிவுத் திறனால் விழாவைப் பெருமைப் படுத்தியிருக்கின்றனர்; டாக்டர் சுப்பராயன், சர் பி. டி. ராஜன் இருவரும் 'இரு துருவங்களாக' விழாவில் காட்சி யளித்திருக்கின்றனர். நாடகம், நடனம், இசையரங்கு, கலைக் கண்காட்சி இவை தமிழ் விழாவைக் கலை விழாவாக ஆக்கியிருக்கின்றன!

தமிழ் வளர்ச்சிக் கழகம் செய்துவரும் இத் திருப்பணி தமிழ்மக்களின் கவனத்தை எந்த அளவுக்குக் கவர்ந்திருக்கிறது என்று பார்ப்பது அவசியம். தமிழ் வளர்ச்சிக் கழகம் தொடங்கக் காரணமாயிருந்த திரு. அவினாசிலிங்கம் அவர்களின் தமிழ்ப்பற்றில் யாருக்கும் ஐயப்பாடு கிடையாது. அவர் தாம் அமைச்சரா யிருந்தபோது தமிழுக்கு முதன்மை தர மேற்கொண்ட முயற்சிகளையும் நாம் மறந்துவிடக்கூடாது. தொடர்ந்து அவர் கல்வி அமைச்சராக இருந்திருப்பாரானால் கல்வித்திட்டத்தில் தமிழுக்குத் தக்க முதன்மை கிடைத்

திருக்கும் என்பதில் யாதொரு ஐயப்பாடும் இல்லை. பள்ளிகளில் தமிழை முதல் மொழியாக அறிவித்தது அவர் ஆட்சிக் காலத்தில்தான்! தமிழாசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டதும் அவருடைய முயற்சியால்தான்! திருக்குறள் கட்டாயப் பாடமாக உயர்நிலைப் பள்ளிகளில் இடம் பெற்றதும் அவர் திட்டத்தால்தான்! தமிழை ஆட்சிமொழியாக ஆக்கவேண்டுமென்னும் எண்ணம் எழுந்து திருச்சி மாவட்டத்தில் அம்முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதும் அவர் பதவியில் இருந்தபோதுதான். இவைபற்றி நாம் இப்போது குறிப்பிடக் காரணம் உண்டு. திரு. அவினாசிலிங்கம் அவர்கள், தொடர்ந்து அமைச்சராக நீடிக்க முடியாமல் போனதற்குக்கூட அவருடைய இத் தமிழ்ப் பற்றுத்தான் காரணம் என்று நாம் எண்ணுகிறோம். மேலும் அவர் தொடங்கி வைத்த திட்டங்கள் இன்றுள்ள அரசாங்கத்தால் எந்த அளவுக்கு நடைமுறையில் காப்பாற்றப்படுகின்றன என்று கவனிப்பதும் இச் சமயத்தில் நிலைமை விளக்கத்திற்குத் தேவையாகிறது. தமிழ், முதல் மொழி என்ற திட்டம் கேலிக்குரியதாகி விட்டது; தமிழுக்குப் 'பழைய மரியாதையே' பள்ளிக்கூடங்களில் தரப்பட்டு வருகிறது. முதல் மொழியின் இடத்தை ஆங்கிலத்திடமிருந்து பற்றிக்கொள்ள இந்தி, போராட்டம் நடத்திவருகிறது. தமிழுக்கு என்று [illegible] அடிமை நிலைதான்! தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் நிலையோ சொல்லவேண்டியதில்லை. வித்துவான் பட்டம் பெற்றவர்களுக்கு திரு. அவினாசிலிங்கம் அளித்திருந்த உயர்ந்த சம்பளத் திட்டத்தை அவருக்குப் பின்வந்த அமைச்சர்கள் தடுத்து நிறுத்திப் 'பழையகதை' ஆக்கிவிட்டார்கள். திருக்குறள் கட்டாயம் பெயரளவில் இருக்கிறது; கட்டாயமில்லாத இந்திப்பாடம் கட்டாயமாகக் கற்பிக்கப்படுகிறது. பல பள்ளிக்கூடங்களில் திருக்குறள் கற்பிக்கப்படுவதில்லை என்றே அறிகிறோம். தமிழை ஆட்சி மொழியாக்கும் எண்ணமே செத்துவிட்டதென்னலாம். திருச்சிமாவட்டத்தில் நடத்திய சோதனை வெற்றியளிக்கவில்லை என்று அத்திட்டத்தையே கைவிட்டுவிட்டார்கள். நம் சென்னை அரசாங்கம் தமிழ்மொழியை இவ்வாறு 'வளர்த்து' வருகிறது; திரு. அவினாசிலிங்கம் ஏற்படுத்தியுள்ள தமிழ் வளர்ச்சிக்கழகம் எந்த அடிப்படையில் தொடங்கப்பட்டது, அதன் நோக்கங்கள், செயல்முறை இவைபற்றி நமக்குக் கருத்து வேறுபாடு உண்டு. ஆனால் தமிழ்மொழி வளரவேண்டுமென்பதில் யாரும், தமிழ்நாட்டில்பிறந்த எவரும் கருத்து வேறுபட இடமில்லை. எனவே தமிழ் வளர்ச்சிக் கழக முயற்சிகள் எந்த அளவுக்குத் தமிழுக்கு ஆக்கம் தரக்கூடும் என்ற கண்ணோட்டம் தேவையாகிறது. கலைக்களஞ்சியம் உருவாக்கும்முயற்சிமிகப்பெரிது; வரவேற்கத்தக்கது. அம் முயற்சி இன்னும் பரந்த அடிப்படையில் எழவேண்டும் என்பதே நம் கருத்து. தமிழ் வளர்ச்சியில்

## பெண்கள் பெண்களே!

இயற்கைக்கும் படைப்புக்கும் நேர்விரோதமாக நடந்து பெண்கள் தங்கள் பெருமைகளை முற்றுக மறந்துவிடுகின்றனர். ஆண்களை எல்லா விஷயங்களிலும் பெண்கள் பின்பற்றிச் செல்வதற்கு எல்லை வேண்டாமா? எப்படியாகப் பின்பற்றிச் சென்றாலும் ஆண்கள் ஆண்களே; பெண்கள் பெண்களே. ஆடவர்களிலிருந்து பெண்கள் வேறாக வித்தியாசமாக இருப்பதால்தான் உலகில் காதல் என்று ஒன்று இருக்கின்றது.

மனிதனே சிற்சில விஷயங்களில் காட்டுமிருகம்போல இருக்கின்றான். சிற்சிலபோது குழந்தைப் பிள்ளைபோல் நடந்துகொள்கின்றான். பெருமை வாய்ந்த பெண்மணிகளே முன்வந்து காட்டுமிராண்டிகளை மனிதனுக்கவும் குழந்தைகளை நற்பழக்கமுடையவராக்கவும் பயிற்ற வேண்டும். அப்போதுதான் உலகில் மனித வர்க்கத்தினர்க்கிடையில் ஏற்பட்டுவரும் வித்தியாசங்கள் நீங்கி உண்மையான சமாதானம் ஏற்படும்.

—டாக்டர் இராதாகிருஷ்ணன்

காங்கிரஸ் தமிழ்வளர்ச்சி, கம்யூனிஸ்ட் தமிழ்வளர்ச்சி, திராவிடத் தமிழ்வளர்ச்சி என்ற பாகுபாடு வேண்டியதில்லை. அரசியல் கட்சிகள் தமிழ் வளர்ச்சியில் ஆர்வம் செலுத்துவது அவசியமே. எனினும் கட்சிவெறி, தமிழ் வளர்ச்சிக்கு உதவாது. அதுவும் கலைக் களஞ்சியம் போன்ற பெரு முயற்சிகள் மிகுந்த பொருட் செலவில் உருவாக்கப் படுபவை; நீடித்துப் பற்பல தலைமுறைகளுக்குப் பயன்தர வேண்டுமென்று கருதி மேற்கொள்ளப் பட்டிருப்பவை— இவற்றில் தமிழ்பால் அன்புகொண்ட யாரும் பங்குகொள்ள முன்வர வேண்டும்; தமிழ்வளர்ச்சிக் கழகத்தார் அனைவரையும் அணுகி, வரவேற்று, இடமளிக்க வேண்டும்; ஆண்டுதோறும் அளிக்கும் பரிசுத்திட்டம் உயர்ந்த நோக்கத்திலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அத்திட்டம் நடைமுறையில் ‘ஒரு கோஷ்டி கானம்’ போலவே ஒலிக்கிறதென்பதே நம் எண்ணமாகும். இப்படி நாம் கூறுவது யார்பாலும் பொறாமைப்பட்டல்ல; தமிழ் வளர்க்கும் பணி தமிழ்மக்கள் அனைவரையும் உள்ளடக்கிக்கொண்டு செல்லும் பொதுப்பணியாக வேண்டுமென்னும் நோக்கத்தாலேயே நாம் இதனைக் கூறுகிறோம். புதுமைத் தமிழ் எல்லாத் துறைகளிலும் வளர வேண்டுமென்பதை மறுத்துரைக்கும் போக்கு எவ்விடத்தும் இல்லை. ஆனால் புதுமைத் தமிழை வளர்க்கும் பணியும், பேணும் பண்பும், சிறக்கும் திறமையும் தமிழ்ப் பெருமக்களிடத்தில் குறிப்பிட்ட ஒரு கட்சியாரிடமோ, ஒரு மதத்தாரிடமோ அடங்கிவிடவில்லை; அது பரவி நிற்கிறது. எனவேதான் தமிழ் வளர்க்கும் முயற்சி எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் முயற்சியாக இயங்கவேண்டுமென நாம் குறிப்பிடுகிறோம்.

தேனம்பேட்டை விழாவில் எதிர்பார்த்த கூட்டமில்லை என்பது நாடறிந்த செய்தியாகி விட்டது. இத்தனை பெரு விளம்பரமும் பெருங் கூட்டத்

தைச் சேர்க்கஏன் இயல வில்லை என்று விழா நடத்தியவர்கள் சிந்திப்பது அவசியம். தமிழ்ப் பெரியார் திரு. வி. க. குறிப்பிட்டதுபோல் தமிழ்ப்பற்றும் தமிழார்வமும் நாட்டில் பொங்கி வழிவதென்னவோ உண்மை. அப்படியிருந்தும் ஐந்தாம் தமிழ்விழா, தமிழ்மக்களின் உள்ளத்தைக் கவரமுடியவில்லை. அங்கே தான் தமிழ்வளர்ச்சிக் கழகத்தார் புரிந்துகொள்ளவேண்டிய உண்மை தொக்கிநிற்கிறது. தமிழ்விழா நிகழ்ச்சிகள் காங்கிரஸ் மைதானத்தில் நடந்தன என்பது மட்டுமல்ல, காங்கிரஸ் விழாவாகவே, இன்னும் சொல்லப்போனால் அரசாங்க விழாவாகவே நடந்து முடிந்திருக்கின்றன என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. தமிழ்விழா நடத்திய பெரியவர்கள் முன்பு அரசாங்கத்திலிருந்தவர்கள்; தொடங்கி வைத்தவரோ இந்நாள் முதல் அமைச்சர். கலந்துகொண்டவர்களில் பெரும்பாலோர் ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தமிழைப் புகழ்வதும் பாராட்டுவதும் என்று ஆரம்பிக்கும்போது, தமிழ்மக்கள் சிந்திக்கத் தொடங்குகிறார்கள். அதிகாரத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்தபோது இவர்கள் தமிழுக்கு என்ன செய்தார்கள்? அதிகாரத்தில் இருக்கும் இப்போது தமிழ் வளர்க்க என்ன செய்கிறார்கள்? இக்கேள்விகள் தமிழ்மக்கள் உள்ளத்தில் எழாமல் என்ன செய்யும்? அக் கேள்விகளுக்குக் கிடைக்கும் பதில் ஒரே ஏமாற்றம்தான்!

நாம் முன் குறிப்பிட்டதுபோல் திரு. அவினாசிலிங்கம் தொடங்கிய சில முயற்சிகளும் புறக்கணிக்கப்பட்டுவிட்ட பரிதாபத்தையே தமிழ்மக்கள் கண்டு வருந்தவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அதிகாரம் படைத்தவர்கள் தமிழுக்குச் செய்திருக்கக்கூடிய பணிகள் ஏராளமுண்டு. அவற்றை அவர்கள் இதுவரை செய்யவில்லை; செய்யப்போவதாக அறிவிக்கவுமில்லை; செய்த ஒன்றிரண்டு காரியங்களையும் மாற்றிவிட்டார்கள். இந்நிலையில் ஐந்தாம் தமிழ்விழா நிகழ்ச்சிகளைத் தமிழகம் சந்தேகக் கண்ணோடு நோக்கியதில் வியப்பில்லை; பெருந்திரளாகத் தமிழ்மக்கள் அங்கே குவியாததிலும் வியப்பில்லை. கனம் ராஜகோபாலாச்சாரியார் தம் தொடக்க உரையில் தமிழ் வளர்ச்சிக்கு நல்ல ஆலோசனைகளை வெளியிட்டிருக்கிறார்; பசுவுக்குத் தீனி போட்டால்தான் பால்தரும்; பூசை பண்ணுவதுமட்டும் போதாது என்று குறிப்பிட்டிருப்பதை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம். தமிழை வளர்க்கும்போது தமிழைமட்டுமே நினைக்கவேண்டுமென்று அவர் சுட்டிக் காட்டியிருக்கும் செய்தி—அவர் என்ன நோக்கத்தில் கூறியிருப்பினும்-தமிழ் மக்களுக்கு நல்ல அறிவுரை என்றே கருதுகிறோம். ஆனால் அரிசிக் கட்டுப்பாட்டை நீக்கி, கடன் வெளியிட்டு, தஞ்சை நிலச்சட்டம் கண்டு 'கீர்த்திவர்மராக' விளங்கும் அவர், தமிழ் வளர்ச்சியில் சொல்லின் செல்வராகமட்டும்ஏன் நிற்கவேண்டும்?

மற்ற ராஜ்யங்களில் இந்தியை ராஜ்ய அரசாங்க மொழியாக ஆக்கும் முயற்சிகள் தீவிரப் படும்போது, தமிழ்மொழியைத் தமிழ் மாவட்டங்களில் ஏன் ராஜ்யமொழியாக ஆக்கக் கூடாது? தெலுங்கு பேசும் மாவட்டங்களில் தெலுங்கை ஏன் ராஜ்யமொழியாக ஆக்கக் கூடாது? இத் திட்டத்தில் சிக்கல் வரும் என்று கூறலாம். சென்னை தமிழருடையது தான் என்று 'தைரியமாக'க் கூறி விட்ட நம் முதலமைச்சருக்கு இந்தச் சிக்கல் ஒரு பிரமாதம் என்று யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். தமிழ் விழாவில் தமிழை அரசாங்க மொழியாக ஆக்கியிருக்கிறோம் என்று அவர் அறிவித்திருந்தால் எவ்வளவு நன்றாய் இருந்திருக்கும்! அவ்வாறு நிகழ்ந்திருந்தால் கனம் ராஜகோபாலாச்சாரியாரின் தமிழ்ப்பற்றில் யார் ஐயப்பாடு கொள்ளமுடியும்? இவ்வாறு நிகழாததாலேயே தமிழ்விழா, தமிழ்மக்களின் ஆர்வத்தை ஒருங்கே ஈர்க்கும் விழாவாக அமையவில்லை என்று நாம் குறிப்பிடுகிறோம். தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் தங்கள் பெரும்பணி வெற்றி பெற இந்த அனுபவங்களை மனத்திற்கொள்வது அவசியம், விடுதலை பெற்ற நாட்டில் தமிழை உரிமைபெற்ற முதல் மொழியாக—அரசாங்க மொழியாக இயங்கச் செய்யாதவரை தமிழுக்கு விழா எடுப்பதும் அங்கே ஆளும் அமைச்சர்கள் 'உபதேசம்'செய்வதும் வெறும் கேலிக்கூத்துத்தான்! ஆக்க வேலைத் திட்டமில்லாத தமிழ் காக்கும் எந்த முயற்சிக்கும் இந்த முடிவு பொருந்தும்.


## புதுமைப்பித்தன் சிறுகதைப் போட்டி

முதற்பரிசு ரூ. 125
இரண்டாம் பரிசு ரூ. 75
மூன்றும் பரிசு ரூ. 50

தேர்வுக் குழுவினர்:

திரு. பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரை
,, விந்தன்
,, அகிலன்
,, டி. கே. சீனிவாசன்
,, முருகுசுப்பிரமணியன்

**முடிவு தேதி 30—9—52**

# காலமும் கருத்தும்

## தஞ்சை நிலம்

தஞ்சை நிலம் தமிழகத்தின் உயிர் நாடி. தமிழ்மக்களின் உணவுப் பிரச்சினையை ஓரளவுக்குத் தீர்த்துவரும் பெருங் களஞ்சியம் தஞ்சைமாவட்ட நெற் களஞ்சியம்தான்! அங்கே நிலத் தகராறு சர்வ சதாரணமாகிவிட்டது, கடந்த சில ஆண்டுகளாக. தகராறுகளைத் தீர்த்து அமைதியைக் காக்க மலபார் போலீஸ் படை தஞ்சை கிராமங்களில் குடியிருந்தது; கோலோச்சியது; அப்படை, நெல் விளைந்த இடங்களில் தன் வல்லமையால் விளைவித்த அக்கிரமங்கள் அதிகம். நிலத் தகராறு தீரவில்லை; வளர்ந்தது. பொதுத் தேர்தல் தஞ்சை மாவட்டத்தில்புத்தொளியை வீசியது. தஞ்சை தேர்ந்தெடுத்தனுப்பியவர்களெல்லாம் கம்யூனிஸ்டு நண்பர்கள்; தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலான தொகுதிகளில் காங்கிரஸ்காரர்கள் தோற்றார்கள். காங்கிரஸ்காரர்களுக்குக் கண் திறந்தது. தஞ்சாவூர் மாவட்டத்தில் காங்கிரஸ் வேலைகளைச் சீர்திருத்த முனைந்தார்கள். ஆனால் சட்டசபைக்கு வந்த கம்யூனிஸ்டுத் தோழர்களும் முற்போக்குக் கருத்துள்ள மற்றவர்களும் தஞ்சை நிலத்தைக் கனம் ராஜகோபாலாச்சாரியாருக்குச் சுட்டிக்காட்டியவண்ணமிருந்தார்கள். அங்கே நிகழும் அநீதிகளைக் களைய ஒரு அவசரச் சட்டம் தேவை என்று வற்புறுத்தினார்கள். முதலமைச்சர் சிந்தித்தார்; எதிர்க்கட்சியினர் தரும் திட்டத்தைத் தாம் மேற்கொள்ளத்தான் வேண்டுமென்ற முடிவுக்கு வந்தார். தஞ்சைச் சாகுபடிக்காரர்கள், பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கவர்னரால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 'இச் சட்டம் கூடாது' என்று ஒரேயடியாக எதிர்ப்பவர்கள் இருக்கிறார்கள். அவர்களை நாம் புரிந்துகொள்ளமுடிகிறது. 'இச்சட்டம் போதாது' என்று கூறுபவர்களும் இருக்கிறார்கள். ஆனால் கொள்கையளவில் இச்சட்டம் சமூக நீதியை விரும்பும் யாராலும் வரவேற்கப்பட வேண்டிய தொன்றேயாகும். தஞ்சை நிலம் இப்பெரிய உண்மையை ஆளும் பெரியவர்களுக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறது. நிலச் சீர்திருத்தத்தில் இது ஆரம்பம்தான். 'உழுபவனுக்கே நிலம்' என்ற அளவுக்கு மாறுதல்கள் நிகழவேண்டுமென முற்போக்குலகம் எதிர் பார்ப்பது இயற்கையே! அப்பெருங் கொள்கை நோக்கி அரசாங்கம் இயங்க ஆரம்பித்துவிட்ட தென்ற அளவில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

## அரசியல் கூட்டு

சோஷலிஸ்டுகளும் பிரஜா கட்சியினரும் ஒன்றுசேர்ந்து பிரஜா சோஷலிஸ்டு கட்சியாக இயங்க முடிவு செய்துவிட்டார்கள். தமிழ்நாட்டில் பிரஜா கட்சி முற்போக்குக் கட்சியாக இயங்கி வருகிறது; மக்கள் ஆதரவும் இருக்கிறது. இந்நிலையில் சோஷலிஸ்டுகளோடு சேரும் திட்டம் இவர்களை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்துமென்பது தெரியவில்லை. திரு. பிரகாசத்தை ஐக்கிய முன்னணியிலிருந்து விடுபடும்படி ஜெயப்பிரகாஷ் வேண்டுகோள் தந்திருக்கிறார். ஆந்திரகேசரி தமிழ்நாட்டுப் பிரஜா கட்சித் தலைவரான திரு. ஆதித்தனோடு நகரசபைத் தேர்தல் காரணமாகக் கருத்துவேறுபட்டிருக்கிறார். இப்படிக் காங்கிஸை எதிர்க்கும் சக்திகள் அலங்கோலப்படுவது மிக வெட்கப்படவேண்டிய செய்தியாகும். எதிர்க்கட்சிகள் அனைத்தும் தங்கள் தங்கள் தலைமையைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டம் தற்சமயம் ஏற்பட்டிருக்கிறதென்றே கருதுகிறோம். ஐக்கிய முன்னணியில் எதிர்பார்க்கப்படும் பிளவு முற்போக்கு சக்தி

களுக்கெல்லாம் பெரிய எச்சரிக்கை யாகும்.

## தேர்தல் வருகிறது

சென்னை நகராண்மைக்கழகமும் மற்றும் சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லா நகராண்மைக்கழகங்களும்புது உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப் போகின்றன. அத் தேர்தல் முக்கிய நகரங்களிலெல்லாம் நடக்க இருக்கிறது. தேர்தல் என்றவுடன் நாக்கைச் சப்புக்கொட்டும் பேர்வழிகளுக்கெல்லாம் மற்ருெரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. பொதுத் தேர்தலில் கண்ட படிப்பினைகளை யாரும் மனத்தில் கொள்வதாகத் தெரியவில்லை. எல்லா நகரங்களிலும் ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் பலபேர் போட்டியிடுகிருர்கள். கட்சியின் பெயரால் நின்று சாதிக்கவேண்டிய காரியங்கள் எதுவும் முனிசிபாலிட்டிகளில் இல்லை—இது எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் காங்கிரஸ்காரர்கள் தங்கள் மாட்டுப் பெட்டிகளோடு முனிசிபல் தேர்தலில் விஜயம் செய்திருக்கிருர்கள். சென்னையிலும், மற்றும் பல நகரங்களிலும் நகர மக்கள் கூட்டணி உருவாகியிருக்கிறது. இக் கூட்டணியில் முற்போக்குக் கருத்துள்ளவர்கள் காங்கிரஸ் கட்சியை எதிர்க்கும் நோக்கத்தோடு ஒன்று சேர்ந்திருக்கிருர்கள். சுயேச்சையாளர்கள்—வழக்கப்படி அவர்கள் ஏராளமாக நிற்கிருர்கள். இத் தேர்தலில் கட்சிகளின் தலையீடு அவசியமில்லை. தனிப்பட்ட நபரின் தகுதி, திறமை, அவர் மக்களுக்குச் செய்த தொண்டு இவற்றைப் பரிசீலனைசெய்து வாக்களிக்குமாறு ஒரு சூழ்நிலை ஏற்படவேண்டும். கட்சிகளின் ஆர்ப்பாட்டம் புகுந்துவிட்டால் இந்தப் பரிசீலனைக்கு இடமே இல்லாமல் போகிறது. ஆகவே வாக்காளர்கள் இந் நிலையில் விழிப்பாக இருப்பது அவசியம். அவர்கள் நாணயம், ஒழுங்கு, மக்களிடத்து அன்பு, நகர முன்னேற்றத்தில் கருத்து இந்தப் பரிசீலனையில் அபேட்சகர்களைக் கண்ணேட்டமிட்டுத் தக்கவர்களுக்கே தங்கள் வாக்குகளை வழங்க வேண்டுமெனக் குறிப்பிட விரும்புகிருேம்.

## மறைமலையார் நினைவு

பெரும்புலவர் மறைமலையடிகளாரின் இரண்டாவது ஆண்டு நினைவு விழா வாரம் 15—9—52 முதல் 21—9—52 வரை தமிழ்நாடெங்கணும் சிறப்புற நிகழவேண்டுமென மறைமலையடிகள் நினைவுநாள் செயற்குழுவினர் முடிவு செய்திருக்கின்றனர். இந்நாளில் தமிழ்மொழி எய்தியுள்ள பெருமிதநிலைக்கும் தனிச்சிறப்புக்கும் அடிகளாரின் பெருந்தொண்டு அடிப்படைப் பணியாக உதவியது என்பதை அனைவரும் ஏற்பர். தமிழ்ப் பற்றும் தமிழ் காக்கும் விழிப்புணர்ச்சியும் இன்று தமிழ்மக்களிடையே ஊடுருவி நிற்பதற்கு அடிகளாரின் தமிழ்ப்பணி பெரிதும் பயன்பட்டிருக்கிறது என்பதை நாம் மறக்கமுடியாது. அறிவுக்கடலாக விளங்கிய மறைமலையார் தமிழிடத்தும், தமிழ்மக்களிடத்தும் என்றும் ஈடுபாடுள்ள அன்புக் கடலாகவும் முழங்கிவந்தார்கள். மறைமலையார் நினைவு தமிழ் மக்களுக்குத் தமிழை நினைவுபடுத்தும்; தமிழ்ச் சிறப்பை நினைவுபடுத்தும்; தனித்தியங்கவல்ல தமிழாற்றலை நினைவுபடுத்தும்; தமிழ் வளர்ந்தால் தமிழகம் வளரும் என்பதை நினைவுபடுத்தும். இந் நினைவுவாரம் எங்கும் நிகழவேண்டும். அடிகளாரின் பெருநூல்களைத் தமிழகம் அறியச்செய்ய வேண்டும். அவர்தம் வாழ்க்கைக் குறிக்கோளில் இணைந்துகிடந்த தமிழ்ப்பற்று பெருமக்களுக்கெல்லாம் முன்மாதிரியாக அமைய வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும். அடிகளாரின் சிறந்த எண்ணங்களை மக்கள் மன்றத்தில் பரப்பவேண்டும். இப்பணியைத் தமிழகம் செய்யவேண்டுவது இன்றியமையாப் பெருங் கடமையாகும்.




# சோகப் பதுமை அவள்

விடை கேட்கிறான் பிரிந்து செல்ல; வேதனை அடைகிறாள் மலர்மங்கை. அறம்வழிப் பொருளீட்டி மணங்கொள்வது ஆடவன் முறைமையும், பெருங் கடமையும் ஆகும். பொருள் தேடப் போங்கால், காதலியைப் பிரிந்துசெல்ல நேரும். பிரிவு அவனுக்குமட்டும் இன்பமா பயக்கிறது? அன்று என்பதற்கு அவன் ஒளியிழந்த முகமே சான்று பகருகிறதே!

பிரிவு என்று அவன் சொல்லவும் துணிந்தானே என்ற மலைப்பும், பிரிவை எவ்வாறு தாங்குவது என்ற துயரமும் அவளை வாட்டுகின்றன. வேலியோரம், மாநிழல், ஆலமரமேடு--இவை அனைத்தும் அவள் தலைவனோடு கொஞ்சி மகிழ்ந்ததை நினைவூட்டி இதுவரை இன்பம் தந்தன; இனி அவை அவளை வாட்டுமன்றோ? வாட்டம் தாங்கும் வன்மை தன் மென்மையுள்ளத்திற்கு உண்டோ என்று அஞ்சுகிறாள்.

வாடிய முகம், ஒளிமங்கிய கண்கள், குவிந்த உதடு, சோர்ந்த உள்ளத்தின் சாயல்—இவை, அவன் பிரிவை அவள் தாங்கமாட்டாள் எனப் புலப்படுத்துவதை அவன் உணராமலில்லை.

கோடையில் குதிரையில் விரையும் அவன், 'கார்முன் கடிதில் திரும்புவேன்' என்கிறான். விரைவுமிகு குதிரையெனினும், மனத் துடிப்பின்முன் அதன் வேகம் என்ன செய்ய முடியும்? காதலன் களிப்பைக் கருதிக் காலம் கடப்பதைக் கருதாது தன்னை அணிசெய்வாள்; அழகுச் சிலையாக்குவாள். இனி அக்காலமெல்லாம் அவன் பிரிவை நினைந்து பெருந்துன்பம் அடைவாளன்றோ?

பொருள்தேடி மணம் முடித்தபின் காணும் நீங்கா நல்லின்பத்தை நினைவுபடுத்தி 'இடைவேளைத் துயரை மறந்திரு' என்று சமாதானம் கூறுகிறான் அவன். எப்படிச் சொல்லியும், பிரிவை வலியுறுத்துகிறானே என்று அவள் நினைக்கிறாள்.

பிரிவால் நிகழும் எண்ணற்ற நினைவுகளின் துயரம் தாக்கச் சோகப் பதுமையாகிவிட்டாள் அவள்! கடமை பெரிதென்றெண்ணும் காளை விடைபெறும் வழியறியாது கலங்குகிறான்.

வெற்றி வேல்விழியாளுக்கா அன்றி அவளைக் கெஞ்சி நிற்கும் வாள்வீரனுக்கா? காதற்போரில் வென்றவர் தோற்றார்; தோற்றவர் வென்றார் அன்றோ? தூரத்தே காத்துநிற்கும் தலைவனின் புரவி இந்த வெற்றி தோல்விகளைப்பற்றிக் கவலைப் படவில்லை போலும்!

பத்து ரூபாய் பரிசு பெற்றவர்:

**தி. ரா. பழனி**

**சென்னை.**



# இவன் யார்?

வாணிதாசன்



அக்கா இவன்யார்? அறியாதான் போல
எக்காலும் எவ்விடத்தும் என்னடியைப் பின்பற்றிப்
பக்கம் வருகின்றான்; பார்க்காமல் பார்க்கின்றான்.

ஆணழகன்! காண்போர் அகத்தழகன்! திணிதோளன்!
செக்கச் சிவந்த மேனியான்! சிரிப்பிதழான்!
ஒளிசெய்து நாட்டிற் குயிரளிக்கும் வெய்யோன்!
அளிசெய் விழியான்! ஆக்கம்சேர் மாமழை!
இல்லார்க் களிக்கும் ஈகைக் குணமுடையான்!
நல்லோர் ஒழுக்கம் எல்லாம் உடையான்!

கூத்து முறையுணர்ந்த
குறுமகளிர் ஆட்டம்போல்
பூத்துக் குனிந்தாடும்
பூங்கொம்பை மெல்லத்
தீண்டாது தீண்டிவரும்
தென்னாட்டுப் பூந்தென்றல்!
பழக இனிக்கும்
பழந்தமிழ்ப் பாட்டக்கா!
இன்னோ ரன்ன
இனிய பண்பு
நிறைந்துளா னென்றே
நினைக்கத் தோன்றும்!
அன்னோன் அவன்தன்
ஆண்தகை விட்டு

கருமான் உலைத்தீக் கொழுந்துபோல், இலவன்
பெருமரம் தோட்டத்தில் பூபூக்கப் பூத்தேடிப்
பொருளெல்லாம் தேயப் புதிதாய் ஒருவரிடம்
பொருள்கேட்க நாணும் புதியோன்போல் நிற்கின்ருன்!

இதற்குமுன் வந்தறியாப் பட்டினத்தில் உற்ருர்
புதுக்குடியைத் தேடு வான்போல் தேடி
மதுநாறும் பூச்செடிகள் மனைமுன்னர் ஓர்பால்
ஒதுக்கிடத்தில் ஊமையன்போல் நிற்கின்ருன் அக்கா!

பெற்றதெல்லாம் இந்தப் பெருஉலகிற் கேயளித்து
வற்றி உலர்ந்த ஆறுபோல் நாம்வாழும்
சிற்றூர்த் தெருவு கிடக்க; அத்தெருவில்
பெற்றிழந்தான் போலப் பேசாமல் நிற்கின்ருன்!

குன்றச் சிறுகல் குளம்நீந்தி ஆடல்போல்
கன்றீன்ற நாகு தலைமுழ்கிக் காதாட்ட
ஒன்றிரண்டு கெண்டை ஓடி வருமளவும்
நின்றிருக்கும் கொக்கேபோல் நிற்கின்ருன் அக்கா!

உணவைப் பொதுவாக்கி உண்பிக்கச் செய்யும்
குணமிலா அரசியலார் சீர்கெட்ட கொள்கையால்
பணம்பதுக்கும் செல்வர் வழிபார்க்கும் கள்வன்போல்
மணம்நாறும் சோலை வழிபார்த்து நிற்கின்ருன்!

எனைவளர்த்த பொன்னி
குடிவளர்க்கும் நாட்டில்
மனைதோறும் கிள்ளை
வண்டமிழைப் பாடப்
புனைஇழையார் இசைபயிலும்
பொதுமன்றத் துள்ளே
வினை ஆயும் ஒற்றன்போல்
மெல்லநுழை கின்ருன்!



செந்தமிழர் பூங்கொடிகள்!
மயிலினங்கள்! திங்கள்!
நந்தீன்ற முத்துப்பல்
நகைகாட்டி விளாங்காய்ப்



பந்தாடும் கூடத்துள் வந்துவந்து நின்று
நொந்திளைத்த உளத்தோடு நோக்குகிறான் அக்கா!

வீட்டகத்தில் கெண்டை விழிக்கழகு செய்து
காட்டகத்தில் தோகை கார்கண்டே ஆடல்போல்
நாட்டகத்தில் பெண்கள் நடம்பயிலும் கூடத்துள்
நோட்டம்பார்ப் பான்போல் நுழைகின்றான் அக்கா!

மலைதவழும் கார்! கடலில் மடங்குதிரைக் கூந்தல்
தலைவாரி நூலடுக்கை மார்பகத்தில் தாங்கிக்
கலைவளர்க்கும் கல்லூரிக்(கு) இளம்பிடிகள் போகச்
சிலையாகத் திசைநோக்கி நிற்கின்றான் அக்கா!

வற்றாத நிழற்சாலை வாள்போன்ற கொன்றை.
நெற்றொலிக்கும் மரக்காடு, நீளோடை, பொய்கை,
கற்றார்வாய்ப் பொருள்கேட்கும் பிள்ளையைப்போல் காத்துச்
சுற்றியெனை வந்துவந்து தொடர்கின்றான் அக்கா!

கொடியேறிப் பூத்த கொன்றை அடர்கிளையில்
அடிதப்பி வந்த குயில்தேடி; அக்குயிலைக்
கொடுவில்லும் கையுமாய்க் கூர்ந்தாயும் வேடன்போல்
நெடுஞ்சாரல் வந்துவந்து நிற்கின்றான் அக்கா!

மலைக்காட்டுக் குன்றில் வலைப்பட்ட மான்தப்பி
இலைஅத்திக் காதுயர்த்தி இருள்குன்றம் போய்மறையச்
சிலையேந்தித் தேடிச் செய்வ தறியாது
நிலைகுலைந்து நிற்பான்போல் நிற்கின்றான் அக்கா!

இவன் யார்?

எக்காலும் எவ்விடத்தும் என்னடியைப் பின்பற்றிப்
பக்கம் வருகின்றான்; பார்க்காமல் பார்க்கின்றான்;
பேச நினைக்கின்றான்; பேசியதே இல்லையக்கா!

அறியான்! அடக்க ஒடுக்கமாய் வேறேதோ
குறியுள்ளான் போலக் குனிகிறான்; ஆனாலும்
கடைக்கண்ணால் என்னைக் கண்டுகண் டேதோ
அடைய விரும்புவான் போல
நடம்பயில் கின்றான்; நகைப்புக் குரியானே!!

இலக்கிய விமரிசனம்

# ஆஸ்கார் ஒயில்டு

மு. அண்ணாமலை

ஆஸ்கார் ஒயில்டு ஒருசமயம் ருமேனியப் பெண் ஒருத்தியின் நடனத்திற்குச் சென்றிருந்தார். அவள் ஆடிய நடனங்கள் மிக அழகாக இருந்தன. அந்தக் கவர்ச்சியால் கலையுள்ளம் கிளர்ந்தெழுந்தது. **சலோம்** (*Salome*) என்ற நாடகத்திற்கு வித்துக் கிடைத்தது. புதிதாகத் தாமே கதையொன்றை ஆக்கிக்கொள்ளாமல் பைபிள் கதைகளில் ஒன்றை ஆஸ்கார் பொறுக்கிக் கொண்டார். புதுமெருகு கொடுத்து அதை நாடகமாக்கினார். பழைய கதைகளைப் புதுப் பார்வையோடு அணுகி அவற்றிற்குப் புதுப்பிறப்புக் கொடுக்கும் திறமை ஆஸ்காரிடம் இருந்ததென்பதற்கு இந்நாடகம் ஒரு சான்றாக அமைந்திருக்கிறது. ஆனால் அவர் அத்திறமையை மேலும் வளர்த்துக் கொள்ளவில்லை.

இதே கதையை இவருக்கு முன்னரே பிரஞ்சு ஆசிரியர் **பிளாபர்** என்பவர் **டிஹீராட்** (*De' Herod*) என்ற பெயரோடு நாடகமாக்கியுள்ளார். அதையும் ஆஸ்கார் படித்திருக்கலாம். இரு நாடகத்தினையும் ஒப்பவைத்துக் கண்ட அறிஞர்கள் இரண்டுக்குமிடையே குறிப்பிடத்தக்க வேற்றுமை இருப்பதாகக் கூறுகின்றனர். கதையை அணுகும் முறையிலும் இருவர்க்கும் வேறுபாடுள்ளதெனச் சொல்லுகின்றனர்.

சலோம் என்னும் அழகி இளந் துறவி ஒருவனை விரும்புகிறாள். அவளுடைய விருப்பத்தை அல்லது வெறியை நான் இங்கே 'காதல்' என்ற பெயரால் அழைக்கக் கூடாது. காதல் என்றால் அது 'இராட்சஸ'க் காதல்!

**சலோம்**

அத் துறவியோ அவளை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அவளை இகழ்கிறான். அவளது தாயை இகழ்கிறான். தாயின் ஊழல் மலிந்த உடல் வாழ்வை நகையாடுகிறான் — இருந்தாலும் அவள் அவனையே நாடிச் செல்லுகிறாள்.

அத்துறவியின் வனப்புமிக்க ஒவ்வொரு உறுப்பையும் அவள் பாராட்டி மகிழ்கிறாள். பாராட்டுவதும், பாராட்டி முடிக்கும் தோறும் 'முத்தமிடட்டுமா...' என்று கேட்பதுமான பகுதிகள் நன்றாக இருக்கின்றன. அவன் 'முடியாது' என்று வன்மையாக மறுத்ததும் ஒவ்வொரு உறுப்பையும் இகழத் தொடங்குகிறாள்.

சலோம் ஜுடேவா நாட்டு மன்னனின் வளர்ப்பு மகள். அவ்வரசனது பட்டத்து ராணி ஹுரோடயஸ் எத்தனையோ கைமாறிய பத்தினித் தங்கம். வேறொரு கணவனால் அவளுக்குப் பிறந்த திருச்செல்வம் சலோம் என்பவள்.

"என் மகளை ஏன் இப்படி இமை கொட்டாமல் பார்க்கிறாய்?" என்றாள் ஹுரோடயஸ் தன் கணவனை நோக்கி.

"உன் மகளை ஒருமுறை ஆடச் சொல்; புறாப்போன்ற பாதம் பெயர்த்து அவள் ஆடட்டும்" என்றான் அரசன்.

"அவளை நான் ஆட விடமாட்டேன். நீ அவளை ஏன் வெறித்துப் பார்க்கிறாய்? வா போவோம்"

"அவள் ஆடலைப் பார்க்காமல் இவ்விடத்தைவிட்டு நகரமாட்டேன்"

"அந்தத் துறவி இடையறாது ஏதோ உளறிக்

கொண்டிருக்கிறான்; நீயோ அவளை விழுங்குவதுபோல் பார்த்துக்கொண்டிருக்கிறாய்—என் மகளை ஆடவிடமாட்டேன்''

''சலோம், நீ எதைக் கேட்டாலும் தருகிறேன். இல்லை என்னாமல் தருகிறேன். எனக்காக ஒருமுறை ஆடு...சலோம், ஆடமாட்டாயா? என்னுடைய அரசில் பாதியைத் தருகிறேன். எழுந்து ஆடு'' என்றான் அரசன்.

''நான் ஆடுகிறேன்'' என்று முன்வந்தாள் சலோம். அவ்வாறு அவள் முன் வந்ததில் அர்த்தம் இருந்தது. ஆடினாள்; அவை அழகு பெற்றது.

ஆடி முடித்ததும், அரசன் சலோமை நோக்கி, ''நீ இனி எது வேண்டுமானாலும் கேட்கலாம்'' என்று கூறினான்.

''அந்தத் துறவியின் தலை''

''துறவியின் தலையா...! வேண்டாம். மகா பாவம். அதைமட்டும் கேட்காதே'' என்று பதறினான் அரசன்.

ஆடுமாறு எவ்வளவுதூரம் மன்றாடினானே அவ்வளவு தூரம் பிடிவாதத்தை விடுமாறும் மன்றாடினான். அவள் கேட்கவில்லை. துறவியின் தலை கையில் வரும்வரை சொன்னதையே சொல்லிக்கொண்டிருந்தாள்.

இரத்தம் தோய்ந்த முகத்தைக் கையிலே பிடித்துக்கொண்டு முத்தமிட்டாள்.

ஆம்; முத்தமிட்டாள். இரத்த வாடை வீசியது; இரத்தம் நாவிலே பட்டது. திரும்பியும் முத்தமிட்டாள்.

இந்த வெறியாட்டத்தை அரசனால் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. காவலாளர்களைக் கூவி அவள் தலையைச் சீவி எறியுமாறு ஏவினான்.

* * *

சலோமிடம் அழகிருக்கிறது; அபூர்வமான கலையிருக்கிறது. அதே சமயத்தில் பயங்கரமான நச்சுப்பண்பு பதுங்கியிருக்கிறது. தன்னை விரும்பாதவனின் தலையைக் கொய்து முத்தமிடுகிறாள். அவனுடைய இரத்தச் சேற்றிலே நடமாடுகிறாள். கிடைக்காததை அழித்துவிடுகிறாள். அழகின் உச்சாணிக் கொம்பாக—கலாதேவியாகத் தோன்றிக் கடைசியில் 'வேதாள'மாகக் காட்சி அளிக்கிறாள். உடலாசை, வெறியாக மாறி 'ஊழிக்காலத்தீ' என்பார்களே அதுபோல நிற்கிறது. சலோமின் விடாப்பிடியான வெறிக்குணம் அழகுக்கும் கலைக்கும் மாசுண்டாக்கி விட்டது.

படிப்பவர்களின் அனுதாபம் துறவியின் பக்கம் போய்ச் சார்கிறது. அவனே சோகத் தலைவனாக (*Tragic Hero*) நிற்கிறான். அவனுக்கு முக்கால உணர்வு உண்டென்று கூறப்படுகிறது. கதையின் முக்கியத்துவத்தைப் பெறுபவன் தெய்வ ஆற்றலுள்ளவனாகக் கூறப்படுவதால் 'அற்புத சக்திகள்' வலிவு பெறுகின்றன. அரசன் துறவியைக் கடவுளின் தோற்றமாகவே கருதுகிறான். இது பைபிள் கதையாதலின் இவை எதிர்பார்க்கக் கூடியனவே!

''சாவு தன் இறக்கைகளை விரித்து விரித்து அடித்துக்கொள்கிறது. அந்த ஒலி என் செவியைப் பிளக்கிறது. ஏதோ 'கன்னங்கரேல்' என்ற விகாரமான பறவை தன் இறக்கைகளை விரித்துக்கொண்டு நிற்பதுபோல் உணர்கிறேன்...என் என்னால் அதைச் சரியாகப் பார்க்க முடியவில்லை.

நான் அணிந்திருக்கிற மலர் மாலை நெருப்பு மாலைபோல் கொதிக்கிறதே...

இந்தச் சிவந்த ரோசா இதழ் இரத்தத்தின் அறிகுறியைப் போல் தெரிகிறது...

அதோ சந்திரன், செக்கச் சிவந்து இரத்தம்போல் தோன்றுகிறதே... இந்தத் துறவி சொன்னதெல்லாம் உண்மையாகிவிட்டன.''

இவ்வாறு அரசன் கூறிப் பதறுகிறான். அரசன் வாயிலிருந்து வரும்

சொற்களெல்லாம் பின்னால் நடக்கப் போகும் சோக நிகழ்ச்சியை முன் னோடியாக நின்று உணர்த்துகின் றன. அரசன் பேசும் பேச்சுக்களில் சில கவிதையாகவே முகிழ்க்கின் றன. திங்கள்பற்றிக் கூறுவதொன் றினை இங்கு வைத்துக் காணலாம்.

"இன்றைக்கென்று அந்த வெண் மதிக்குத்தான் என்ன விநோத மான தோற்றம்!

காதலர்களைத் தேடி அலையும் வெறிபிடித்த பெண்போல் அவள் திரிகிறாள்.

நிர்வாணமாக நிற்கிறாள்.

முகிற்கூட்டங்கள் நாணத்தால் அவளுக்கு ஆடை போர்த்துகின் றன. அவளோ அந்த ஆடையைக் கிழித்துக்கொண்டு வெளியேறு கிறாள்.

நின்ற திருமேனி மறைக்காமல் நிற்கிறாள். குடித்தாடும் சிறுக்கி போல நடக்கிறாள். அவள் காத லுக்காக அலைகிறாள்."

இந்த வர்ணனை கதைக் கூட் டோடு தொடர்பு பெறும்போது பன்மடங்கு சுவை தருகிறது.

> வாக்காளர்கள் முட்டாள் களாக இருந்தால், அவர் களால் தேர்ந்தெடுக்கப் பெற்றுச் சட்டசபைக்குச் சென்றவர்கள் அயோக் கியர்களாகத்தான் இருப் பார்கள்.
>
> —பெர்னாட்ஷா
>
> ★
>
> பெண்ணின் காதலைப் போலக் குழந்தையின் அன் பிலும் வாழ்க்கைச் சுவை இருக்கிறது.
>
> —காண்டேகர்

இந் நாடகத்தில் காட்டப்படும் பெண் உள்ளத்தையும் செயலையும் கண்டு நடுங்கவேண்டியிருக்கிறது. கிடைக்காவிட்டால் அழித்துத் துவைத்துவிடவேண்டும் என்ற உணர்ச்சி ஆண்—பெண் என்ற இருபாலாருக்கும் பொதுவானது. பெண்ணுக்கு மட்டும் அந்நினைப் புத் தோன்றும் எனக் கொள்வதற் கில்லை. அவ்வெண்ணம் துளிர்க்கும்; ஆனால் பெரும்பாலும் வெறியாகிச் செயலாகிற அளவுக்கு வளர்ந்து உறுதிபெறும் என்று எதிர்பார்ப்ப தற்கில்லை. பெண் இந்தக் கெட்ட எண்ணத்தை உறுதியாகக்கொண்டு பேய்மாதிரி அலைந்து பழிவாங்கு வாள் என்று நினைப்பது எனக் கென்னவோ சற்று விகாரமாகத் தான் படுகிறது.

கலைஞன் சிற்றுணர்ச்சிக் கோட் டுக்கு உருவம் கொடுத்துப் பெரிது படுத்திக் காட்டியிருக்கிறான். மெல் லியலாரின் சிறிய மனக்கோட்டம் பெரிதுபடுத்தப்பட்டுள்ளது. கலை யுலகப் பூதக் கண்ணாடி அணுவைப் பிரம்மாண்டமாகஆக்கிக்காட்டியிருக் கிறது. ஆனால் உண்மையில் அணு அணுவாகத்தான் இருக்கிறது.

இந்த நாடகத்தை ஆஸ்கார் ஒயில்டு பிரஞ்சு மொழியில் எழுதிப் பாரிஸ் நகரத்திலேயே அரங்கேற்றினார். லார்டு ஆல்பிரட் டுக்ளாஸ் என்பவ ரால் இது பின்னர் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. ஆங்கி லத்தில் புத்தகமாக வெளிவந்ததும் பலர் விருப்புடன் படித்தனர். இதை நடிக்கவிரும்பியபோது அரசாங்கம் தடை உத்தரவு பிறப்பித்தது. நூலுக் குத் தடை விதிக்கவில்லை. நாடகத் திற்கு மட்டுமே தடை விதிக்கப் பட்டது. இதைப்பற்றி ஒருசமயம் ஆஸ்கார், செய்தியாளரிடம் கூற நேர்ந்தபோது, "இதனால் எனக் கொன்றும் அவமானமில்லை. இந்த அரசாங்கம் நாடகக் கலைஞர்களைத் தான் அவமானப்படுத்திவிட்டது. படிக்கலாமாம்; ஆனால் நடிக்கக்

கூடாதாம்! விசித்திரமான போக்கு...!" என்று குறிப்பிட்டாராம்.

* * *

**'நல்ல கணவன்'** (*Ideal Husband*) என்ற நாடகத்தில் ஒரு பெண் தன் கணவனைப்பற்றி மிக உயர்வாக நினைத்து மகிழ்கிறாள். அதில் பெருமிதம் கொள்கிறாள். செல்வத்திலும் நல்ல பதவியிலும் இருக்கும்போது அவளது கணவன் அப்படித்தான் வாழ்கிறான். ஆனால் அவன் எவ்வாறு பெரிய செல்வத்தை ஈட்டினான் என்ற கேள்விதான் அவனது பண்பு நலத்திற்கு ஒரு விளக்கமாக அமைந்தது. இந்த ரகசியத்தை அச்சாகக் கொண்டு கதை சுழல்கிறது. இந்த உண்மையைத் தெரிந்து வைத்திருந்த ஒருவன்—தன் மனைவிக்கு 'அந்த ரகசியம்' தெரிந்து விடக்கூடாதே என்று மறைக்கும் கணவன்—அதை அறியாமல் வாழும் மனைவி—இவர்களை வைத்துக்கொண்டு நாடகம் நடக்கிறது.

**டோரியன்கிரேயின் வண்ணப்படம்** (*The Picture of Dorian Grey*) நாவல் ஆஸ்கார் ஒயில்டின் இலக்கிய ஆக்கத்தில் முதன்மையான இடத்தைப் பெறுகிறது. இந்தப் புத்தகத்தை ஆஸ்கார் எழுதி வெளியிட்டவுடன் இளைஞர்கள் ஆர்வத்துடன் படித்தனர். இதில் உள்ள புரட்சிகரமான எண்ணப்போக்கைக் கண்டு பழமையாளர் வெறுத்தனர்.

இளைஞன் ஒருவன் இந்த நாவலைத் தன் மேசைமீது வைத்திருந்தான். அதை அவனது தந்தை கண்டுவிட்டார். உடனே அவர் தன் பையனைக் கூப்பிட்டுத் துப்பாக்கியைக் கையில் கொடுத்து "என்னைச் சுட்டு விட்டு அப்புறம் இந்த நாவலைப் படி" என்று சொன்னாராம்.

டோரியன் கிரே என்பவன் அழகான இளைஞன். அந்த ஆணழகனின் அழகைக் கண்டு ஓர் ஓவியக் கலைஞன் மயங்குகிறான். அவனைத் தன் கலைக்கூடத்துக்கு அழைத்துச் சென்று படமொன்று வரைந்து முடிக்கிறான்.

அந்தப் படம் மிகக் கவர்ச்சிகரமாக உருவெடுத்தது. அவ்விளைஞனே தன் உருவத்தைக் கண்டு சொக்கிப் போனான். திடீரென்று பெருகிய மகிழ்ச்சி துன்பத்தின் எல்லைக்கோட்டில் போய் நின்றது. அவனது உள்ளத்தில் எழும்பிய ஆனந்தம்_கவலைக்குத் தோற்றுவாயாகச் சென்றது.

எதிர்காலத்தைப்பற்றி எண்ணம் சுழன்றது. "இவ்வளவு அழகாக இருக்கும் நான் என்றும் இப்படியே இருக்கமுடியுமா? ஆண்டு செல்லச் செல்ல முதிர்ந்து, நடை தளர்ந்து, தோல் சுருங்கித் தள்ளாடுவேன்... காலம் என்னை விகாரமாக்கிவிடும்" என்ற நினைப்பு கவலையை உண்டாக்கிவிட்டது

தமிழ் முனிவர்களின் சொற்களிலே சொன்னால் 'யாக்கை நிலையாமை'யை நினைத்து இளைஞன் பயப்படத் தொடங்கினான்.

"நரை முதிர்ந்த கிழவனாவதை நினைத்தால் என்னால் சகிக்கமுடியவில்லை......நான் எப்பொழுதும் இளைஞனாகவே இருக்கவேண்டும். இந்தப் படம் இதே வனப்போடு துலங்கவேண்டும். அப்படியானால் ஒரே ஒருவழி, நான் எல்லாவற்றையும் தியாகம் செய்தாகவேண்டும். என்னையே நான் அர்ப்பணிக்க வேண்டும்." என்று முணுமுணுத்துக் கொண்டான் டோரியன் கிரே.

பணியாட்கள் அவனுடைய அறையில் வந்து பார்த்தபோது கிரே இறந்து கிடந்தான்.

முதுமையின் வாயிலுக்குச் செல்லாமலேயே தப்பித்துக்கொள்ள முடிவு செய்தான். ஒரே வழி—அது இளமையிலே இறந்துவிடுவதுதான்.

முதுமைக்குப் பயந்து புறங்காட்டினவனின் கதைதான் இது. இதை அழகாக ஆஸ்கார் ஒயில்டு எழுதிச் செல்லுகிறார்.

(அடுத்த இதழில் முடியும்)

# பொழுது போக்கு

ராதா

## கல்யாணம் பண்ணிப்பார்

தமிழ்நாட்டில் தொன்று தொட்டு வழங்கிவரும் 'கல்யாணம் பண்ணிப்பார்; வீட்டைக் கட்டிப்பார்' என்ற பழமொழியின் முற்பகுதியைத் தலைப்பாகக் கொண்டு, 'கல்யாணம் பண்ணிப்பார்' என்ற பெயரிலேயே ஒரு படத்தைத் தயாரித்திருக்கிறார்கள் விஜயா புரொடக்ஷன்ஸார். காட்சிக்குக் காட்சி அழுகைக் கட்டங்கள் நிறைந்த அழுமூஞ்சிப் படங்களாக வெளிவந்துகொண்டிருக்கும் இந்நாளிலே அவற்றைப் பார்த்துப் பார்த்து அழுது, நம் கண்கள் வீங்கிச் சிவந்திருக்கும் இச்சமயத்திலே விஜயாவின் 'கல்யாணம் பண்ணிப்பார்' நம் மனத்திற்குச் சற்று ஆறுதலையளிக்கிறது! மருமகள் மாமியாரிடம் கொடுமைப்படவும், காண்போர் உள்ளம் உருகிக் கண்ணீர் விட்டுக் கதறியழவுமான காட்சிகளோ, மாற்றாந்தாய், மூத்தாளின் மகளைக் கொடுமைப்படுத்தும் நிகழ்ச்சிகளோ படத்தில் இல்லை. வில்லன்களின் அட்டகாசங்களோ அன்றி, படத்தில் வரும் கதாபாத்திரங்களை ஒருவர்பின் ஒருவராகச் சாகடித்து ரசிகர்களின் கைகுட்டைகளை நனைக்கச்செய்யும் கட்டங்களோ கிடையவே கிடையாது. ஆரம்ப முதல் கடைசிவரையில் ஒரே சிரிப்புடன் படம் மளமளவென்று செல்லுகிறது! சோகக் கட்டங்களும் இரு தடவை வருகின்றன! ஆனால் நாம் அக்கட்டங்களில் கண்ணீர் விட்டுக் கதறவேண்டிய அவசியமில்லை. பாமர ரஞ்சகமாக, கதையில் குளறுபடி இல்லாமல், ஆபாசமற்ற முறையில் படத்தைத் தயாரித்திருக்கும் விஜயா புரொடக்ஷன்ஸாருக்கும், டைரக்டர் பிரசாத்திற்கும் நம் பாராட்டுதல்கள்.

மொத்தத்திலே கதையைத் துருவிப் பார்த்தால், கதையில் ஒன்றுமே இல்லையென்று தான் சொல்லத் தோன்றும். சாதாரணமான சில நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு, அநுபவமிக்க சில நடிகர்களின் உதவியால் படத்தை வெற்றிகரமாக்கிவிட்டார்கள்!

நம் சமுதாயத்திலே இன்று நடமாடும் திருவுருவங்கள்தான் படத்திலே உலவுகின்றன! பிறர் சுகத்திற்காக எதையும் செய்யத் துணிந்தவரான மாஜி ஜில்லா போர்டு மெம்பரும், பஞ்சாயத்து போர்டு பிரஸிடெண்டுமான தணிகாசலம் வருகிறார்! பிறர்பெண்ணுக்குக் கல்யாணம் ஆகாவிட்டாலும் தன் பெண்ணுக்குக் கல்யாணம் ஆனால் போதும் என்ற சுயநலவாதி கோவிந்தையா வருகின்றார். புராணம் படித்துக்கொண்டே வரதட்சணைக்கும் பேராசைப்படும் வேலாயுதமும் நடமாடுகின்றார்.

நடிப்பிலே தணிகாசலமாக வரும் ரங்கராவின் நடிப்புக்குத்தான் முதல் மார்க்! இயற்கையாக நகைச்சுவையுடன் அமைந்திருக்கிறது இவரின் நடிப்பு. மாஸ்டர் குந்துவின் நடிப்பு மிகையாக இருந்தாலும், இந்தச் சின்ன வயதில் இவ்வளவு அபாரமாக நடிக்கின்றானே என்று ஆச்சரியப்படாதவர் இல்லை! பைத்தியமாக நடிக்கும் போது என். டி. ராமராவின் நடிப்பு நன்றாக, ரசிக்கும்படியாய் இருக்கிறது! வரலக்ஷ்மியின் நடிப்பில் குறைசொல்ல இடமில்லை. மற்ற நடிகர்களும் நன்றாகவே நடித்து நற்பெயரெடுத்திருக்கிறார்கள்.

ராமையதாஸின் வசனங்களில் தமிழ்ச் சொற்கள் இன்னும் அதிகம் இருந்திருக்கலாம். பாடல்களிலும் இக் குறை இருக்கிறது.

படத்திலே, தபால்காரன் தன்னை மறந்து நடனமாடுவது இயற்கையாக இல்லை. செட்டியின் கழுத்திலுள்ள தாலியை அவள் தாய் அறுத்தெறியும் நிகழ்ச்சியைத் தவிர்த்திருக்கலாம்! போலீஸ் உத்தியோகஸ்தர்கள் தங்கள் மேலதிகாரிகளுக்காக ஒருவர்பின் ஒருவராக ஆசனத்தைக் காலி செய்யும் கட்டம் நினைத்துச் சிரிக்க வேண்டியதொன்று!

மொத்தத்தில், விஜயாவின் **'கல்யாணம் பண்ணிப்பார்'** குடும்பத்துடன் சென்று சிரித்துச் சிரித்துப் பார்க்கவேண்டிய ஒரு முழுநீள நகைச்சுவைப் படம்.

## செய்தித் துளிகள்

**'சென்னை அழகி'** என்று தேர்ந்தெடுக்கப்பட்ட சூரியகுமாரிக்கு இப்போது யோகம் அடிக்கத் தொடங்கியுள்ளது! இந்திப் படங்கள் இரண்டில் நடிக்க அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார்!

★★★

'கல்யாணம் பண்ணிப்பார்' என்ற கவர்ச்சிகரமான பெயரில் ஒரு படம் வெளிவந்ததல்லவா? அதேபோல் **'மனம்போல மாங்கல்யம்'** என்று தங்களது அடுத்த படத்திற்குப் பெயரிட்டிருக்கிறார்களாம் நாராயணன் கம்பெனியார். டைரக்டர் பி. புல்லையா.

★★★

ஆர். ஆர். பிக்சர்சார் தங்களின் **'வாழப்பிறந்தவளில்'** ஒரு கிராமிய நடனக் காட்சியைப் புகுத்துவதற்காக, கொஞ்ச நாட்களுக்கு முன் மகர்பலி

புரத்தை முற்றுகையிட்டிருந் தார்களாம், ஏராளமான எக்ஸ்ட்ரா நடிகர்களுடன்! வனப்புமிக்க மகாபுலிபுரக் காட்சிகளெல்லாம் படமாக்கப்பட்டனவாம்!

***

'சின்னத்துரை'யை வெளியே அனுப்பிய மகாலிங்கம், இப்போது எஸ். டி. சுந்தரத்தின் 'உலகத்தில் நாம்', ஆர். ரங்கராஜுவின் 'ராஜேந்திரா' ஆகிய இரு கதைகளைப் படமாக்க முனைந்திருக்கிறாராம்! இரண்டிலும் எஸ். வரலக்ஷ்மி தான் கதாநாயகி என்று இப்போதே கூறி விடுகிறேன்!

***

நேஷனல் பிக்சர்ஸ் 'பராசக்தி'யிலே, புரட்சிக்கவி பாரதிதாசனின் 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்ற கவிதைப் பகுதியைச் சுருக்கி, அதற்கேற்றவாறு ஒரு நடனக் காட்சியைப் புகுத்தலாமா என்று யோசித்து வருகின்றார்களாம் நேஷனல் பிக்சர்ஸ் சொந்தக்காரர்கள்.

***

ரேவதி ஸ்டுடியோவிலே, கிருஷ்ணா பிக்சர்ஸ் 'மருமகளும்,' கஜானனாவின் 'மாமியாரும்' மளமளவென்று வளர்ந்து வருகிறார்களாம். ஆனால் இருவருக்குள்ளும் சண்டை சச்சரவே கிடையாது என்றால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்களா, மாட்டீர்களா?

***

ஏ. வி. எம்மின் சொந்தப்படமான 'பெண்'ணை இந்தியில் 'லட்கி' என்று தயாரித்து வருகிறார்கள்! அதில் கதாநாயகனை நடிப்பதற்குப் பிரபல இந்தி நடிகர் பாரத்பூஷனை வரவழைத்திருக்கிறார்களாம்!

***

வண்ணாரப்பேட்டையில் அமைந்திருக்கும் பாரத் டாக்கீஸ் சென்னை நகரத்துக்குப் புதிதாகக் கிடைத்துள்ள சினிமாத் தியேட்டராகும். 27—8—52 அன்று அமைச்சர் சங்கர ரெட்டியார் இந்த டாக்கீஸைத் திறந்து வைத்தார். அந்நிகழ்ச்சிக்கு நகரப் பிரமுகர்கள் பலரும் வந்திருந்தனர். திரு. டபிள்யூ. கே. சீனிவாசன் அமைச்சரை வரவேற்று வாழ்த்துப் பத்திரம் வழங்கினார். தேனீர் விருந்துக்குப் பின்னர் 'பக்த போதனா' என்ற படம் திரையிடப்பட்டது.

***

'ஆன்' ஆரம்ப விழாவிற்காக சென்னைக்கு வந்திருந்த டைரக்டர் மெஹ்பூப், திலீப் குமார், நிம்மி முதலியவர்களுக்கு,ஒளவையாரில் சிலகாட்சிகளைப் போட்டுக் காட்டினாராம் ஜெமினி வாசன். ஆகவே, ஜெமினி 'ஒளவையார்' இன்னும் இரண்டொரு மாதங்களில் திரையில் காட்சி தருவார் என்று நம்ப இடமிருக்கிறது!

***

லண்டன் வெஸ்ட் எண்டில் சென்ற மாதம் தொடங்கிய 'ஆன்' மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. 'வசூல் குறைந்தால்தானே படத்தை நிறுத்துவதற்கு' என்று அந்தத் தியேட்டரைச் சேர்ந்த ஒருவர் செய்தி நிருபரிடம் கூறினாராம்.



இளமைப்பித்தன்

சூரியன் மலைவாயிலில் விழுந்து கொண்டிருந்தான். துங்கபத்ரா நதியில் வெள்ளம் புரண்டு இருகரைகளையும் தழுவிக்கொண்டிருந்தது. 'ஹோ' என்ற பேரிரைச்சல். பிரம்மாண்டமான சுழல்கள், உள்வளைவு போட்டுச் சீழ்க்கையடித்துக் கொண்டிருக்கின்றன!

ஒரு தோணித்துறை!

ஊர்க்காவல் வேலை பார்க்கும் வீரர்களும், அரண்மனையைச் சேர்ந்த ஒற்றர்களும் படகுகளில் ஏறிக் கண்ணோட்டம் விடுகின்றனர். ஒரு சில படகுகள் கரைக்குவந்து சேர்ந்துவிட்டன.

விஜயநகர சாம்ராஜ்யம், புகழ்வாய்ந்த பல அரசர்களை ஈன்றெடுத்துப் பெருமை பெற்றது. கடைசியாகச் சதாசிவராயன் பட்டத்துக்கு வந்திருக்கிறான். பேருக்கு மட்டும்தான் அவன் மன்னன். மற்றபடி சகல அதிகாரங்களும் ராமராயன் கையில்தான். அவன்தான் சர்வாதிகாரி. ஒவ்வொரு கணமும் மக்கள் உயிருக்காக ஊசலாடிக்கொண்டிருந்தார்கள்.

எந்த நேரத்தில் எதிரிகள் தாக்கப் போகின்றார்களோ என்ற பயம்; பற்றாக்குறைக்கு வெள்ளம் வேறு வந்து பயமுறுத்திக்கொண்டிருக்கிறது.

இந்தச் சமயத்தில் வெள்ளத்தை வேடிக்கை பார்ப்பதற்காக ஏராளமான மக்கள் வந்து கூடியிருந்தார்கள்.

விஜயநகரத்தின் கண்களைப்போல் விளங்கிவந்த ஹம்பி கிராமத்தைச் சேர்ந்த ஒரு வயது முதிர்ந்த சிற்பியும் அங்கே வந்திருந்தான். அவன் பெயர் திம்மண்ணா. நல்ல கம்பீரமான தோற்றம். திரடேறித் தளர்ந்த உடல். தொங்கும் புருவங்களின் கீழே கலை நுணுக்கம் தோய்ந்த கண்கள். பனித்திரை படிந்த மலைச் சிகரம்போல நரைத்த தலை. அந்திக் காலச் சூரிய ஒளி அதன் மேல் விழுந்து பளபளத்துக் கொண்டிருந்

தது. ஒரு மரத்தின்மேல் சாய்ந்து நின்றபடி நுரையுடன் சுழித்தோடும் வெள்ளத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான் அவன்; பக்கத்தில் ஒரு இளைஞன். வலிவும் வனப்பும் பொருந்திய உடல். சிவந்த மேனி. சலனமற்ற முகத்துடன் தோற்றமளித்தான்.

அவனுடைய பிஞ்சு மனமும், 'ஒன்றி'ல் திளைத்து ஒன்றிவிட்டது.

அந்த இளைஞனின் பெயர் கொண்டண்ணு!

அவர்கள் இருவரும் கூட்டத்தை விட்டு விலகித் தனித்திருந்தனர். திம்மன்னுவிடம் வேலை பழகிக் கொள்வதற்காக வந்திருந்தான் அவன்.

"திம்மய்யா?"

கொண்டண்ணுவின் குரலைக் கேட்டுக் கிழவன் அசையவில்லை. ஆனால் வெறுமனே 'ஊம்' கூட்டினான்.

"எங்கே ஞாபகம்? பொழுது போய்விட்டதே; நாம் போகவேண்டாமா?" என்றான் இளைஞன்.

"எங்கே போவது?"

"வீட்டிற்குத்தான். வேறு எங்கே?"

அவனுடைய பதிலைக் கேட்டுத் திம்மன்னு மெதுவாகச் சிரித்துக் கொண்டான். கொண்டண்ணுவின் முதுகை வருடிக்கொண்டே, "நாயனு, வெள்ளத்தைப் பார்க்க உனக்குப் பிடிக்கவில்லையா? அதற்குள் என் அவசரப்படுகிறாய்?" என்றான்

"அங்கே போனாலும் இரண்டு சிலைகளைச் செதுக்கலாம்! இங்கே என்ன இருக்கிறது? வெள்ளம் உள்ளத்தில் கனவுகளையா எழுப்பப் போகிறது?"

"கனவுகளை எழுப்பாது. ஆனால் நனவுகளைக் கொண்டுவந்து சேர்க்கும், நாயனு"

"அதுதான் அப்படியே கல்லாய்ச் சமைந்துவிட்டீர்களோ?"

மறுபடியும் திம்மன்னு சிரித்துக் கொண்டான். அவனுடைய பார்வை திரும்பவும் வெள்ளத்தின் மீது விழுந்து மிதந்தது.

"நாயனு, இதோ இந்தத் துங்கபத்ரா நதியில் போகும் வெள்ளத்தைப் பார்த்தாயா? அதில் என்னென்ன பொருள்கள் சிக்கிச் சுழன்றோடுகின்றன! இப்படித்தான் விஜய நகரமும் ஆகிவிட்டது. மன்னர்கள், வம்சங்கள், ஆட்சி, அதிகாரங்கள் எல்லாம்..." என்று ஏதோ பேசினான் அவன்.

"எல்லாம் என்றால் — நமது தொழில்கூடவா?"

"தொழில்! உன்னுடைய தொழிலைக் கொண்டுபோய்க் குப்பையில் போடு. உளியை வைத்துக்கொண்டு உருவங்களை வடிக்கத்தான் தெரியும் நமக்கு!"

திடீரென்று திம்மன்னு இப்படிப் பேசியது கொண்டண்ணுவுக்கு விந்தையாக இருந்தது. இன்னும் கொஞ்சம் அருகில் நகர்ந்துபோய் உட்கார்ந்துகொண்டு, "என் திம்மய்யா, நமது தொழில் அவ்வளவு கேவலமானதா? வாழ்நாள் முழுவதும் அதிலேயே கிடந்து உழன்ற நீங்கள் கூடவா இப்படி?..." என்று வெறியனைப்போல விழித்துக் கொண்டு கேட்டான்.

"காலவெள்ளத்தின் கொடுமையான அலைகள் கலையையும் சிற்பத்தையும்தான் லட்சியம் செய்யப் போகின்றனவாக்கும்? என்னவோ, ஒரு நாடகம்!"

"கலை, கல்லில் கிழித்த கோடு மாதிரி என்று நேற்றுச் சொன்னீர்களே?"

"ஆமாம்! அதனுடைய மூலதத்துவம் உனக்கு இப்பொழுது புரியாது; புரிந்து கொள்ளவும் முடியாது! அதற்கெல்லாம் வயசு வேணும்! புறப்படு, போகலாம்."

இருவரும் கரையைவிட்டுக் கீழே இறங்கி நடந்து சென்றனர்.

அடுத்தடுத்துள்ள நகர மண்டபங்களிலெல்லாம் விளக்குகளும், தீப்பந்தங்களும் ஒளிவீசி எரிய ஆரம்பித்துவிட்டன. ஆயுதம் தாங்கிய வீரர்கள், குதிரைகளின்மீது அமர்ந்து அங்குமிங்குமாகப் போய் வந்துகொண்டிருந்தார்கள். கொண்டண்ணு மௌனமாகத் திம்மன்ன‌ுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடந்துகொண்டிருந்தான். நதிக்கரையில், கேட்ட வார்த்தைகள், அவனுடைய மனத்தைவிட்டு மறையவே இல்லை.

'உன்னுடைய தொழிலைக் கொண்டுபோய்க் குப்பையில் போடு. உளியை வைத்துக்கொண்டு உருவங்களை வடிக்கத்தான் தெரியும் நமக்கு!'

எவ்வளவு அழுத்தமான சொற்கள்!

அதுவும் குருவின் வாயிலிருந்து உதிர்ந்தவை!

'ஏன்? அவருடைய இதயத்தில் தீக்கனவுகள் தோன்றினவோ? ஒவ்வொரு சொல்லும் நெருப்பாய்ச் சுட்டதே!' கலையார்வம் நிரம்பிய அவன் மனம் தகித்தது.

எதிரே, யாரோ ஒரு அழகான பெண் குறுக்கே நடந்து போனாள். மதிப்பிட முடியாத வனப்பு. அதைக் கூட அவன் தலைநிமிர்ந்து பார்க்கவில்லை; ரசிக்கவில்லை.

இருவரும் ஒரு வீட்டு வாசற்படியில் போய் ஏறினர். அது, அந்தக் காலத்தில் அரண்மனையில் திம்மன்னுவுடன் வேலைபார்த்து வந்த ஒரு சிற்பியின் வீடு.

நன்றாக இருட்டிவிட்டதால், அந்த வீட்டு வாசலில் பெரிய அகல் விளக்கு ஒன்று ஏற்றிவைக்கப்பட்டிருந்தது.

"வேங்கடாத்திரி"

திம்மன்னு உரத்த குரலில் கூப்பிட்டான்.

நடுத்தர வயதுள்ள ஒரு மனிதர் வந்து திம்மன்னுவைத் தோளில் கைபோட்டு உள்ளே அழைத்துக் கொண்டு போனார். கூடவே, கொண்டண்ணுவும் சென்றான்.

பழங்கால நட்பு, அவர்களிடையே சொற்களாகவும், சிரிப்புக்களாகவும் குலுங்கிக்கொண்டிருந்தது. ஒரு பெண் வந்து திம்மன்னுவின் பாதங்களைத் தொட்டு வணங்கினாள்.

"சௌக்கியமா, மல்லம்மா?" என்று கேட்டான் திம்மன்னு.

"தாத்தாவின் ஆசீர்வாதத்தினால் சுகம்தான்" என்றாள் அவள். குறுகுறுப்பான கண்கள் நிலத்தை நோக்கியபடி இருந்தன.

"தாத்தாவுக்குச் சாப்பாடு தயார் செய்யம்மா" என்றார் வேங்கடாத்ரி.

"ஆகட்டும், நாயனா."

கொண்டண்ணு குனிந்த தலை நிமிராமல் உட்கார்ந்திருந்தான் வேங்கடாத்திரியின் பார்வை அவன் மேல் விழுந்தது.

"தம்பையா யாரு?"

"என்னுடைய சுவீகாரம்! சொத்துகளுக்கு அல்ல, சுத்தியலுக்கும் உளிக்கும்."

'கொல்'லென்ற சிரிப்பு!

"ஓ! உன்னுடைய சிருஷ்டி சக்தி, எனக்குத் தெரியாததா? நீதான் கல்லைக் கடவுளாக்கி விடுகிறவனாயிற்றே!"

"அங்கே மட்டும் என்னவாம்?"

"உளியின் கூர் மழுங்கிவிட்டது, திம்மன்னு."

"அதெல்லாம் அந்தக் காலம்! கடைசியாக நான் கண்ட கனவுகளெல்லாம் ஒன்றாய்க் குவிந்து நின்றுவிட்டதைத்தான் பார்த்தாயே! அது போதும்! இது கிருஷ்ணதேவராயருடைய காலம் அல்ல. ராமராயனுடைய ராச்சியம். போதும், போதும் நரக வேதனை!"

"ஏன்? நீ நினைத்தால் சொர்க்கத்தின் சுகத்தைக்கூட அனுபவிக்கலாமே!"

"சேச்சே! நீ ஒரு பைத்தியக்காரனடா!"

"அந்த உலகத்தில்தானே நமக்கு இடம்"

"உண்மைதான்! இல்லாவிட்டால் உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டுப் பாறைத் துண்டங்களுடன் போராட்டம் நடத்தியிருப்போமா?"

"சரி சரி, வா, சாப்பிட்டபிறகு பேசலாம்."

வேங்கடாத்திரிஎழுந்தான்.கூடவே திம்மன்னுவும் எழுந்து கொண்டண்ணு பக்கம் திரும்பி "கூச்சப்படாதே, நாயனு. இதுவும் நம் வீடுதான்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தான்.

கொண்டண்ணுவின் மனத்தில் கொஞ்சம் கலகலப்பு ஏற்பட்டது.

★

மூவரும் இராச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு முற்றத்தில் வந்து அமர்ந்தனர். நிலா வெளிச்சம் 'பளிச்'சென்று அங்கே விழுந்து கொண்டிருந்தது. வேங்கடாத்திரி, திம்மன்னுவைப் பார்த்து, "ஹம்பியில் ஏதாவது விசேஷம் உண்டா?" என்று கேட்டான்.

திம்மன்னு வெறிபிடித்தவன் மாதிரிச் சிரித்துவிட்டு "அங்கே என்ன இருக்கிறது? அந்த இடத்தைவிட உன் வீட்டு முற்றமே எனக்குச் சாந்தியைத் தருகிறது" என்றான்.

"ஏன்? கலைக்கூடம் இருக்கிறதே"

"இல்லாமல் என்ன? அது இருப்பதைக் காட்டிலும் இல்லாமலிருந்தால்."

"நம்முடைய மூதாதைகளின் கனவுகள் பூத்துக் குலுங்கிய இடம் அல்லவா அது?"

"உண்மைதான்! அதற்காக நான் சாவதா? வேங்கடாத்ரி, இந்த அர்த்தமற்ற ஆட்சியில் கலைக்கு இடம் ஏது? எல்லாம் ஒரு நாளைக்கு அழியத்தான் போகின்றன."

"நம்முடைய சக்தியின் பலத்தை மறந்துவிடாதே. அது சாமான்யமானது அல்ல. பிரம்மா கூடநமக்கு அடுத்தபடிதான். நினைத்த மாத்திரத்தில் எதையும் நாம் சிருஷ்டித்துவிட முடியும்."

"உன் சிருஷ்டி! ஹஹ்ஹ ஹா......உன் சிருஷ்டி... போடா போ! உனக்கும்



மூளை கெட்டுவிட்டது. உனக்கு மட்டும் என்ன? எல்லாருக்கும்தான். முன்பு—'பம்பாவதி' கோயிலில் ஞாபகம் இருக்கிறதா? சபா மண்டபத்தில் செதுக்கிவைத்தாயே, அந்தச் சிற்பம்—'திருப்பாற்கடல் மோகினி' அதை இப்பொழுது போய்ப் பார். முகத்தில் மூக்கு இல்லை; அமுத கலசம் ஏந்திக்கொண்டிருந்த கரங்களை எவனோ உடைத்தெறிந்து விட்டான்—வெறிபிடித்த பயல்! அதைப்பற்றி யார் கவலைப்பட்டார்கள்? அது மட்டுமா? தேவ கணங்களுக்கும் அசுர கணங்களுக்குங்கூட வித்தியாசம் தெரியவில்லை. எல்லாம் பின்னப்பட்டுப் போய்விட்டன. அவ்வளவு கோரம்!''



வேங்கடாத்திரி மௌனமாக இருந்தான். திம்மன்னாவின் சொற்கள் அவனுக்கு 'நியாயம்' என்றே பட்டன. அவனுடைய முகத்தில் விழுந்த சோகரேகைகள் நிலவொளியில் கறுங்கோடுகள் போன்று நிழலாடின.

சற்று நேரம்வரை, அங்கே அமைதி நிலவியது. பிரளய காலத்திற்கு முன்பு தோன்றுமே அந்த மாதிரி அமைதி. கொண்டண்ணாமட்டும் ஆழ்ந்த பெருமூச்சு ஒன்றை விட்டு, அங்கே படர்ந்திருந்த அமைதியில் ஒரு சலனத்தை எற்படுத்தினான். எதிர்காலத்தைப்பற்றிய எக்கமோ என்னவோ?

அன்று இரவு முழுவதும் ஒருவருக்குக்கூடத் தூக்கம் பிடிக்கவில்லை.

உள்ளங்களிலே ஊழிக் கூத்து!

★

'பலப்பல'வென்று பொழுது புலரும் வேளையில் வேங்கடாத்திரியிடமிருந்து விடை பெற்றுக்கொண்டு திம்மன்னாவும் கொண்டண்ணாவும் புறப்பட்டார்கள்.

சாளரத்தின் பின்னல் தொங்கிக் கொண்டிருந்த ஒரு திரை காற்றில் விலகியது. அங்கே மல்லம்மா நின்றுகொண்டிருந்தாள். உதய கால சுந்தரியின் எழில் அவளுடைய முகத்தில் வந்து படிந்திருந்தது.

கண்களிலிருந்து இரண்டு துளிக் கண்ணீர் வடிந்தது. கொண்டண்ணு வின் மனதில் உதிர வெள்ளம்.

அவர்கள் இருவரும் தென் திசையை நோக்கி நடந்து மறைந் தார்கள்.

★

ஹம்பி கிராமத்தில், திம்மன்னுவின் கலமான வீடு. அந்த வீட்டு வாசலில் ஒரு நாகலிங்க மரம். அதன் நிழ வில் கொண்டண்ணு தொழிலில் ஈடுபட்டிருக்கிறுன். அதற்குப் பக் கத்தில் ஒரு பழைய கயிற்றுக் கட்டி வின்மேல் திம்மன்னு மல்லாந்து படுத்துக்கொண்டு வானத்தைப் பார்த்தபடி சிந்தனையில் மூழ்கி யிருக் கிறுன்.

அன்னை 'பவதாரிணி'யின் அங்க அமைப்புகளின் அழகை அவனு டைய உதடுகள் முணுமுணுக்கின் றன.

உளியின் 'கல் கல்' என்ற ஒலி இடைவிடாது கேட்கிறது. கொண் டண்ணு இலட்சியத்தின் பிரதிபிம்ப மாக உருமாறி நிற்கிறுன்.

சிற்பம் அரையுங் குறையுமாக உருப்பெற்று வளர்ந்துவிட்டது. இன்னும் இரண்டே நாட்களில் அது பூர்த்தியாகிவிடும்.

புழுதிப்படலத்தைக் கிளப்பிவிட்ட படி இரண்டு மூன்று குதிரைகள் திம்மன்னுவின் வீட்டு வாசற்படியில் வந்து நின்றன. திம்மன்னு எழுந்து நின்று வணங்கினன். மனப்பூர்வ மான பணிவு இல்லை—ஏதோ ஒரு சம்பிரதாயம்!

வந்தவன் வேறு யாரும் அல்ல; விஜயநகர சாம்ராஜ்யத்தின் சர்வாதி காரி ராமராயன். கொடுமையும் குரூரமும் குழம்பிய உருவம்!

"உன்னுடைய பெயர் என்ன?" ராமராயன் அதிகார தோரணை யில் கேட்டான்.

"திம்மன்னு"

"அதோ நிற்கிறுனே, அவன் உன் னுடைய மகனு?"

திம்மன்னு தலையசைத்தான். அதற்குள் இரண்டுவிதமான அர்த் தங்கள் மறைந்துகிடந்தன.

"சிற்பத் தொழிலா?"

"ஆமாம்"

ராமராயன் குதிரையை விட்டுக் கீழே இறங்கி, அன்னை பவதாரிணி யின் அருகே சென்றுன். அவ னுடைய கண்களில் ஒரு மின்னெளி; அதன்பிறகு வழக்கமான இருள்! கொண்டண்ணு, ராமராயனுடைய கண்களையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான்.

கண்கள்! அன்னையின் கரத்தில் விடப்போகும் அசுரனுடைய முகத் தில் இதே மாதிரியான கண்களைப் பதித்தால் என்ன? அந்த விழிகளின் அமைப்பே விசித்திரமாயிருக்கிறதே! செக்கர் வானத்தின் செம்படுதா மாதிரி!

என்னவோ ஒரு புதிய தத்துவத் தைக் கண்டுபிடித்துவிட்டவனைப் போல, கொண்டண்ணு தவியாய்த் தவித்தான். கலையுணர்ச்சி அவனை முறுக்கிப் பிழிந்தது.

ராமராயன் சாவதானமாகத் திம் மன்னுவிடம் "இதுதான் உங்க ளுடைய கடைசி சிருஷ்டி!" என் றுன்.

இடிவிழுந்ததைப் போலிருந்தது அவர்களுக்கு; அவன் சொன்ன வார்த்தைகளின் கருத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

திம்மன்னுவின் தளர்ந்துபோன தசைகள் முழுவதும் இறுகிவிட்டன. நரம்புகள் எல்லாம் ஒன்றை யொன்று பின்னின.

'கடைசி சிருஷ்டி!'

'எனக்குக் கடைசி சிருஷ்டி யென்று ராமராயன் கட்டளையிட் டால், இந்த உலகத்துக்கும் கடைசி சிருஷ்டிதான் இது. ஆனல் அவன் கூறியதின் பொருள்?'—திம்மன்னு

வின் சிந்தனை இழைபிரிந்து ஓட ஆரம்பித்தது.

ராமராயன் என்ன கல்லா, மரமா? அவனும் மனிதன்தானே! திம்மன்னாவின் தயக்கத்தை நொடியில் அறிந்துகொண்டுவிட்டான். "நமது படைக்கு ஆட்கள் தேவை. எல்லா வசதிகளும் செய்து தரப்படும். நாளையிலிருந்து ஒவ்வொரு மனிதனும்—எந்தத் தொழில் செய்கிறவனாயிருந்த போதிலும் சரிதான், வயதைப்பற்றியும் கவலையில்லை—ஒரு போர்வீரனாக வேண்டும்" என்று சொன்னான்.

திம்மன்னா, கொண்டண்ணாவைத் திரும்பிப் பார்த்தான். சிறிதுநேரம் கழித்து "சரி, சம்மதம்" என்று கூறினான்.

ராமராயனுடைய முகத்தில் பெருமிதம் கொடியோடி மறைந்தது. திம்மன்னாவின் முதுகைத் தட்டிக் கொடுத்துவிட்டுக் குதிரைமீது ஏறி அமர்ந்தான்.

மறுபடியும் புழுதிப்படலம்!

★

அன்றிரவு முழு நிலா.

நாகலிங்க மரத்தடி இருளோடிக் கிடந்தது. திம்மன்னாவும் கொண்டண்ணாவும் அங்கே உட்கார்ந்திருந்தார்கள். திம்மன்னா பித்துப் பிடித்தவனைப்போல இருந்தான்.

கடைசிசிருஷ்டியான அன்னையின் உருவம் அருகே நின்றுகொண்டிருந்தது. அதன்மீது ஒளியும் நிழலும் கலந்த வரிக்கோடுகள் கோலமிட்டுக் கொண்டிருந்தன; எலும்புக் கூடு மாதிரி பார்ப்பதற்கே என்னவோ போலிருந்தது.

திம்மன்னா, கொண்டண்ணாவை அருகில் இழுத்து வைத்துக்கொண்டு பேசினான்:

"நாயனா, நாட்டைக் காப்பற்றக் கூடிய பொறுப்பை நான் உணராமல் இல்லை. இருந்தாலும் நான்...நான் ஒரு விதத்தில் பார்க்கப்போனால் தொண்டுகிழவன். கடமை யுணர்ச்சி என்னை வந்து தீண்டினாலும், கலையுணர்ச்சி அதை வந்து மறைக்கிறது. கத்தி பிடித்துச் சாதிக்கவேண்டியது ஒன்றும் இல்லை. யாருக்காக யார் சண்டையிடுவது? என்னுடைய பார்வையில்—என், நம்முடைய பார்வையில்—எல்லோரும் சமம்! கலையின் ஒளியில் மனித குலமே மூழ்கிக் கிடப்பதைப்போலத் தோன்றுகிறது. போர் என்பது உணர்ச்சி—வெறியர்களின் அர்த்தமற்ற கூக்குரல். இதை நான் விரும்பவில்லை...எனவே..."

திம்மன்னாவின் கண்களிலிருந்து கண்ணீர் சாரை சாரையாக வடிய ஆரம்பித்தது. மேலே அவனால் ஒன்றும் பேச முடியவில்லை.

கொண்டண்ணாவின் தலைமேல் இரண்டு கைகளையும் வைத்து ஆசி கூறினான்.




ராமு: (வழியில் கிடக்கும் ஒரு சிகரெட்டைக் காட்டி) கோபு, இது உன்னுடையதா?

கோபு: (சிரித்துக்கொண்டே) ஊஹூம்; இது என்னுடையதல்ல; ஏனென்றால் நீதானே இதை முதலில் பார்த்தாய்...!

கணக்கற்ற சிற்பங்களை வடித்தெடுத்த அவனுடைய விரல்களில் ஏற்பட்ட நடுக்கம், கொண்டண்ணாவினுடைய உடம்பு முழுமையும் ஊடுருவிப் பாய்ந்தது.

திம்மன்னாவின் கால்களைக் கெட்டியாகக் கட்டிப் பிடித்துக்கொண்டான் அவன்.

உலகமே இருள் மயமாகத் தோன்றியது!

திம்மன்னாவின் தோளின்மேல் ஒரு பழைய தோல் பை தொங்கிக் கொண்டிருந்தது.

அவனுடைய 'சொத்து' எல்லாம் அதற்குள்தான் அடக்கம். பிரயாணத்துக்குத் தயாராகி விட்டான்.

"நீங்கள் இல்லாத இடம் எனக்குப் பாழ்வெளியாகத் தோன்றுமே, திம்மய்யா! நானும் உங்களுடன் கூட வந்துவிடுகிறேன்" — கொண்டண்ணாவின் குரலில் பிடிவாதம் சிலிர்த்து நின்றது.

"இல்லை! நீ இங்கேயே — இந்த நாட்டிலேயே இரு. உன்னுடைய திறமையை நான் நன்றாக அறிவேன். அது இன்னும் செழித்தோங்கி வளரவேண்டும் என்பது தான் என்னுடைய ஆசை"

"நீங்கள் எங்கே போவதாக உத்தேசம்?"

திம்மன்னா சற்றுநேரம் பேசாமலிருந்தான். எதிர்காலத்தில் நிகழப் போகும் சம்பவங்களை யெல்லாம் அவனுடைய மனத்தராசு எடை போட்டுப் பார்த்துக்கொண்டிருந்தது.

"நாயனா, கலைகளுக்குத் தாயகமாக விளங்கும் ஒரு நாடு இருக்கிறது. அங்கே, இரத்தவெறி பிடித்தலையும் பேய்களை யாரும் காண முடியாது. வாழ்க்கையுடன், கலையையும் ஒன்றாக இணைத்து வாழத் தெரிந்த மக்களே அங்கு இருக்கிறார்கள். அந்த அற்புதமான சொர்க்கத்தை நோக்கிப் போகிறேன். என்னுடைய எஞ்சிய வாழ்நாட்களை நிம்மதியாகக் கழிக்க ஏற்ற இடமும் அதுதான்."

திம்மன்னா, சோகம் தோய்ந்த முகத்துடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

கொண்டண்ணாவின் இருதயம் பிளந்துவிடும்போல் இருந்தது!

கிழச் சிற்பியான திம்மன்னாவின் கால்கள் விரைவுடன் நடைபோட ஆரம்பித்தன.

ஒரு பெரிய மண்மேட்டின் மீது ஏறி நின்று திரும்பிப் பார்த்தான்.

நிலாவெளிச்சத்தில் ஹம்பி கிராமத்தின் கலைக்கோயில்களெல்லாம் மௌனமாகத் தலைநிமிர்ந்து நின்றுகொண்டிருந்தன.

வானத்திலிருந்து ஒரு நட்சத்திரம் நிலைபெயர்ந்து கீழேவிழுந்தது!

திம்மன்னா ஆழ்ந்த பெருமூச்சு விட்டான்!

எங்கோ ஒரு கோட்டான் பயங்கரமாக அலறியது.

தமிழ்நாட்டை நோக்கிப் போகும் சாலையின்மீது, திம்மன்னா நடந்துகொண்டிருந்தான்.

★

தலைக்கோட்டையில் போர் மூண்டு விட்டது. எதிரிகள் முழுப் பலத்துடன் தாக்க ஆரம்பித்து விட்டார்கள். யுத்த களத்தில் இரத்த வெள்ளம் பொங்கிப் பொங்கி வடிகிறது.

சாம்ராஜ்யத்தின் தலைவிதியை நிச்சயமாக நிர்ணயிக்க முடியவில்லை.

> உலகத்தில் என்றும் அழியாத இரண்டு உண்மைகள் இருக்கின்றன — காதலும் சாதலும்! காதல், சாதலை வெல்வதனால்தான், ஓயாமல் தீயைக் கக்கும் இந்த உலகத்திலே மனிதன் வாழ்ந்தும், போராடியும், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையோடு ஆனந்த கீதம் பாடியும் முன்னேறுகிறான்.
>
> —காண்டேகர்

நூலிழையில், ஊசலாடிக்கொண்டிருக்கிறது புகழ்!

போர்க்களத்தில் ராமராயன், புயல்போலச் சுழல்கிறான்; புலிபோல உறுமுகிறான்; எரிமலையின் குமுறலாக மாறிவிட்டான்! அவனுடைய இரத்தத்தில், உக்கிரமும் வெறியும் கொந்தளித்து அலைமோதுகின்றன!

தொலைவில், ஆயுதபாணியாக ஒரு இளைஞன்! கையில் கொடுவாள் மின்னுகிறது. அதன் முனையில் இரத்தக் குழம்பு உறைந்து போயிருக்கிறது.

அவன்தான் கொண்டண்ணா!

அவனுடைய கண்கள் அவ்வளவு கூட்டத்தையும் துளைத்துக்கொண்டு ராமராயன்மேல் அடிக்கடி வந்து பாய்கின்றன.

சிறிது நேரத்திற்கெல்லாம் கடல் பொங்கி எழுகின்ற மாதிரி ஓர் பேரிரைச்சல் வான முகடு வரையில் எறுகிறது.

ராமராயன், கீழே பிணமாகச் சாய்ந்துவிட்டான். இது நடப்பதற்கு முன்பே மன்னனான சதாசிவராயன் எல்லைகடந்து மறைந்தோடி விட்டான்!

தலைவனற்ற படைகள் சிதறிச் சின்னாபின்ன மாகின. 'வெற்றிக் கொடி,' எதிரிகளின் கூட்டத்துக்கு நடுவே உயர்ந்தாடியது. கொண்டண்ணா, வெறிபிடித்த மனத்துடன் ஓடிவந்து பார்த்தான். அவனுடைய காலடியில் ராமராயனுடைய சடலம் வீழ்ந்து கிடந்தது.

'கண்கள்! கண்கள்!......அன்னை பவதாரிணியின் வரப்பிரசாதம்'-ராமராயனுடைய கொடுமை நிறைந்த கண்களை, வாளின் நுனியால் பெயர்த்தெடுத்துக்கொண்டு ஓடினான்.

அவனுடைய இருதயத்தில் பேய்ச் சிரிப்புப் பொங்கி வழிந்துகொண்டிருந்தது!

கொண்டண்ணா, ஹம்பி கிராமத்தின் மண்ணை மிதிப்பதற்கு முன்பே, எதிரிகள் மூர்க்கத் தனமாய் அங்கே புகுந்து 'கலைக்கோயில்'களை எல்லாம் இடித்துத் தகர்த்துத் தரை மட்டமாக்கி விட்டார்கள்

அந்த இடிபாடுகளுக்கிடையே அவன் தான் சிருஷ்டித்த சிலையைக் கண்டுபிடித்து விட்டான்! பூர்த்தியாகாத—அந்தச் சிலையின் காலடியில் கொண்டண்ணா வீழ்ந்தான்! நெஞ்சுக் கூட்டுக்குள் எலும்புகள் முறிகிற மாதிரி ஏதோ ஒரு சப்தம்!

அவனுடைய கண்களுக்கு, மல்லம்மாவின் முகமும், திம்மன்னாவின் முகமும் மின்வெட்டும் நேரத்தில் தோன்றி மறைகின்றன.

பிறகு—?

ஹம்பியின் பாழோடு பாழாய் அவனும் ஒன்றிவிட்டான். அதே வேளையில், தமிழ்நாட்டுக் கோயில் ஒன்றில், திம்மன்னா, கொண்டண்ணாவைப்போல் ஓர் உருவத்தைக் கல்லில் செதுக்கி அழகுபார்த்துக் கொண்டிருந்தான்!



"கடைக்காரரே, இந்த ஓட்டைப் பேனாவைக் கொடுத்து என்னை ஏமாற்றத்தானே பார்த்தீர்கள்?"

"அப்படியொன்றுமில்லை, தம்பி. உன்னிடம் இதுபோல ஒன்றே ஒன்றுதானே இருக்கும். என்னிடமோ இதுபோல நிறைய இருக்கிறது ... அதற்காகத்தான் ..."



# ஒற்றை ரோஜா

எஸ். ஆறுமுகம்

மூன்றாம் அத்தியாயம்

## நிசந்தானோ, சொப்பனமோ!

"ராஜா, உன்னிடம் ஒரு விஷயம்கேட்க வேண்டுமென்றிருந்தேன். இன்றைக்கு ஒரு பெண்ணைப்பற்றிய தகவல் கிடைத்திருக்கிறது. போன வருஷம் காலேஜ் விழாவில் நீ பெற்ற பரிசுகளைக் கண்டு அந்தப் பெண்ணின் அப்பா உன்னையே தன் மருமகனாக ஆக்கிக் கொள்ள விரும்புகிறார். உன் சம்மதம் சொல்; வரவழைக்கிறேன். பெண்ணைப் பார்க்கலாம். மனம் பொருந்தும் சம்பந்தம். மனம் பொருந்திச் சொல் முடிவை, ராஜா...."

தாய், பெற்ற பிள்ளையிடம் வேண்டும் விண்ணப்பத்தில் இழையோடி நிற்கும் அன்பு வெள்ளம், பாசப் பிரளயம் எல்லாம் மங்களம் தன் மைத்துனனிடம் பேசிய பேச்சுக்களில் பேசாத பேச்சாகத் தடம் பதிந்திருந்தன.

அமர்ந்தது அமர்ந்தவாறே உட்கார்ந்திருந்த ராஜேந்திரனின் சிந்தனைப் புள் விரிந்த ககனவெளியில் பாதை வகுத்து, பண் இசைத்துப் பாடிப் பறந்தோடியது, எங்கோ ஓர் துருவத்தை நோக்கி, எதையோ ஒன்றை மையமிட்டு, ஏதோ ஓர் விளிம்பில் நின்றவாறு.

அவன் அறிவான்.

அவள் அறிவாளா?

ஆனல்........

அந்தத் துருவம்—மையம்—விளிம்பு....!

அண்ணி சொல்லி முடித்த யாரோ ஓர் பெண்ணின் புள்ளி விவரங்கள்பற்றி ராஜேந்திரன் அக்கரைப் படவில்லை; ஆதுரப்பட வில்லை. அவன் உள்ளம், சூழ்நிலை அப்படி அமைக்கப் பட்டிருந்தது.

காலத்தின் தேய்வில் கைகோர்த்தோடின நிமிஷங்களும், விஞடிகளும். ஆனல் அந்த ஒவ்வொரு விஞடியும், ஒவ்வொரு நிமிஷமும் அவன் நெஞ்சத்திலே நீக்கமற நிறைந்திருந்தவள் மல்லிகா ஒருத்தியே! இந்நிலையில் மங்களம் அறிவித்த யாரோ ஒரு பெண்ணைப் பற்றிய சிந்தனை அவனுக்கு எப்படி மூளையில் இடம்பெறமுடியும்?

உதிர்த்த கேள்விக்கு உதிரும் அவன் பதில் வேண்டிக் காத்திருந்த மங்களத்தின் பார்வை முழுதும் ராஜேந்திரன் பேரில் மொய்த்துவிட்டிருந்தது. அவன் முகம் அப்பொழுது மாறிக் காண்பித்தது.

பொறிதட்டும் நேரம் வசமிழந்தான் அவன்.

பொறிதட்டும் நேரம் தன்ணுணர்வு பெற்றான் அவன்.

தந்திரம் கதிர் விரிந்தது. வெட்கம் விலகியது. தைரியம் துணைசேர்ந்தது. வார்த்தைகள் உருப்பெற்றன; கருநிலை மாறியது. சொல்லடுக்குப் பிறந்தது. ஆரம்பமும் முடிவும் 'தத்துப் பித்' தென்று அமையவில்லை. அவன் நெஞ்சில் நிறைவு இடங்கண்டது.

"அண்ணி, உங்களிடம் வாங்கிப் போனேனல்லவா அந்தப் புத்தகத்தில் ஒரு போட்டோ இருந்ததே, அந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?"

மங்களம் இதழ்பிரித்துப் புன்னகையைப் பிரித்து விட்டவளாக, "ராஜா, உனக்கு மல்லிகாவைத் தெரியுமா?" என்று கேட்டாள். அதைக்கேட்ட ராஜேந்திரனுக்கு மனத்தில் 'திக்'கென்றது வியப்பின் வழியில் திசைமாறிய எதிர்பாராத அவளது கேள்வியினல்.

அவன் இன்ன பதில் கூறுவதென்று யோசிப்பதற்குள் அவளே மறுபடியும் கேள்விக் குறிப்பின் அடுத்த எண்ணில் கண்ட மற்ருெரு விஞவையும் விடுத்துவிட்டாள்.

"ராஜேந்திரா, மல்லிகா தானே உன் இதயராணி?"

அவன் முகத்தில் நாணம் எழுதி ஒட்டியிருந்தது.

'இதய ராணி!'

உச்சரித்த இதழ்கள் புதுமணம் எய்தின.

'நிசந்தானே, சொப்பனமோ!' என்றிருந்தது



ராஜேந்திரனுக்கு, எதிர்பாராத சந்தர்ப்பங்களில் எதிர்பார்த்த நிகழ்ச்சிகள் நடக்கையில் மனம் அடையும் மகிழ்ச்சியின் நிறைபோல.

"ராஜா, நீ ஆச்சரியப்படுவாய். சற்றுமுன் உன்னிடம் சொன்னதெல்லாம் மல்லிகாவைப்பற்றித்தான். அவளை ஏற்கனவே எனக்குத் தெரியும். இதுவரை ஹைதராபாத் பக்கம் வேலையில் அகப்பட்டுக் கொண்டார்களாம். உன் சகோதரர் கல்யாணத்தைப் பற்றிப் பேச்செடுத்த அன்றே உன் டைரியைப் பார்க்க நேரிட்டது. அதில் மல்லிகாவின் போட்டோவிற்குக் கீழே 'இதயராணி' என்று எழுதியிருந்தாய். உடனே அன்றைக்கே மல்லிகாவுக்கு எழுதினேன். உன்னையே பதியாக அடையவேண்டுமெனக் கொண்டிருக்கும் தன் நெடுநாளையக் கனவை வெளியிட்டிருந்தாள் அவள். ஒன்றுபட்ட உள்ளங்கள் ஒரே துருவ மையத்தில் சுற்றி வருவதென்பது மிக அபூர்வம். இருமனமும் ஒன்றாக வாய்ப்பு இருப்பதறிந்தேன். இதை மனத்தில் கொண்டுதான் உன்னிடம் அன்று முதலில் பேச்சைத் தொடர்ந்தேன். நீயும் அவளை விரும்புகிறாயா என்பதை அறியவே நேற்று அவள் போட்டோவையும் வேண்டுமென்று அந்தப் புத்தகத்தில் திணித்துவைத்தேன். நீதான் கதைப்பிரியனாயிற்றே. என் யுக்தி பலித்

தது....'' என்று நிறுத்தினாள் மங்களம்.

ராஜேந்திரன் கண்கள் கண்டறியாதன கண்டன; காதுகள் கேட்டறியாதன கேட்டன. அவன் திகைப்பு அடங்கக்கொஞ்சம் நாழிகை ஆகத்தான் ஆனது.

"அண்ணி, நீங்கள் அன்பு செய்வதில்தான் ஈடுஇணை இல்லாதவர்கள் என்றிருந்தேன் இவ்வளவு நாளாக. மனோதத்துவத்தில் கூடக் கைதேர்ந்தவர்கள் என்பதை இப்போதுதான் புரிந்துகொண்டேன்."

அவன் பேச்சிலே ஆனந்த வெள்ளம் உணர்ச்சிச் சுழிப்பில் பெருக்கெடுத்தோடியது.

அதே சமயம், முன் படித்த பானு-சங்கரி இருவரின் மனமாற்றம் பற்றிய கதை ராஜேந்திரனுக்கு நினைவில் மிதந்து வந்தது.

"அண்ணி, மல்லிகாவுக்கு என்மீது ஆசை...' என்று மென்று விழுங்கினான் அவன். உடனே அவனுக்கு எங்கேயென்று வெட்கம் வந்துவிட்டது. அவன் விழித்தான், கேட்கக்கூடாத கேள்வியைக் கேட்டுவிட்டு அப்புறம் கேட்ட கேள்வியைக் கேட்டிருக்கக் கூடாதோ என்று எண்ணித் திணறும் விதரணை தெரியாத குழந்தைபோல.




"நன்றாயிருக்கிறது நீ கேட்பது. மல்லிகாதானே இந்த ஏற்பாடெல்லாம் செய்யத் தூண்டியவள். உன்னை உள்ளத்தில் எண்ணியல்லவா

இதுவரை அவள் காத்திருக்கிருள்! இப்பொழுதே அவனுக்கு 'எகஸ்பிரஸ் லெட்டர்' போடவேணும்'' என்ருள் மங்களம்.

பதுமையாக நின்ற ராஜேந்திரன் தன் கனவுப் பதுமையான மல்லிகாவின் இன்ப நினைவில் தன்னையும் மறந்திருந்தான்.

* *
*

'திருமதி பூங்குழலி அவர்கட்கு........''

அவனது பேனைப் பிடித்த கை இந்த ஒரு வரிக்கு மேல் தொடர்ந்து எழுத மறுத்தது. இரவு, பகல் என்று சென்ற மூன்று நாட்களாக அவன் பூங்குழலிக்குக் கடிதம் எழுத ஆரம்பித்தான். ஆரம்பம் முடிவு நியதியை எட்டவில்லை. ஆரம்பம் ஆரம்பமாகவே நின்றுவிட்டது. பலமுறை எழுதினன். பலமுறை கிழித்து வீசினன். முதலில் எழுதிய அந்த 'திருமதி பூங்குழலி அவர்கட்கு' என்ற ஒரு வரிக்குமேல் அவனல் என்ன எழுதுவதென்று சிந்திக்கத் தெம்பு ஊறவில்லை; செய்தி பிறக்கவில்லை.

தரையைக் குனிந்து பார்த்தான் அவன். துண்டுக் காகிதங்கள் குப்பை சேர்ந்திருந்தன. சிகரெட் துண்டுகள், நெருப்புக்குச்சிகள், கங்குலைப் பிரிந்து உதிர்ந்த சாம்பல் கூட்டங்கள் இவை அவனது சிந்தனையை, அவன் தயக்கத்தை, அவன் தடுமாற்றத்தை எடுத்துக் காட்டின.

சுழன்ற உலகம் நின்றும் கூட அவனல் மேலே இயங்க முடியவில்லை.

பார்வையில் பட்டுக்கிடந்த அந்தக் கடிதம்—பூங்குழலி அவள் அத்தான் டாக்டர் குணசீலனுக்கு எழுதிவைத்திருந்த அந்தக் கடிதம் ராஜேந்திரனை வெட்டி இழுத்தது.

அக்கடிதத்தின் முன் அவன் கண்கள் சுழன்றன; நீரைச் சிந்தின.

பூங்குழலியின் உருவத்தைத் தன் அகக் கண்ணில் பிரித்துவைத்துப் பார்த்தான். அவன் நெஞ்சுவரம்பை மனச்சாட்சி வளைத்து முத்தமிட்டது.

மாலை மயங்கி வந்தது.

அவன் மயக்கம் தீரவில்லை.

பூங்குழலியுடன் நடந்த முதற்சந்திப்பை ராஜேந்திரன் எண்ணினன்; சந்திப்பு, நட்புக்கனிய ஏதுவான சந்தர்ப்பங்களைப் பற்றி எண்ணினன்; நட்பு வளம்பெற வாய்த்த விந்தையை எண்ணினன்.

'உங்கள், நீங்கள் என்று சொல்லித் தயவு பண்ணி இனியும் என்னைத் திணற அடிக்காதீர்கள்.......'

அன்று பூங்குழலி, ராஜேந்திரனிடம் கோரிய வார்த்தைகள் நினைவுக்கு-

வந்தன. அன்று விருந்து முடிந்ததும் அவள் தன்னைப் பிடித்துவிடுபவள் போன்று கிட்டவரும்போது, தான் எட்ட நின்றதையும் மறக்க வில்லை. கல்லூரி விழா, நாடகம், பிக்னிக், விருந்து, டென்னிஸ் ஆட்டப்பந்தயம்—இத்தகைய நினைவுக் காட்சிகளை அவனால் எப்படி நினைவைவிட்டுப் பிடித்துத் தள்ள முடியும்! இம்மாதிரிச் சம்பவங்கள் நிகழ்வதே அபூர்வம். அபூர்வமாக நிகழ்ந்த சம்பவங்களை அவன் எவ்விதம் மறப்பான்?

ஆனால் பூங்குழலியின் அந்தரங்கம்....ராஜேந்திரனின் அந்தரங்கம்.......அந்தரங்கத்தைத் தழுவாத துருவங்களாக்கி ஏதோ ஓர் புள்ளி மையத்தில் அந்தரங்கமாகச் சுழலும் மல்லிகா........!

கண்களில் வேலி கட்டியிருந்த நீர்த்துளிகளை விரல் நுனியில் ஃ'ரிக் கழித்துவிட்டு மறுபடியும் பேனாவும் கையுமாக ராஜேந்திரன் எழுத ஆரம்பித்தான்.

கடிதம் பேசுகிறது!

"திருமதி பூங்குழலி அவர்களுக்கு,

காதல் ஓர் எழிற்கனவு. அந்த என் கனவின் பிரதிநிதி மல்லிகா. அவள் மீது நான் கொண்ட 'முதற் காதல்' அது. அதுவே என் உள்ளம்—அந்தரங்கம்—ஆசை எல்லாம். இதுவே என் போக்கு—இயல்பு—கனவு!

நட்பு ஓர் சுந்தர நினைவு. அந்த நினைவின் அடித்தளம் நீங்கள். நம் முதற் சந்திப்பில் உங்கள் மீது நான் கொண்ட 'முதல் நட்பு' அது. நீங்கள் என் சிநேகிதி. நான் அன்பை வழிபடுபவன். இது என் போக்கு—இயல்பு—நினைவு!

தயவுசெய்து மல்லிகாவை எனக்கு அளியுங்கள்.

நாம் இருவரும் சிநேகிதர்களாகச் சந்திக்கும் பொன்னான சந்தர்ப்பத்தை அண்மையில் ஏற்படுத்துங்கள்.

ராஜேந்திரன்"

ராஜேந்திரன் பூங்குழலிக்கு எழுதிய கடிதத்தை அன்றையத் தபாலில் சேர்த்துவிடச் செய்தான்.

சில கண நேரங்கழித்து 'வணக்கம்' என்று இருகுரல்கள் ஒலிப்பதைக் கேட்ட ராஜேந்திரன் கண்களை எதிர்நிறுத்திப் பார்த்தான்.

அப்பொழுது வந்து நின்ற காரினின்றும் இறங்கிய பூங்குழலியும் டாக்டர் குணசீலனும் கைபிடித்த காதலர்கள் போலக் கைகோர்த்த வண்ணம் நகை முகங்குலுங்க வந்து கொண்டிருந்தார்கள்!

(தொடரும்)

விருந்து வரிசையில்

# 12 உலக இலக்கியங்கள் 12

| | | |
|---|---|---|
| 1. இந்துலேகா | ... | மலையாள நாவல் |
| 2. மாமனூர் வீடு | ... | ஆங்கில நாடகம் |
| 3. துன்பக்கேணி | ... | ஜப்பானியக் கதை |
| 4. நூர்ஜஹான் | ... | வங்காளி நாடகம் |
| 5. கைக்கடிகாரம் | ... | ரஷ்யக் கதைகள் |
| 6. முத்துமாலை | ... | சீனக் கதைகளும் நாடகமும் |
| 7. தாயகத்தின் அழைப்பு | ... | ஆங்கில நாவல் |
| 8. அறக்கோட்டம் | ... | இந்தி நாவல் |
| 9. மாலதி – மாதவன் | ... | சமஸ்கிருத நாடகம் |
| 10. கடல்மறவர் | ... | பிரஞ்சு நாவல் |
| 11. கல்மனிதன் | ... | ஸ்வீடிஷ் கதைகள் |
| 12. ஆண்டிமடம் | ... | ஆங்கில இசை நாடகம் |

*மேற்குறித்த 12 புத்தகங்களும் ரூ 6/— அனுப்பினல் தபாற் செலவின்றி அனுப்பப்படும். தனித்தனியே பெறுவதற்கு பிரதி 8 அணு.—தபாற் செலவு 1 அணு.*

## பொன்னி லிமிடெட்

த. பெ. எண். 1165 :: சென்னை — 21

# காணிக்கை

வீர. பழனியப்பன்

"கண்ணம்மா,

எட்டுப் பக்கங்களில் என்னுடைய சுகத்தைப் பற்றி விசாரித்து, எச்சரித்து நீ எழுதியிருந்த கடிதம் கிடைத்தது. அதைப்படிப்பதற்கென்று ஒரு அரை மணி நேரத்தை நான் செலவிட்டு, ஒரு வழியாகப் படித்து முடித்தேன். என்ன கண்ணம்மா, நான் இன்னும் சிறு குழந்தையா என்ன? எண்ணெய் தேய்த்துக் குளிப்பதிலிருந்து, வேளாவேளைக்குச் சாப்பிடுவது வரையில் நானே செய்துகொள்ள மாட்டேனு? இதற்காகவென்று ஒரு பக்கத்தையே 'உபதேச காண்டமாக' ஆக்கியிருக்கிருயே! இது பற்றி உன்னைக் குற்றஞ் சொல்லி ஒரு பயனுமில்லை. அது பெண் குலத்தின் தனிப்பெரும் பண்பு! அதுதான் போகட்டும் என்ருல், நான் எழுதும் கடிதங்கள் எல்லாம் மிகவும் சுருக்கமாக இருப்பதாக வேறு குறைப்பட்டுக்கொண்டு எழுதியிருக்கிருய். நான் என்ன செய்வது, கண்ணம்மா? இயந்திரம்போல எட்டு மணி நேரம் வேலை செய்துவிட்டுக் கடிதம் எழுதுவது என்ருலே அலுப்பாக இருக்கிறது. அதிலும் பெரிய கடிதம் எழுதுவது என்ருல் வேறு வினையே வேண்டாம். உனக்கென்ன மகராஜி! தாய் வீட்டிலே கால் மேலே கால் போட்டுக்கொண்டு நாவல் படித்துக்கொண்டிருப்பாய். நீ எட்டுப் பக்கமும் எழுதலாம்; பத்துப் பக்கமும் எழுதலாம்; ஓய்வு இருக்கும். இதுமட்டுமல்ல. நான் சுருக்கமாகக் கடிதம் எழுதுவதற்குக் காரணம் இங்கு நீ அறிவதற்கு ஏற்ற சுவையான செய்தி 'நான் சுகமாக இருக்கிறேன்' என்ற மூன்று வார்த்தைகளைத் தவிர வேறு எதுவும் இல்லை.

நான் எவ்வளவு காரணங்கள் காட்டினுலும், நீ அடுத்த கடிதத்தில் 'நீங்கள் எழுத்திலே மிகவும் கஞ்சத்தனம் காட்டுகிறீர்கள்! ஒற்றைக் காகிதத்தில் முக்காலே மூன்று வீசம் பகுதி வெள்ளையாகவே காட்சியளித்தது எனக்கு மிகவும் மனவேதனையை அளித்தது. 'அப்படி, இப்படி' என்று தமிழில் எத்தனை வார்த்தைகள் இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் போட்டு ஐந்தாறு பக்கங்களுக்கு ஒரே 'கண்டனத் தீர்மானங்களாக' நிறைவேற்றி அனுப்பிவிடுவாய்! அதை எண்ணும்போது என்னைப் பயம் மருட்டுகிறது. இருந்தாலும் சிறிய ஒரு பொருளை வைத்துக் கொண்டு பெரிதாக எழுதுவதற்கு நான் என்ன காண்டேகரா? அவரிடம் இருக்கும் கதைக்கும் திறமையைக் கொஞ்சம் கடன் வாங்கி யாராவது கொடுத்தார்களானுல் உன்னை ஒருவேளை திருப்திப்படுத்தலாம். அப்படிப்பட்ட உதவி செய்பவர்கள் எனக்கு யார் இருக்கிருர்கள்?

இனிக் கடிதத்தை வளர்ப்பதற்கு என்ன செய்வது? ம்ம்...ம்...வேண்டுமானுல் உனக்கு நான் ஒரு கதை சொல்லட்டுமா? உனக்கும்தான் கதைகள் என்ருல் நிரம்பப் பிடிக்குமே! சொல்லட்டுமா? எது நான் கூடக் கதை சொல்லுகிறேன் என்று தைரியமாக எழுதிவிட்டேன் என்று ஆச்சரியப்படுகிருயா? என் அம்மா, நான் சிறு குழந்தையாய் இருக்கும் போது நான் இரவு வேளைகளில் தூங்காமல் விஷமம் செய்தால், இப்படித்தான் கதை சொல்லுகிறேன் என்று சொல்லி, நான் விஷமம் செய்யும் நேரத்தை, அவள் சொல்லும் கதைகளைக் கேட்பதில் செலவிடும்படி செய்து என்னைத் தூங்க வைத்துவிடுவாள். அதே யுக்தியைத் தான் இப்பொழுது நானும் கையாள வேண்டி வந்துவிட்டது. ஒருவகை

யில் பார்த்தால் நீயும் இப்பொழுது குழந்தைதான். என்னதான் உனக்கு வயதானாலும், குழந்தைகளிடம் இருக்கும் படபடப்பு, பிடிவாதம் மனதில் இருப்பதை வெகுளித்தனமாக வெளியே கொட்டிவிடுவது—ஆகிய இந்தக் குணங்கள் இன்னும் உன்னைவிட்டுப் போனபாடாக இல்லையே! இப்பொழுது நான் சொல்லப்போவதுகூட ஒரு குழந்தையைப்பற்றிய கதைதான்.

ஒரே ஒரு ஊரிலே ஒரு குழந்தை இருந்தது. அந்தக் குழந்தைக்கு வயது எட்டு இருக்கும். அதற்கும் உன்னைப் போலவே கதை கேட்பது என்றால் ரொம்பப் பிடிக்கும்...

ஆரம்பத்தைப் பார்த்ததும் இது என்ன அத்தைப் பாட்டி கதை போல இருக்கிறதே என்று எண்ணுவாய்! அது என்னுடைய குற்றமல்ல. என்னுடைய அன்னை எனக்கு இதுபோலக் கதை சொல்வதைத்தான் சொல்லித் தந்தாள்...நான் என்ன செய்யட்டும்! மேமேலே சொல்லவா?

அந்தக் குழந்தை தினசரி கதை கேட்பதற்கென்றே அது இருந்த தெருவில் குடியிருந்த ஒரு ஆசாமியிடம் சென்றுவிடும். அந்த ஆள் இருக்கிறாரே அவர் என்னைப் போன்றவரல்ல. கதை சொல்வதிலே ரொம்ப சாமர்த்தியம் அவருக்கு உண்டு. விநோதமான கதைகளையெல்லாம் அவர் அந்தக் குழந்தைக்குச் சொல்லுவார். அவருக்கு அப்படிச் சொல்வதில் அலுப்போ சலிப்போ ஏற்படுவது கிடையாது. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? அவருக்குக் கதை எழுதுவதே தொழில்.

ஒருநாள் மாலை அந்தக் குழந்தை எப்போதும் போல அவரிடம் கதை கேட்க வந்தது. ஆனால் அவரோ, ஏதோ மனவேதனையில் அடி பட்டவர்போல 'உம்'மென்று முகத்தை வைத்துக்கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார். எட்டு வயதுக் குழந்தைக்கு எங்கே அவருடைய மனவேதனை தெரியப்போகிறது?

"அண்ணா, இன்னைக்கி ஒரு நல்ல கதை சொல்லு" என்று கேட்டுக் கொண்டு அந்தக் குழந்தை அவரிடம் வந்தது.

"பாப்பா, இன்றைக்கு என்னுடைய மனம் என்னவோ போல இருக்கிறது. நாளைக்குச் சொல்கிறேன், பாப்பா. இப்பொழுது என்னைத் தொந்தரவு செய்யாமல் நீ வீட்டுக்குப் போம்மா" என்று சமாதானமாக அந்தக் குழந்தையிடம் கூறினார்.

அந்தக் குழந்தையோ, தினசரி கதை கேட்டுக் கேட்டு ருசி கண்டதாயிற்றே; இப்பொழுது அவருடைய சமாதானத்தைக் கேட்டுக் கொண்டு சும்மா போய்விடுமா?

"நீங்க கதை சொன்னாத்தான் நான் போவேன், இல்லாட்டி இங்கேயேதான் இருப்பேன்" என்று உரிமையோடு பிடிவாதம் பிடித்தது.

பாவம், அந்த மனிதனின் நிலை தர்மசங்கடமாகப் போய்விட்டது. அவருக்கு அந்தக் குழந்தைமீது நல்ல அன்பு. அதனிடம் கோபித்துக் கொள்ளவும் அவருக்கு விருப்பமில்லை. மௌனமாக இருந்தார்.

அவர் மௌனமாக இருப்பதைக் கண்டதும், சூட்டோடு சூடாகக் காரியத்தைச் சாதித்துக்கொள்வதற்காக அந்தக் குழந்தை மேலும், மேலும் முரண்டியது. அந்தப் பச்சிளங் குழந்தையின் பால் வடியும் முகத்தை அவர் சற்று நேரம் உற்று நோக்கினார்.

'இன்னும் சற்று நேரம் நானும் கதை சொல்லமாட்டேன் என்று பிடிவாதம் பிடித்தால், இந்தக் குழந்தையின் முகத்தைக் கவலை கவ்வி, சோர்வு ரேகைகள் படர்ந்து, ஒளி வீசும் முகத்தைக் களை இழக்கச் செய்துவிடும்' என்ற எண்ணம் அவர் உள்ளத்தை உலுக்கியது.

"இம்...ம்..."—ஒரு பெருமூச்சு அவரை அறியாமலே அவர் உதடுகளிலிருந்து சிதறி வெளிவந்தது.

"சொல்லு அண்ணா" என்று அந்தக் குழந்தை கொஞ்சம் அழுத்தம் செய்தது.

"சரி பாப்பா! நான் கதை சொல்றேன்! ஆனால் இன்றைக்கு ராஜா-ராணி கதை கிடையாது" என்று அவர் எதையோ நினைத்துக்கொண்டவர்போல ஒரு நிபந்தனை போட்டார்.

"எந்தக் கதையாயிருந்தாலும் என்ன அண்ணா, கதை நல்லா இருந்தாச் சரி, உம் நீங்க சொல்லுங்க" என்று அந்தக் குழந்தை அவருக்குக் கொஞ்சம் விட்டுக்கொடுத்தது.

அவர் கதை சொல்ல ஆரம்பித்தார்...

'ஒரு ஊரிலே ஒரு குழந்தையும், அதனுடைய அப்பாவும் இருந்தார்கள். அந்தக் குழந்தையின் அப்பா இருக்கிறாரே அவர் ரொம்ப ஏழை... அவர்களுக்கு மூன்று வேளையும் சாப்பாடு கிடைப்பதே அரிது என்றால் பார்த்துக்கொள்ளேன்..."

"என் அண்ணா? நான் எல்லாம் காலையிலே, மத்தியானம், சாயங்காலம், ராத்திரி நாலு வேளை சாப்புடுகிறேன். ஒங்க கதையிலே வரும் பாப்பா மூணு வேளைகூடச் சாப்புடுறது இல்லேங்கிறீங்களே... அப்படீன்னா அது எப்படி அண்ணா உசுரோட இருக்கும்?' என்று பாப்பா ஒரு குறுக்குக் கேள்வி போட்டது.

"பாப்பா ஏழைகள் வீட்டுக் குழந்தைகளுக்கெல்லாம் கடவுள் ஒரு தனிச் சக்தியைக் கொடுத்திருக்கிறார். அவைகள் சாப்பாடு சரியாகக் கிடைக்காவிட்டால் இளைத்து எலும்பும் தோலுமாக மாறுமே ஒழிய, சாகாது. உம்ம்...நீ கதையைக் கேளு...அந்தக் குழந்தையுடைய அப்பாவுக்கு ஒருநாள் மிகவும் பணத் தட்டுப்பாடு வந்துவிட்டது. அவர் தன்னுடைய குழந்தையை ஒரு ஆசாமியிடம் கொடுத்து அவருடைய அப்போதைய தேவைக்கு ஐம்பது ரூபாய் பெற்றுக்கொண்டார்..."

"என் அண்ணா எங்கேயாச்சும் குழந்தையை வச்சுக்கிட்டுப் பணங் கொடுப்பாங்களா?" என்று திரும்பவும் ஒரு கேள்வியைப் போட்டது அந்தக் குழந்தை.

"பணக்காரர்கள் தங்களுடைய சொத்தைக் காட்டிப் பணம் வாங்கலாம். ஆனால், ஏழைகளுக்குச் சொத்து சுகம் எல்லாம் குழந்தைகள் தாம் பாப்பா! என்ன செய்வது? அப்பா வாங்கிய கடனுக்குக் குழந்தைகள் உழைக்கவேண்டும்."

"என் அந்த அப்பாவே போய் வேலை செய்கிறது?" என்று கதையில் வரும் குழந்தைக்காகப் பரிந்து பேசியது இந்தக் குழந்தை.

உனக்கு உலகத்தைப்பற்றித் தெரியாது, பாப்பா. அப்பாவுக்கு வேலை கொடுத்து பயன்படுத்திக்கொள்வதைவிடக் குழந்தைகளுக்கு வேலை கொடுத்துப் பயன்படுத்திக் கொள்வது சுலபம் என்று இன்றைக்கு இருக்கிற எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்; அதனாலே தான் அந்தக் குழந்தையின் அப்பாவுக்கு மதிப்பு இல்லாமல் போய் விட்டது..."

"சரி அப்பரம் என்ன அண்ணா?"

"அப்புறமா?...ஒருநாள் அந்தக் குழந்தையுடைய அப்பா தன்னுடைய குழந்தை எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்க அந்தக் குழந்தை இருக்குமிடத்திற்குச் சென்றிருந்தார். அங்கே அவர் கண்ட காட்சி.....அம்மம்மா....அவருடைய குழந்தை அடிபட்டு, உதைபட்டு அலங்கோலமாகக் கிடந்தது. எப்படி இருக்கும் பெற்றவனின் உள்ளம்? அவர் நேராக யாரிடம் தன்னுடைய குழந்தையை ஒப்படைத்தாரோ அவனிடம் சென்றார்... 'அட பாவி...இதுபோலச் சித்திரவதை செய்வதற்குத்தானா உன்னிடம் என் குழந்தையை ஒப்படைத்தேன்?' என்று ஆத்திரமாக அவனிடம் சீறினார். இவருடைய ஆத்

திரத்தைக் கண்ட அவன் அலட்சிய மாகச் சிரித்தான்!

"'ஓய் ஓய், ரொம்ப அதிகமாகப் பேசாதே. நீ ஒண்ணும் உன்னுடைய குழந்தையைச் சும்மா என்னிடம் ஒபபடைத்துவிடவில்லே. ஐம்பது ரூபாய் வாங்கிக்கொண்டிருக்கிறீர். ஞாபகமிருக்கட்டும். என் விருபபத் திற்கு இந்தக் குழந்தையை எப்படி வேண்டுமானுலும் நடத்துவேன்; உனக்குப் பிடிக்கவில்லையானுல் என்னிடம் வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுத்தவிட்டு உன் குழந்தையை அழைத்துக்கொண்டுபோ' என்று மிகவும் உதாசீனமாகப் பேசினுன். இதைக் கேட்டதும் அந்த ஏழைத் தகப்பனின் மனம் எப்படி இருக்கும்? அவனிடமோ ஒரு காசுக்கு வழியில்லே; கெஞ்சினுன். கூத்தாடினுன். அந்தப் பாவி இரக்கம் காட்டுவதாக இல்லே. மீண்டும், மீண்டும் தன்னுடைய வார்த்தைகளேயே உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு பேசினுன். கையிலே காசில்லாத குறை அந்தத் தகப்பன், தன் குழந்தையின் கண்ணீரைத் துடைக்கமுடியாமல், தான் கண்ணீர் வடித்துக்கொண்டு வெளியே வந்தான்" இவ்வாறு சொல்லிக்கொண்டு வரும்போது அவர் கண்களிலிருந்து நீர்த்துளிகள் உதிர்ந்தன. இதைக் கண்டதும் அந்தக் குழந்தையின் கண்களிலும் நீர் துளிர்த்தது.

"அப்பரம் என்ன ஆச்சு அண்ணு? அந்தக் குழந்தையை அதோட அப்பா, அவன்கிட்டேயிருந்து மீட்டுட்டாரா, இல்லேயா?"

"எப்படிச் சும்மா மீட்க முடியும்? ஐம்பது ரூபாய் பணம் வேண்டுமே, அதற்கு அந்த ஆள் எங்கே போவார்?"

"பாவம்......அய்யோ......அந்தக் குழந்தைரொம்பகஷ்டப்பட்டிருக்கும் இல்லேயா அண்ணு?" என்று கதையிலே லயித்திருந்த இந்தக் குழந்தை பரிதாபப்பட்டது.

"இன்னும் அந்தக் குழந்தை கஷ்டப்பட்டுக்கொண்டுதான் இருக்கிறது. அதற்கு விடுதலே கிடைக்கவே இல்லே" என்று தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டார் அவர்.

"நெசம்மாவா அண்ணு? இன்னுமா அந்தக் குழந்தை கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கு! அது எங்கே இருக்கு அண்ணு?" என்று அவரை நிமிண்டியது குழந்தை.

"அந்தக் குழந்தை வெளியூரிலே இருக்கிறது. ஆனல், அதனுடைய அப்பா இங்கேதான் இருக்கிருர்..." என்று சொல்லிவிட்டு அவர் சோர்ந்த முகத்தோடு எழுந்தார்.

"உங்களுக்கு அந்தக் குழந்தையோட அப்பா இங்கே எங்கே இருக்காருனு தெரியுமா அண்ணு? அப்படீன்னு எனக்கு அவரைக் காட்டுறீங்களா?"

"நீ அவரைப் பார்த்து என்ன செய்யப்போகிருய்?"...என்று அலுப்போடு அவர் சொன்னர்.

"வந்து...வந்து...அவர் எங்கே இருக்காருனு சொல்லுங்க அண்ணு" என்று எதையோ சொல்ல வாயெடுத்து, என்ன சொல்வதென்று புரியாமல் விழித்தது.

"நீ அவசியமா அவரைத் தெரிந்துகொள்ளவேண்டுமா? பாப்பா, நான்தான் அந்தக் குழந்தையுடைய அப்பா" என்று நெற்றியை அழுத்திக்கொண்டார் அவர்.

"ஹிம்ம்...நீங்களா அண்ணு? நான் உங்க குழந்தையைப் பார்த்தமே இல்லேயே!" என்று மிகவும் பரிதாபத்தோடு கூறினுள் குழந்தை.

"நீயே சின்னக் குழந்தைதானே பாப்பா? உனக்கு எங்கே அதைத் தெரியப்போகிறது?"

அவருடைய பேச்சை அந்தக் குழந்தை சவனிக்கவில்லே. அது தன் போக்கிலே மோவாய்க்கு இரு கரங்களேயும் முட்டுக்கொடுத்துக் கொண்டு என்னவோ யோசித்துக் கொண்டிருந்தது. சற்று நேரம் மௌனம்.

"அண்ணு"—மௌனத்திரை கிழிந்தது. அவர் அவசரத்தோடு குழந்தை

யின் அழைப்பைக் கேட்டுத் திரும்பினார்.

"நீங்க இப்போ அம்பது ரூபாய் குடுத்துட்டீங்கன்னா அந்தக் குழந்தையை அளச்சுகிட்டு வந்துடலாமில்ல...?" குழந்தையின் கேள்வியைக் கேட்டதும் அவருக்குத் திகைப்பு உண்டாகியது.

"அழைத்துக்கொண்டு வந்துவிடலாம். ஆனால் ஐம்பது ரூபாய்க்கு எங்கே போகிறது?"—அவர் குரலில் சோர்வு கவிந்திருந்தது.

"அம்பது ரூபாதானே வேணும்? இதோ என் கைக்காப்பு இருக்கே! இதை வித்தாப் போவுது" என்று அந்தக் குழந்தை அலட்சியமாகக் கூறியது.



"வேணும் பாப்பா, வேணும்! அப்புறம் உன் அம்மா, அப்பாவுக்குத் தெரிந்தால் அடிப்பார்கள்."

"நீங்க போங்க அண்ணா? எங்க அப்பாவும் அடிக்க மாட்டாங்க. அம்மாவும் அடிக்கமாட்டாங்க. நீங்க போயி அந்தக் குழந்தையை அளச்சிக்கிட்டு வர்ரீங்களா?" என்று சொல்லிக்கொண்டே கையில் கிடந்த இரண்டு காப்புகளைக் கழட்டியது அந்தக் குழந்தை.

அவருக்கோ அந்தக் குழந்தையிடமிருந்து உதவியைப் பெற்றுக்கொள்வதா வேண்டாமா என்பதில் ஒரு பெரிய மனக்குழப்பம் வந்துவிட்டது. சற்று யோசித்துப் பார்த்தார். எது எப்படி ஆனாலும் சரி, உதவியைப் பெற்றுக்கொள்வது என்று முடிவுக்கு வந்தார்.

"பாப்பா, உனக்கு இருக்கிற இரக்கம் அந்தப் பாவிப்பயலுக்கு இருக்கக்கூடாதா?" என்று ஒரு பெருமூச்செறிந்தவாறு அந்தக் காப்புகளை வாங்கிக்கொண்டார். ஏனோ அவர் கண்களில் நீர் துளிர்த்தது.

"அண்ணா அழுவாதீங்க! நாளைக்கு நீங்க அந்த ஆளுகிட்டே போய், உங்க பாப்பாவை அழைச்சுக்கிட்டு வந்துடுங்க" என்று ஆறுதல் சொல்லியது இந்தப் பாப்பா.

அவரும் தன் மனதிலிருந்த வேதனைக்கு விமோசனம் கிடைத்துவிட்டது என்று மகிழ்ந்தார். மறுநாள் அதிகாலையில் அவர் அங்கிருந்து கிளம்பிவிட்டார். அவருடைய முதல் வேலை குழந்தையின் காப்புகளை விற்கச் சென்றதுதான்! அவர் எதிர்பார்த்த 50 ரூபாய் ஒரு காப்பிலேயே கிடைத்துவிட்டது. அவருக்கு மீதமிருந்த மற்றொரு காப்பை விற்க மனம் வரவில்லை! அதை அந்தக் குழந்தையிடம் திருப்பிக்கொடுத்துவிடவேண்டுமென்று தன் பையில் பத்திரப்படுத்திக்கொண்டு 'அன்பு நிலையம்' என்ற புத்தகம் வெளியிடும் இடம் நோக்கித் தன்னுடைய 'குழந்தையை' மீட்பதற்காகச் சென்றார்.

இந்த இடத்தில் அந்தக் கதை எழுதுபவரைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொன்னால்தான் உனக்கு மேற்கொண்டு கதையைப் புரிந்துகொள்ள வசதியாய் இருக்குமென்று நினைக்கிறேன். அந்தக் கதை எழுதுகிறவர் இருக்கிறாரே, அவர் கல்யாணமாகாதவர்! பிறகு அவருக்குக் குழந்தை எங்கிருந்து வந்தது என்று யோசிக்கி

ரூயா? அதில்தான் இருக்கிறது வேடிக்கை!

சாதாரண மனிதர்களுக்கும் இந்தக் கதை எழுதுபவர்களுக்கும் இருக்கக் கூடிய முக்கியமான வித்தியாசம், சாதாரண மனிதன் உலகம் எப்படிப் போகிறதோ அதன் வழியே போய் விடுவான்; ஆனல் எழுத்தாளர்கள் உலகம் போகிற போக்கைத் தான் சொல்லுகிற—எழுதுகிற வழிக்கு இழுக்கப் பார்ப்பார்கள், இவ்வளவு தான்! இந்த விசித்திரமான போக்கு அவர்களிடம் இருப்பதினுல்தான் அவர்கள் வாழ்க்கையிலே துன்பப் படவேண்டி யிருக்கிறது.

என்னுடைய கதையில் வரும் கதாசிரியரின் துன்பத்திற்கும் காரணம் இதேதான்! அவர் ஒரு கதையை எழுதி 'அன்பு நிலையம்' என்கிற புத்தகம் வெளியீட்டாளரிடம் கொடுத்தார். அந்த அன்பு நிலைய உரிமையாளர்கள் அந்தக் கதையை வெளியிடுவதற்கு உரிய சன்மானமாக ஐம்பது ரூபாயை இவரிடம் கொடுத்தார்கள். ஆனல் அந்த அன்பு நிலையத்தார் அந்தக் கதையை வெளியிடும்போது சில திருத்தங்கள் செய்யவேண்டும் என்று விரும்பினுர்கள். அது இந்தக் கதாசிரியருக்குப் பிடிக்கவில்லை. அதுபோலத் திருத்தங்கள் செய்வது தன்னுடைய கதையையே குட்டிச்சுவராக்கிவிடும்; அதைத் தான் அனுமதிக்க முடியாது என்று இவர் அன்பு நிலையத்தாரிடம் கண்டிப்பாகக் கூறினுர். அவர்கள் அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. இரண்டு பக்கமும் பிடிவாதம் இருக்கும்போது பேச்சுத் தடிப்பதற்குக் கேட்கவாவேண்டும்? கடைசியாக அன்பு நிலையத்தார், 'எங்கள் இஷ்டப்படிதான் கதையில் திருத்தங்கள் செய்வோம். உங்களுக்கு அது பிடிக்கவில்லையானல் எங்களிடம் வாங்கிய ஐம்பது ரூபாயைக் கொடுத்துவிட்டு உங்கள் கதையை எடுத்துக்கொண்டு போகலாம்' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்கள். அதற்கு மேலே கதாசிரியரால் ஒன்றும் பேச முடியவில்லை! பேசாமல் தன்னை நொந்துகொண்டு திரும்பிவிட்டார்.

கதை கேட்ட குழந்தையிடம் கதாசிரியர் சொன்ன கதையின் உட்கருத்து இப்பொழுது உனக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். அவருடைய 'குழந்தை' என்னவோ அவர் எழுதிய கதை தான். அதுவும் ஒரு வழியில் சரிதானே!

அவர் அன்பு நிலையத்துக்குப் போனுர். கையில் இருந்த ஐம்பது ரூபாயை அங்கிருந்தவர்களிடம் கொடுத்துவிட்டுத் தன்னுடைய குழந்தையை மீட்டுக்கொண்டார். அப்பொழுதுதான் அவர் மனதிலிருந்த ஒரு பெரிய சுமை இறங்கியது.

ஆனல், இன்னெரு பெரிய இடி வெளியில் அவருக்காக காத்துக் கொண்டிருப்பது அவருக்கு அப்போது தெரியாது. அவர் அன்பு நிலையத்திலிருந்து வெளியில் வந்தாரோ இல்லையோ அவர் போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

அவர் செய்த குற்றம் என்ன தெரியுமா? குழந்தையை மோசடி செய்து அதன் கைகளிலிருந்த தங்கக் காப்புகளை அபகரித்துக்கொண்டாராம்! அதற்குப் போலீசாருக்குக் கிடைத்த ஆதாரம், அவர் பையிலிருந்த ஒற்றைக் காப்பு. இது போதாதா போலீசாருக்கு? அவர் மேல் வழக்கைப் பதிவு செய்து கொண்டு அவரை நீதி மன்றத்திற்கு இழுத்து வந்துவிட்டனர். அந்த வழக்கிலே அவரிடம் கதையைக் கேட்டுக் காப்புகளைக் கழட்டிக் கொடுத்ததே அந்தக் குழந்தை அது கூடச் சர்க்கார் தரப்புச் சாட்சியாக வந்தது.

வழக்கு நடந்தது. எழுத்தாளர் என்னவோ நடந்த உண்மையை அப்படியேதான் சொன்னுர். குழந்தையும் உண்மையைத்தான் கூறியது. இருந்தும் என்ன செய்வது? சட்டம் என்று ஒன்று இருக்கிறதே, அது அந்த உண்மையையெல்லாம் சந்தேகித்து அவருக்கு மூன்று மாதச்

சிறைத் தண்டனையை அளித்து விட்டது.

எப்படி என் கதை? கதை நன்றாக இருக்கிறதா?

ம்...கண்ணம்மா, இந்தக்கதையைப் படித்ததும் உனக்கு உன் சிறு வயதில் நடந்த சம்பவம் ஒன்று நினைவுக்கு வருகிறதா? வராமல் என்ன செய்யும்!

அந்தச் சம்பவம் எனக்கு எப்படித் தெரிந்தது என்று நீ ஆச்சரியப்படுகிறாயா, கண்ணம்மா! ம்...ஆச்சரியப்படு...நன்றாக ஆச்சரியப்படு! அப்பா......இப்பொழுதுதான் என் மனதிற்கு நிம்மதி வந்தது. தொட்டுத் தாலி கட்டிய கணவனிடத்தில் கூடவா நீ இந்தச் செய்தியை சொல்லாமல் மூன்று ஆண்டுகளாக மறைத்து வைத்திருந்தாய்!



இப்போது மாத்திரம் நீ என் எதிரில் இருந்தால் உன்னை அழவைத்திருப்பேன்; என்னவோ தப்பித்துக்கொண்டாய்!

கண்ணம்மா, உண்மையிலேயே உன்மீது நான் கோபப்பட்டுவிட்டேன் என்று எண்ணுகிறாயா? அட பைத்தியம், எல்லாம் சும்மா வேடிக்கைக்குத்தான்!

இந்த விபரமெல்லாம் எனக்கு எப்படித் தெரிந்தது தெரியுமா? அன்று உன்னிடமிருந்து காப்புகளைப் பெற்றுக்கொண்டாரே கதாசிரியர், அவரேதான் எனக்கு இதையெல்லாம் சொன்னார். அவரை எனக்கு எப்படித் தெரிந்தது தெரியுமா? அதுவும் ஒரு வேடிக்கைதான்!

நானும் அப்புலிங்கமும்—அதுதான் அந்த எழுத்தாளரின் 'பிள்ளைத் திருநாமம்'—கடற்கரை நண்பர்கள். அவர் எழுத்தாளர் என்று எனக்கு வெகுநாட்கள் வரையில் தெரியாது. ஏதோ கடற்கரையில் சந்திப்போம், பேசுவோம், பிரிந்துவிடுவோம் என்ற நிலைமையில்தான் எங்களுடைய நட்பு ஆரம்பத்தில் இருந்தது. ஆனால் நீ ஊருக்குப் போன பிறகு எனக்கு அறவே பொழுது போவதே இல்லை. அதனால் நான் அவரோடு மிகவும் நெருங்கிப் பழக ஆரம்பித்தேன். அப்புறம்தான் அவர் நிறையக் கதை, கட்டுரைகள் எல்லாம் எழுதியிருக்கிறார் என்று தெரிய வந்தது. பிறகுதான் நான் அவர் எழுதியவற்றை எல்லாம் படிக்க ஆரம்பித்தேன். அப்படி நான் படித்த புத்தகங்களில் 'மண்ணுக்கு' என்ற தலைப்பில் அவர் எழுதிய கதையும் ஒன்று. அந்தக் கதை மிகவும் பிரமாதமாக இருந்தது. நான் அந்தக் கதையை முழுவதும் படித்துவிட்டு அவர் எழுதிய முன்னுரையைப் படித்துப் பார்த்தேன். அதில் கடைசி வரியாக,...'என் இன்னல் அறிந்து, தன் கன்னல் மொழியால் என்னைக் களிப்பித்து, கைவளை ஈந்து இக்கலைக் குழவியைக் காப்பாற்றிய அன்புத் தெய்வம் கண்ணம்மாவுக்கு இந்நூல் காணிக்கை...' என்று அவர் எழுதியிருந்தார். அதைக் கண்டதும் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. 'யார் அந்த அன்புத் தெய்வம் கண்ணம்மா?' என்று என் மூளையைக் குழப்பிக்கொண்டிருந்தேன்.

எனக்கே அந்தக் கண்ணம்மா யார் என்று கண்டுபிடிக்க முடியாத நிலை



வேலையாள் : உங்களைப் பார்க்க வெளியே ஐந்துபேர் காத்திருக்கிருர்கள். அவர்களில் ஒருவர் பாதிரியார். அவர் சில வருஷங்களுக்குமுன் உங்களைக் கல்யாணம் செய்து கொண்டதாகச் சொல்கிருர்.

சினிமா நடிகை: அப்படியா? நான் எந்தப் பாதிரியாரையும் திருமணம் செய்துகொண்டதாக எனக்கு நினைவில்லையே...

---

ஏற்பட்ட பிறகுதான், நான் அவரிடம் சென்று, 'யார் சார் இந்தக் கண்ணம்மா? ஒருவேளை பாரதியாரைப் பைத்தியமாக அடித்த கண்ணம்மாவுக்கா இந்த 'மண்ணுக்கு...' என்ற கதையைக் காணிக்கை ஆக்கியிருக்கிறீர்கள்?' என்று பரிகாசமாகக் கேட்டேன்.

அவர் சிரித்துக்கொண்டே, 'அந்தக் கண்ணம்மா இல்லை சார் இது இந்தக் கண்ணம்மா என்னுடைய விளையாட்டுத் தோழி. வஞ்சனை கலக்காத பிஞ்சு நெஞ்சம் படைத்தவள் இந்தக் கண்ணம்மா. துன்பத்தைக் கண்டவுடனே அவளுடைய நெஞ்சு அப்படியே துவண்டு போய்விடும்' என்று சொன்னர்.

"தேவலையே சார், உங்கள் கண்ணம்மா. ம்ம்...சரி சார்! அந்தக் கண்ணம்மா எப்படி உங்கள் கலைக் குழவியைக்காப்பாற்றினுள்?" என்று நான் கேட்டேன்.

அதற்குப் பிறகுதான் அவர் 'அந்தக் கதையை' என்னிடம் சொன்னர். நான் அவர் சொன்ன கதையில் நடந்த இடம், ஆசாமிகளின் பெயர் இவற்றையெல்லாம் மறைத்து உனக்குச் சொல்லியிருக்கிறேன்! அதையெல்லாம் நான் முதலிலேயே சொல்லிவிட்டால், பிறகு நான் சொல்லியதைக் கதையென்று நம்புவதற்கு நீ என்ன பைத்தியக்காரியா?

அதெல்லாம் போகட்டும் கண்ணம்மா, உன்மேலே அப்புலிங்கத்திற்கு ரொம்பப் பிரியம்! எப்போது பார்த்தாலும் அவருக்கு உன்னுடைய பேச்சுத்தான்! இப்பொழுது நீ என்னுடைய மனைவியாய் ஆய்விட்டாய் என்பதை அறிந்ததும் அவர் அடைந்த ஆனந்தம் இருக்கிறதே அதை என்னுலே சொல்லவே முடியாது! அவர் ஒரு பைத்தியக்கார மனிதன். நீ அவரை மூன்று மாதம் சிறையிலே சீரழிய வைத்ததைக்கூட மறந்துவிட்டார்!

ஒருநாள் இதை அவரிடமே கேட்டுவிட்டேன்!

அதற்கு அவர், 'உங்களுக்குக் குழந்தைகளைப்பற்றி ஒன்றுமே தெரியாது. அவை அக்கிரமங்கள் மலிந்த உலகில் அன்பு மழை எந்திவரும் கருமுகில்கள்! சில சமயங்களில் முகில் வடிக்கும் நீர் கடலிலே விழுந்து விடுவதில்லையா? கடலிலே கலந்த காரணத்தால் மழையையே உவர்ப்பானது என்று சொல்ல முடியுமா? அதுபோலத்தான் கண்ணம்மா என்

மீது காட்டிய கருணை—அன்பு—இந்த உலகத்தின் சட்டங்களால் பாதிக்கப் பட்டு உவர்ப்பானதாக மாறிவிட்டது. குற்றம் கண்ணம்மாவினுடையது அல்ல' என்று என்னிடம் சமாதானம் கூறினர். அவருடைய பதில் எப்படி இருக்கிறது பார்த்தாயா கண்ணம்மா? மேற்கொண்டு அவரிடம் நான் என்ன பேச முடியும்?

அவர் இப்படிப் பேசி வருவதைப் பார்க்கிறபோது எனக்கு ஒரு வகையில் மகிழ்ச்சிதான். என் என்று கேட்கிருயா, கண்ணம்மா? நீ ஊரிலிருந்து வரும்போது கையிலே ஒரு பாப்பாவைத் தூக்கிக்கொண்டு வருவாய். அந்தப் பாப்பா எடுத்ததற்கெல்லாம் பிடிவாதம் பிடித்து ஒரே கத்தாகக் கத்தித் தீர்க்கும். உன் வயிற்றிலே பிறந்த குழந்தைக்கு அவ்வளவு 'பிடிவாதம் இல்லாவிட்டால் பிறகு உனக்குத்தான் என்ன மதிப்பு இருக்கிறது? அந்தமாதிரிச் சந்தர்ப்பத்தில் நண்பர் அப்புலிங்கம் போன்ற ஒரு 'குழந்தைப் பைத்தியத்தின்' துணை இருப்பது நல்லது தானே!

அவர் உன்னைப் பார்க்கவேண்டும் என்று துடியாகத் துடித்துக் கொண்டிருக்கிருர். நீ இப்போது இங்கு எங்கே வரப்போகிருய்? இன்னும் உன் வருகைக்கு ஆறு மாதங்களாவது ஆகாதா? நீ இங்கே வந்து அவரைப் பார்த்தால், உனக்கு அவரை அடையாளம் தெரியுமா என்பதே சந்தேகம்தான். அப்பப்பா அவர் சிறையிலிருந்து வெளி வந்தபிறகு, இந்தப் பதின்மூன்று ஆண்டுகளாக அவர்எவ்வளவுஅல்லற் பட்டிருக்கிருர்? எத்தனை ஊர்களைச் சுற்றியிருக்கிருர்? அந்த அனுபவங்களையெல்லாம் நீ அவர் வாய் மொழியாகக் கேட்டால்தான் சுவையாக இருக்கும்!

கண்ணம்மா, கடிதம் நீண்டுவிட்டது. இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் 'இந்தக் கடிதத்தை நாமா எழுதினேம்?' என்று ஒரு பிரமை தட்டுகிறது. இருந்தாலும் இப்பொழுது நான் என்ன சாதாரண ஆளா? ஒரு கலாரசிகையின் கணவன்! ஒரு எழுத்தாளரின் நண்பன்!! இந்த இரண்டு தகுதிகளும் வேறு யாருக்கும் அமைந்திருந்தால் இதுபோல ஒரு கடிதம் என்ன, ஒரு ஆயிரம் கடிதம் வேண்டுமானலும எழுதித் தள்ளிவிடுவார்களே. இருந்தாலும் உன்னை மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன், இதுபோலத் தொடர்ந்து நீண்ட கடிதம் எழுதச் சொல்லித் தொந்தரவு செய்யாதே என்று.

கடைசியாக உன் காதோடு ஒரு வார்த்தை! உன் உடம்பைக் கவனமாய்ப் பார்த்துக்கொள். இப்பொழுது நீ ஒண்டிக் கட்டையல்ல! உன்னை நம்பித்தான் இன்னெரு உயிரும் இருக்கிறது!

இத்துடன் நண்பர் அப்புலிங்கத்தால் உனக்குக் காணிக்கையாக்கப் பட்ட 'மண்ணுக்கு' என்ற நூலை அனுப்பியுள்ளேன். அதை இரவு வேளைகளில் உட்கார்ந்துகொண்டு படிக்க ஆரம்பித்துவிடாதே. என் இந்த எச்சரிக்கை தெரியுமா? கண் விழிப்பது கர்ப்பிணிகளுக்கு ஆகாது என்பார்கள். மறந்துவிடாதே!

இந்தக் கடிதத்தோடு என் அன்பு முத்தங்கள் இரண்டை அனுப்பியுள்ளேன். ஒன்றை நீ எடுத்துக் கொள். மற்றென்றை..? அது சேரவேண்டிய இடம்தான் உனக்குத் தெரியுமே! அங்கே சேர்த்துவிடு. அப்புறம் நான் உன்னைச் சந்திக்கும் போது அந்த முத்தம் சேரவேண்டிய இடத்தில் சேர்ப்பிக்கப்படவில்லை என்று தெரிந்தால், உன்னைச் சும்மா விடமாட்டேன்!

விரைவில் உன் அன்பான பதிலை
எதிர்பார்க்கும்

கண்ணப்பா"

# Rs. 63,000

*Tele: 'GOODLUCK'*

*Phone 29*

முழுதும் சரியாக உள்ள 21 பரிசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்

எல்லாப் பரிசுகளுக்கும் உத்தரவாதம்

**எல்லாம் சரியாக உள்ள ஒவ்வொன்றுக்கும் ரூ. 3,000. இரண்டு வரிசைகள் சரியாக உள்ள ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000. முதல் ஒரே ஒரு வரிசை மட்டும் சரியாக உள்ள ஒவ்வொன்றுக்கும் ரூ. 80. முதல் இரண்டு எண்கள் சரியாக உள்ளதற்கு ரூ. 20. பரிசுகள் நிச்சயம் வழங்கப்படுகின்றன.**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

7-லிருந்து 22 வரையுள்ள எண்களைத் தந்திருக்கும் கட்டங்களில் மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் அல்லது எல்லாப் பக்கங்களிலும் எப்படிக் கூட்டினாலும் 58 வரவேண்டும். ஒரு எண்ணை ஒரு முறைதான் உபயோகிக்கவேண்டும்.

முடிவு தேதி: **27–9–52.** விடை: **6–10–52.**

**பிரவேசக் கட்டணம்:–கூபன் 1-க்கு ரூ. 1. 4 கூப்பன்களுக்கு ரூ. 3. 8 கூப்பன்கொண்ட செட் 1-க்கு ரூ. 5.**

முந்திய விடை மொத்தம் **54**

| | | | |
|---|---|---|---|
| 9 | 21 | 10 | 14 |
| 8 | 20 | 15 | 11 |
| 19 | 7 | 12 | 16 |
| 18 | 6 | 17 | 13 |

**விதிகள் :** வெள்ளைத்தாளில் விதித்துள்ள பிரவேசக் கட்டணத்துடன் எவ்வளவு கூபன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம். கூப்பன்களுடன் *M. O.* ரசீது, போஸ்டல் ஆர்டர், பாங்க் டிராப்ட் மூலமாகவோ கட்டணத்தைச் செலுத்தலாம் புலந்த்ஷாரிலுள்ள பெரிய பாங்கியில் சீல் செய்திருக்கும் எங்கள் விடைகளுக்குச் சரியாக உள்ளனவே சரியான விடையுள்ளனவாக அமையும். ஆங்கிலத்தில் கடிதங்கள் எழுதவேண்டும். *M. O.* கூப்பனில் உங்களது பெயர், விலாசம் வேண்டும். முழுதும் சரியான விடைகளுக்குத் தக்கபடி பரிசுத்தொகை அமையும். ஆனால் உத்தரவாதம் செய்யப்பட்ட பரிசுகள் மாறமாட்டாது. விடை தேவையானால் தபால் தலையுடன் கூடிய விலாசமிட்ட கவர் அனுப்பவேண்டும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானதாகும்.

கூப்பன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :

## PHOENIX CORPORATION REGD. (P.M.)

BULANDSHAHR, U. P.



# துனியா

இரா. இளஞ்சேரன்

**1816-ம்** ஆண்டு, வசந்தகாலம். கிராமத்திலிருந்து நான் நகரத்திற்குச் சென்றுகொண்டிருந்தேன். குளிர்ச்சியை மேலே தெளித்துச் செல்லும் தென்றல்; இன்பமயமான மாலை வேளை. குதிரைகள் பூட்டிய வண்டியில் சென்றுகொண்டிருந்த எனக்குப் பிரயாணத்தின் களைப்பே தெரியவில்லை. வண்டி ஊர்ந்துகொண்டிருந்தது. வானத்தில் முகில் கூட்டங்கள் கருகி வந்தன. குளிர்ந்தடித்த காற்றில் சில மழைத் துளிகள் என் மேல் தெறித்துவீழ்ந்தன.

“அஞ்சல் நிலையத்துக்கு இன்னும் எவ்வளவு தூரமிருக்கிறது?”—வண்டியோட்டியைப் பார்த்துக் கேட்டேன், நான்.

“இதோ, அருகேதான். இப்போது போய்விடலாம்”—வண்டிக்காரன் பதிலளித்தான் என் கேள்வியில் ஆலவட்டமிட்ட அவசரத்தை அவன் புரிந்துகொண்டானோ, என்னவோ?

நான் ஒரு பெருமூச்சை வெளியே விட்டபடி, பாதையோரக் காட்சிகளை விழிகளால் விழுங்கிக்கொண்டிருந்தேன். அரசாங்க அலுவலென்றால் எத்தனை தொல்லை! எங்கெல்லாம் செல்லவேண்டியிருக்கிறது! பொது மக்கள் என் போன்றவர்களை ஏதோ ஒருவிதப் புதுப் பிராணிகளைப்போல பார்க்கின்றனர். மனிதர்களிலிருந்து நாங்கள் மாறுபட்டவர்கள் என்ற எண்ணம்போலிருக்கிறது!

சிந்தனைக் கடலில் மூழ்கி முத்தெடுத்துக்கொண்டிருந்த எனக்கு வண்டி நின்றதும்தான் தன்னுணர்வு வந்தது. வண்டிக்காரன் குதிரை

களைக் கொட்டடியில் விட்டுவிட்டு வண்டியினுள்ளே அமர்ந்தபடி நிம்மதியாகப் புகைப்பிடிக்க ஆரம்பித்தான். நான் அஞ்சல் அதிகாரியின் வீட்டினுள்ளே சென்றேன்.

"வாருங்கள், இப்படி உட்காருங்கள்"—அதிகாரி ஒரு ஆசனத்தைக் காட்டினர். அமர்ந்தேன். என் அனுமதிச்சீட்டை அவர் பார்வையிட்டார். என் கண்கள் வீட்டை மேய்ந்தன. அழகான சின்னஞ்சிறிய வீடு—பொருள்களெல்லாம் அலங்காரமாக அடுக்கப்பட்டிருந்தன. அவர்—அந்த அஞ்சல் அதிகாரி வாழ்வுப் பயணத்தில் பாதிப் பாதையைக் கடந்துவிட்டிருந்தார். முதுமை தன் முத்திரைகளை அவரது உடலில் அப்போதுதான் வார்த்திருந்தது.

'துனியா! எய் துனியா!"—பெரியவர் உரக்க அழைத்தார்.

"துனியா! துனியா!"—என்றலறியது, ஒரு கீச்சுக் குரல். மேலே எறிட்டுப் பார்த்தேன். தொங்கிக்கொண்டிருந்த கம்பியிலே ஒரு பச்சைக் கிளி சிறகடித்துக்கொண்டிருந்தது. என்னை அறியாமல் உரக்கச் சிரித்துவிட்டேன். கிழவன் எதோ கடிதங்களைக் கட்டிக்கொண்டிருந்தான். அவனுக்குக் காது கேட்காதோ, என்னவோ?

"துனியா"—கிழவன் மீண்டும் குரல் கொடுத்தான்.

"என்னப்பா"—அறையினுள்ளிருந்து வெளிவந்தது, ஒரு உருவம். பதினறு வயதுள்ள ஒரு பெண்! படர்ந்துள்ள இருளை விரட்டியடிக்கும் ஒளிபபிழம்பாக விளங்கினள் அவள்.

"துனியா, பால் வாங்கிவந்து அடுப்பைப் பற்றவை அம்மா"—கிழவன் சொன்னன். அவள் வெளியே சென்றாள்.

"இது உங்கள் மகளா?"

ஆவலை அடக்கமாட்டாதவனக நான் கேட்டேன்.

"ஆமாம், என்னுடைய மகள்தான்! நல்ல புத்திசாலி. எல்லாம் அவள் அம்மாவைப்போல"—கிழவனின் குரலில் பெருமிதம் பின்னிக் கிடந்தது.

*
* *

இரவு எங்கோ உள்ள மாதா கோவில் மணி எழுமுறை அடித்து ஓய்ந்தது. கிழவனுக்கு என்னிடமுள்ள மதுவில் ஒரு கோப்பை கொடுத்தேன். நன்றியோடு வாங்கி அருந்தினன். பிறகு அரசாங்கத்தைப் பற்றியும், அதிகாரிகளைப்பற்றியும் சற்றுநேரம் நாங்கள் இருவரும் பேசினேம். துனியா தேனீர்க் கிண்ணங்களை மேசைமீது வைத்துவிட்டு, எங்களது உரையாடலில் கலந்துகொண்டாள். அவளது பேச்சிலே அழகும் ஆர்வமுமிருந்தன.

*
* *

வண்டி தயாராயிருந்தது. இருவரிடமும் நான் விடைபெற்றுக் கொண்டேன். பிரயாணம் மகிழ்ச்சியாக முடியட்டுமென்று சைமன்—அந்தக் கிழவன் ஆசி கூறினன். வழியனுப்ப வண்டிவரை வந்தாள் துனியா. நான் அவளைப் பார்த்தேன், அமைதி தவழும் முகம்—தாமரை இதழ்களைப் போன்று நீண்டு, அகன்ற விழிகள்! இளமையின் மெருகேறியிருந்த பொன் கரத்தை என் முன்னே நீட்டினள், முத்தமிட. நான் இரு காங்களினல் அவளது முகத்தை எந்தி, நெற்றியிலே முத்தமிட்டேன்.

வண்டி நகர்ந்தது. வாடைக் காற்றின் இரைச்சல் எங்களது பிரிவிற்காகத் துயரகீதம் பாடியது.

## 2

ஆறு ஆண்டுகள் தேய்ந்து மறைந்தன. சந்தர்ப்பம் மீண்டும் என்னை அவ்வழி இழுத்துச் சென்றது.

"துனியாவிற்கு இப்போது திருமணமாயிருக்கும். கிழவன் வாழ்வின் கடைசிக் கோட்டில் நின்றுகொண்டிருப்பான்—அல்லது இறந்திருப்பான்..."—வண்டியில் போய்க்

கொண்டிருந்த என் நினைவலைகள் இப்படிச் சுழன்றன. வண்டி நின்றது. துனியாவைப் பார்க்கவேண்டுமென்ற உள்ளத் துடிப்போடு வீட்டினுள்ளே நுழைந்தேன். மேசையும், கட்டிலும், நாற்காலிகளும் முன்பிருந்த இடத்திலேயே இருந்தன. பாத்திரங்களும், மற்ற பொருள்களும் ஆங்காங்கே சிதறிக் கிடந்தன. அழிவையும் அசிரத்தையையும் பறைசாற்றியது, அந்த வீட்டின் தோற்றம்! இருள் மண்டிக் கிடந்த அறையில் மெழுகுவத்தி ஒன்று தன் மங்கிய ஒளியை உமிழ்ந்துகொண்டிருந்தது. யாரோ இருமுவது கேட்டது. ஒரு மூலையில் அஞ்சல் அதிகாரி—அந்தக் கிழவன் கட்டிலில் படுத்திருந்தான். செம்மறியாட்டின் ரோமத்தினுல் ஆன ஒரு மேல் சட்டையை அணிந்திருந்தான். நான் மெதுவாக அருகே சென்றேன். கிழவன் எழுந்திருந்தான்.

"சைமன்!"—பரிவோடு அழைத்தேன். அவன் அதைக் கேட்கவில்லையெனத் தோன்றியது.

"சைமன், என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு?"—குரலை உயர்த்திக் கேட்டேன். கிழவன் ஏறிட்டுப் பார்த்தான்.

"இந்த வழியே எத்தனையோ அதிகாரிகள் போகிறுர்கள்"—சைமன் முணுமுணுத்தான்.

"உங்கள் மகள் நலந்தானே?"

"கடவுளுக்குத்தான் தெரியும்"—கிழவன் பெருமூச்சுவிட்டான். பிறகு, நான் ஒன்றும் கேட்கவில்லை. சற்று நேரம் அமைதி நிலவியது. என்னிடமிருந்த மதுச் சீசாவை அவனிடம் கொடுத்தேன். விரிந்த விழிகளோடு அதை இரு கரங்களினுல் வாங்கிக்கொண்டான். மதுவை மனங்கொள்ளுமட்டும் குடித்தான். அவனது நாக்கு சுழலத் தொடங்கியது.

"மது அருந்தினுல் நான் புது மனிதனுய்விடுகிறேன்"—சைமன் உற்சாகத்தோடு பேசினுன்.

> ஒரு சில கல்யாணங்கள் மட்டுமே மகிழ்ச்சிகரமாக அமைவதற்குக் காரணம், இளம் பெண்கள் கூண்டு செய்வதில் தங்கள் நேரத்தைச் செலவழிக்காமல், வலை பின்னுவதில் வீணுக்குவதேயாகும்.
>
> —ஸ்விப்ட்

"துனியா எங்கே?"—நான் கேட்டேன் மீண்டும்.

"துனியா! அவள் என்னை விட்டுப் போய்விட்டாள்!" இதைக் கூறும்போது கிழவனின் குரல் கம்மியது.

"துனியா போய்விட்டாள்! துனியா போய்விட்டாள்!"—என் காதருகே வந்து யாரோ கத்துவதைப் போல் இருந்தது. என்னையறியாமல் மேலே நோக்கினேன். அன்றிருந்த கிளியைக் காணவில்லை. வெறும் கம்பி மட்டும் மூளியாக ஊசலாடிக் கொண்டிருந்தது.

கிழவன் அந்தச் சோக நிகழ்ச்சியைச் சொல்லத் துவங்கினுன்:

"துனியா என் வாழ்வின் வழிகாட்டியாக—ஒளிவிளக்காக இருந்தாள். மூன்று ஆண்டுகளுக்குமுன் தோன்றிய புயல் அவளிடமிருந்து என்னை வெட்டிப் பிரித்துவிட்டது.

"இந்த வழி செல்லும் அதிகாரிகளனைவரும் அவளைப் பார்த்துவிட்டால் அரைமணி நேரமாவது அவளோடு பேசாமல் போகமாட்டார்கள். அவ்வளவு கவர்ச்சியோடு நடமாடினுள் அவள்.

"மூன்று ஆண்டுகளுக்கு முன்பு... ஒருநாள் பனிக் காலம்...வீட்டு வாசலில் ஒரு வண்டிவந்து நின்றது. பட்டாள அதிகாரியைப்போன்று நீண்ட அங்கி அணிந்த இளைஞெருவன் வண்டியிலிருந்து இறங்கி வந்தான். நான் அவனை வரவேற்றேன். புதிய குதிரைகள் வேண்டு

மென்றான். எல்லாக் குதிரைகளும் அதிகாரிகளின் தேவைநிமித்தம் சென்றுவிட்டிருந்தன. இதைக் கேட்டதும் அவன் ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தான். அறையினுள்ளிருந்து துனியா வெளிவந்தாள். கொதிப்பை மாற்றிக் குளிர்ச்சியை வரவழைத்துக்கொண்டான். குதிரைகள் வரும் வரை காத்திருப்பதாக ஒப்புக்கொண்டான்.

"இரவு உணவு முடிந்தது. இதற்கிடையில் குதிரைகளும் வந்து சேர்ந்தன. நாற்காலியில் சாய்ந்து படுத்திருந்த இளைஞனை நான் எழுப்பினேன். அவன் அசையவில்லை. மூர்ச்சித்துக் கிடந்தான். பனிக்காலத்தில் இந்தப் பகுதியில் ஒருவித நோய் பரவும். இளைஞன் அந்த நோயினால் தாக்கப்பட்டிருக்கிறானென்றே எண்ணினேன். அன்று இரவு அவன் இங்கேயே தங்கினான்.

"மறுநாள் நோயின் வேகம் வர வர அதிகரித்துக்கொண்டிருந்தது. இளைஞனோடு வந்த பணியாள் பட்டணத்திற்குச் சென்றான், டாக்டரை அழைத்துவர. துனியா, இளைஞனின் கட்டிலினருகே இருந்தபடி அவனுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்தாள். சில சமயங்களில் துனியாவின் கரங்களை அழுத்திப் பிடித்தவாறு ஏதேதோ புலம்புவான். டாக்டரும் வந்து சேர்ந்தார். இளைஞனைப் பரிசோதித்தார். ஜெர்மன் மொழியில் இருவரும் ஏதோ பேசிக்கொண்டார்கள். நோயாளிக்கு ஓய்வும் அமைதியும் அவசியமெனவும், இரு தினங்களில் நோய் தீர்ந்துவிடுமெனவும் டாக்டர் கூறினார். இளைஞன் டாக்டருக்கு இருபது 'ரூபிள்' கொடுத்து வழியனுப்பினான்.

"இரு தினங்கள் மறைந்தன. இளைஞன் நோயின் பிடியிலிருந்து விடுபட்டான். அவனிடம் எனக்கு மிகுந்த அன்பும் அனுதாபமும் ஏற்பட்டன. இரு தினங்களில் அவன் என் நண்பனாக மாறிவிட்டிருந்தான்.

"அன்று ஞாயிற்றுக்கிழமை. துனியா மாதாகோயிலுக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். இளைஞனின் பயணத்திற்காக வண்டி வாசலில் காத்துநின்றது. அவன் என்னிடம், என் வீட்டில் வசித்ததற்கு நன்றியாக ஒரு கத்தை நோட்டுகளைக் கொடுத்தான்.

"'துனியா நான் போய் வரட்டுமா? வேண்டுமானால் வண்டியில் ஏறிக்கொள்ளேன். மாதாகோயில் வரை கொண்டு விட்டுவிடுகிறேன்–' அன்பும் நன்றியும் கலந்த குரலில் வேண்டினான். துனியா மறுத்தாள்.

"'அவர் வேட்டை நாயல்ல, உன்னைக் கொன்று கிழிப்பதற்கு. வண்டியில் ஏறிக்கொள்–' நான் கடுமையாகச் சொன்னேன். துனியா வண்டியில் ஏறினாள். இளைஞனும் அவளருகே அமர்ந்தான். சாலை வழியே வண்டி சென்றுகொண்டிருந்தது. ஆமாம். மறைந்தது.

"வெகுநேரம்வரை காத்திருந்தேன் அவளுக்காக. துனியா வரவில்லை. துடிக்கும் நெஞ்சோடு மாதாகோவிலுக்கு ஓடினேன். அங்கே பிரார்த்தனை முடிந்திருந்தது. துனியா அங்கு வரவில்லை. என் உள்ளம் அலறியது! உடல் துடித்தது! நடைப்பிணமானேன் நான். உடைந்த உள்ளத்தோடு வீட்டிற்கு வந்தேன். இரவு நெடுநேரமாகியும் பைத்தியக்காரனைப்போல வீட்டு வாசலில் அமர்ந்திருந்தேன். துனியாவை ஏற்றிச்சென்ற வண்டியின் பணியாள் நள்ளிரவில் இவ்வழி வந்தான்.

"'என் துனியாவைப் பார்த்தாயா?...அவளை எங்கே கொண்டு விட்டாய்?'–நான் அவனிடம் கேட்டேன். என் மனம் அடித்துக்கொண்டது.

"'துனியாவா?...யார், அது?'– அவன் கேள்வி போட்டான்.

"'என் மகள்! பட்டாள அதிகாரியோடு வண்டியில் சென்றாளே அவள்!'

"'அவர்கள் அடுத்த நிலையத்தில் இறங்கி வேறு வண்டி அமர்த்திக் கொண்டு போய்விட்டார்கள்'-அவன் அனுதாபத்தோடு பேசினான்.

"நான் வானத்தில் படர்ந்திருந்த சூன்ய வெளிக்கு என் விழிகளை ஓட்டினேன்.

"'அந்தப் பெண் நிரம்ப மதுவைக் குடித்துப் போதையேறி அவனது மடியிலே மயங்கிக் கிடந்தாள்'-அவன் சொல்லிவிட்டுப் போனான். என் வாழ்வில் இடி விழுந்தது! நான் நம்பிக்கொண்டிருந்த கடைசி ஆதாரம் என் துனியா. இந்த எதிர்பாராத ஏமாற்றத்தை என்னால் தாங்க முடியவில்லை. இரண்டொரு நாட்களில் கடுமையான நோயால் பீடிக்கப்பட்டேன். மருத்துவம் செய்துகொள்ளப் பட்டணத்திற்குச் சென்றேன். இளைஞனைப் பரிசோதித்த டாக்டர்தான் என்னையும் பரிசோதித்தார். அன்று அவனுக்கு நோய் ஒன்றுமில்லையென்றும், அவனது எண்ணத்தைத் தான் அறிந்திருந்ததாகவும், படைத்தலைவனான அவனது கோபத்திற்குப் பயந்து உண்மையை மறைத்துவிட்டதாகவும் என்னிடம் கூறினார் அந்தக் கோழை டாக்டர்.

"அந்த இளைஞனது அனுமதிச் சீட்டை நான் பார்த்திருந்தேன். அதில் பீட்டர்ஸ்பர்க் அவனது சொந்த இடமென்று குறிப்பிட்டிருந்தது எனக்கு நன்றாக நினைவிருந்தது. அலுவலிலிருந்து இரண்டு மாதம் ஓய்வெடுத்துக்கொண்டு நான் பீட்டர்ஸ்பர்க்கை அடைந்தேன்.

"காப்டன் மின்ஸ்கி—இதுதான் அந்த இளைஞனின் பெயர். அவன் இருக்குமிடத்தை நான் எப்படியோ அறிந்துகொண்டேன்.

"அவனது மாளிகையினுள்ளே நுழைந்தேன். மின்ஸ்கி அங்கிருந்தான். என்னைக் கண்டதும் அப்படியே திகைத்து நின்றுவிட்டான்.

"'என்ன வேண்டும்? யார் நீ?' எப்படியோ சமாளித்துக்கொண்டுதான் இந்தக் கேள்வியை என்மேல் வீசினான். என் உள்ளம் துடித்தது!




"நீங்கள் உங்கள் மனைவியைத் தன் போக்கில் செல்ல அனுமதிப்பதுண்டா?"

"ஊஹூம்; என் அனுமதியில்லாமலேயே அவளுக்கு எதற்கும் உரிமை இருக்கிறது..."

---

உதடுகளை மீறிக்கொண்டு வார்த்தைகள் வெளியே பாய்ந்தன.

"'நான் ஏழை...எனது ஒரே செல்வம்...துனியா. கடவுளை நினைத்துத் தயவுசெய்து அவளை விட்டுவிடு. அவள்தான் எனக்கு எல்லாம்! அவளை நாசமாக்கிவிடாதே!' அந்த நிலையில் இதற்குமேல் என்னால் பேச முடியவில்லை.

"'உடைந்து போன கண்ணாடி இனி ஒட்டவாபோகிறது? ஏதோ நடந்தது நடந்துவிட்டது!'—மின்ஸ்கி மெதுவாக முணுமுணுத்தான்.

"கண்ணீர் என் கண்களுக்குத் திரையிட்டது.

"'நான் உங்களிடம் அநீதியாக நடந்துகொண்டேன். எனக்குத் தெரிகிறது! என்னை மன்னித்துவிடுங்கள். துனியா மீண்டும் உங்களோடு வருவாளென்று கனவிலும் கருதவேண்டாம். அவள் உல்லாசமாக ஒரு [illegible]யுமின்றி [illegible]வாள். அவளுக்கு [illegible]டத்தில் [illegible]வற்ற அன்பு.

எனக்கும் அப்படித்தான்! அவளது விழிகளிலிருந்து ஒருநாளும் வேதனைக் கண்ணீர் வழியாது. இந்த உறுதி மொழியைமட்டும்தான் என்னால் தர இயலும். நீங்கள் மன நிறைவோடு போகலாம்'—மின்ஸ்கி பேசி முடித்தான்.

"என்னால் ஒன்றையுமே நிதானிக்க முடியவில்லை. அங்கிருந்து வெளியேறினேன். ஆனால் என் உள்ளத்தில் ஒரு ஆசைமட்டும் ஒட்டிக்கொண்டிருந்தது. ஆமாம்—என் துனியாவை ஒரு முறை...ஒரே ஒரு முறை எப்படியாவது பார்த்துவிட வேண்டும்! அந்த ஆசையை உதறித் தள்ளிவிட்டு ஊர் செல்ல என்னால் முடியவில்லை. எந்தத் தகப்பனால் தான் முடியும்? பீட்டர்ஸ்பர்க்கிலேயே பைத்தியக்காரனைப்போல அலைந்தேன்.

"ஒருநாள் மாலை. 'துக்கங்கொண்டோரின் பள்ளி' என்னும் தேவாலயத்தில் பிரார்த்தனை செய்துவிட்டுத் தெருவோடு போய்க்கொண்டிருந்தேன். என்னைத் தாண்டிக் குதிரை வண்டி ஒன்று சென்றது. ஆம். மின்ஸ்கிதான்! சந்தேகமேயில்லை. நான் வண்டியைப் பின்தொடர்ந்தேன். ஒரு பெரிய மாளிகையின்முன் வண்டி நின்றது. மின்ஸ்கி வண்டியிலிருந்து இறங்கி உள்ளே சென்றான். நான் வண்டியோட்டியை அணுகினேன்.

"'இந்த வண்டி காப்டன் மின்ஸ்கியுடையதுதானே?'

"'ஆமாம், உங்களுக்கு என்ன வேண்டும்?'

"'துனியா என்ற பெண்ணிடம் கொடுப்பதற்காகக் காப்டன் என்னிடம் ஒரு கடிதம் தந்திருக்கிறார். ஆனால் அந்தப் பெண்ணின் விலாசத்தை மறந்துவிட்டேன்'—ஏமாற்றத்தை என் குரலில் இழுத்துவைத்துக்கொண்டு பேசினேன்.

"'துனியா இங்கேதானிருக்கிறாள். அவளைப் பார்ப்பதற்குத்தான் காப்டன் போயிருக்கிறார்'—வண்டிக்காரன் சாவதானமாகப் பேசினான்.

"நான் மெதுவாக மாளிகையினுள் நுழைந்தேன். மேல்மாடியில் வரிசையாக அறைகளிருந்தன. இரண்டு அறைகளில் இருள் கவிந்திருந்தது. மூன்றாவது அறையில் வெளிச்சம் தெரிந்தது. 'பட பட'க்கும் நெஞ்சோடு அறையின் வாசலருகே சென்றேன்.

"அலங்காரமான அறை. மெழுகுவத்திகள் மின்னிக்கொண்டிருந்தன. மஞ்சத்திலே அமர்ந்திருந்தான் காப்டன். அவனது தோள்களிலே துவண்டு கிடந்தாள், துனியா. அவளது நீண்ட மெல்லிய தாமரை விரல்கள் காப்டனின் கேசத்தை வருடிக்கொண்டிருந்தன. துனியா இப்போது பார்ப்பவரை வசீகரிக்கும் பகட்டுக்காரியாக விளங்கினாள். புது வாழ்வு அவளது பொன்னுடலிலே மெருகைப் பூசியிருந்தது! பட்டண வாசம் அவளைப் பளிங்குச் சிலையாக உருமாற்றியிருந்தது. அழுக்காடையுடுத்திக் கிராமத் தெருக்களில் உலவிய துனியாவாக அவள் காட்சியளிக்கவில்லை. வான மண்டலத்திலே வெண்முகிலை இருக்கையாகக் கொண்டு தவழ்ந்துவரும் தேவ கன்னிகையாக விளங்கினாள்! ஒரு தந்தைக்கே உரித்தான பெருமிதத்தோடு நான் அவளைப் பார்த்தபடி நின்றேன். வாசலில் யாரோ வந்து நிற்பதை அவள் அறிந்துகொண்டாள்.

"'யாரது?' அந்தக் குரலைக் கேட்டு எத்தனை நாட்களாயின! பூரிப்பில் மிதந்துகொண்டிருந்த நான் பேசுவதற்குத் துடித்தேன். ஆனால் வார்த்தைகள்தான் வரவில்லை.

"பதில் கிடைக்காததினால் அவள் தன் நீண்ட கண்களினால் என்னை நோக்கினாள்! 'கிரீச்!' என்ற அலறல்! அவள் கட்டிலிலே மூர்ச்சித்து விழுந்தாள்! அவள் நினைத்திராத தரிசனமே இதற்குக் காரணம்! கண்களை மூடியபடி கனவிலே மூழ்கியிருந்த மின்ஸ்கி கூக்குரல் கேட்டு எழுந்தான். என்னைப் பார்த்தான்.

“ ‘உங்களுக்கு என்ன வேண்டும்? என் வாழ்வைச் சிதைக்க வந்திருக்கிறீர்களா? துனியாவின் நிம்மதியைச் சூறையாட வந்திருக்கிறீர்களா? போய்விடுங்கள். இங்கிருந்து இப்போதே போய்விடுங்கள். நான் எரிமலையாவதற்குமுன் சென்று விடுங்கள்.’ மின்ஸ்கி வெறிகொண்டவனைப்போலக் கூவினான். நான் அங்கிருந்து கண்ணீரோடு வெளியேறினேன். நேராக இங்கு வந்து வேலையை ஒப்புக்கொண்டேன்.”

குரலிலே சோகம் எதிரொலிக்கக் கதையைக் கூறி முடித்தான் கிழவன்.

“துனியாவை அதற்குப் பிறகு பார்க்கவேயில்லையா?” ஒரு கோப்பை மதுவைக் குடித்துவிட்டு அந்தக் கிழவன் மீண்டும் பேசினான்.

“இல்லை. இந்த மூன்று ஆண்டுகளாகத் துனியா இல்லாமல்தான் நான் வாழ்ந்துகொண்டிருக்கிறேன். வறண்ட வாழ்வு-துயரத்தின் இருள் படிந்த தேய்ந்த வாழ்வு. மின்ஸ்கி போன்ற இளைஞர்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். இளமையிருக்கும்வரை — எழிலின் மினுமினுப்பு மங்காதவரை துனியா அவனோடு இருப்பாள். பிறகு அவன் கைவிட்டு விடுவான்—கண்ணீர் பொங்கக் கதியற்றவளாய் வாழ வேண்டியதுதான்!”

“இப்போது துனியா எங்கிருக்கிறாளோ? எப்படியிருக்கிறாளோ? பீட்டர்ஸ்பர்க்கில் பஞ்சையாய்ப் பராரியாய்த் தெருவில் திண்டாடுகிறாளோ, என்னவோ? நகரத்திலே உலாவும் வெறிபிடித்த பிரபுக்கள் அவளை இப்போது விபசாரியாக மாற்றியிருப்பார்கள்! யாருக்குத் தெரியும்?”—கிழவன் விழிகளிலே பொங்கிவந்த கண்ணீரை மேல்சட்டையின் விளிம்பால் துடைத்துக் கொண்டான்.

## 3

மீண்டும் நான் அவ்வழி செல்ல வேண்டியிருந்தது. கிழவனின் நிர்வாகத்திலிருந்த நிலையத்தை இப்போது அங்கிருந்து மாற்றியிருந்தார்கள்.

---


மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் செலவு தனி)

கர்ப்பதடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.

கிளை பிரான்சு 134 SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST. கொழும்பு-11.

வயல்களில் செழித்து வளர்ந்திருந்த பயிர்களைத் தென்றல் தாலாட்டிக்கொண்டிருந்தது. பயிர்கள் சாய்ந்து சாய்ந்து அசையும் காட்சி ஒயிலாக இருந்தது. பச்சைக் கம்பளம் காற்றில் பறப்பதைப்போலச் சாலையெங்கும் ஒரே அமைதி. வானத்தைப் பார்த்தேன். அந்திநேரம். மணமகளின் கன்னக் கதுப்புகளைப்போல் அடிவானம் சுந்தரமாகச் சிவந்திருந்தது. மாலைவேளை தன் மயக்கத்தை மெதுவாக உலகின்மீது தெளித்துக் கொண்டிருந்தது. கிழவன் வீட்டு வாசலில் ஒரு பெண் நின்றிருந்தாள். நான் வண்டியைவிட்டுக் கீழே இறங்கினேன்.

"இங்கே சைமன் என்று ஒரு அஞ்சல் அதிகாரி இருந்தாரே அவர்...?"

"அவர் இறந்து ஒரு ஆண்டுக்கு மேலாகிறதே"—அவள் சர்வசாதாரணமாகப் பேசினாள், நாய் விற்பவன் அது இறந்துவிட்டால் அதை எப்படித் தெரிவிப்பானோ அதைப்போல.

"அவர் எப்படி இறந்தார்? வியாதியாகப் படுத்திருந்தாரா?"—எதாவது திரும்பப் பேசவேண்டுமென்று தான் இந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தேன்.

"மதுவைக் கணக்கு வழக்கின்றிக் குடித்தார். அதுவும் வயோதிகம்..."

"அவரை எங்கே புதைத்திருக்கிறீர்கள்?" என் இறுதி வணக்கத்தைக் கிழவனுக்குச் செலுத்துவதற்காகக் கேட்டேன்.

"கிராமத்தின் எல்லையில்தானிருக்கிறது"—இதைக் : கூறிவிட்டு "வான்கா! வான்கா!" எனக் கூவினாள். ஒரு சிறுவன் உள்ளேயிருந்து ஓடிவந்தான்.

"போஸ்ட்மாஸ்டரின் சமாதியை இவருக்குக் காட்டிக்கொடுத்துவிட்டு வா, போ"

சிறுவன் நடந்தான். நான் அவனைப் பின்தொடர்ந்தேன். நாங்கள் பேசியபடி நடந்தோம்.

"உனக்குப் போஸ்ட்மாஸ்டரைத் தெரியுமா?" நான் கேட்டேன் சிறுவனிடம்.

"ஓ! நன்றாகத் தெரியும். அவர் மிகவும் நல்லவர். எப்போதும் எங்களோடு விளையாடிக்கொண்டிருப்பார்" சிறுவன் உற்சாகத்தோடு பேசினான்.

"இந்த வழிசெல்லும் பிரயாணிகள் அவரைப்பற்றி விசாரிப்பார்களா?"

"இப்போது இங்கே முன்போலப் பிரயாணிகள் அதிகமாக வருவதில்லை. சென்ற வேனிற்காலத்தில் ஒரு பெண் இந்த வழி வந்தாள். போஸ்ட்மாஸ்டரைப்பற்றி விசாரித்தாள். அவரது சமாதியைக்கூடப் பார்த்தாள்"

"அவள் எப்படி இருந்தாள்?"

"அந்தப் பெண் மிகவும் அழகாயிருந்தாள். ஆறு குதிரைகள் பூட்டிய வண்டியில் மூன்று குழந்தைகளோடும், ஒரு பணியாளனோடும் வந்தாள்...போஸ்ட்மாஸ்டர் இறந்துவிட்டாரென்று தெரிந்ததும் விம்மி விம்மி அழுதாள். சமாதியைக் காண்பிக்க நான் தயாரானபோது வழி எனக்குத் தெரியும் என்று கூறிவிட்டாள்"

நாங்கள் கிழவனின் சமாதியை அடைந்தோம். சமாதியின் மேல் சிலுவை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. ஆங்காங்கே மறைந்து போன கிழவனின் வாழ்க்கையைப் போல மலர்கள் வாடிக்கிடந்தன.

"இங்கேதானே அந்தப் பெண் வந்தாள்?"

"ஆமாம். நான் தூர இருந்தபடி பார்த்துக்கொண்டிருந்தேன். அரை மணிநேரம் இங்கே நின்று அழுதாள். போகும்போது எனக்கு ஐந்து 'கோப்பக்' கொடுத்துச் சென்றாள்."

சமாதிக்கு மரியாதை செலுத்திவிட்டுச் சிறுவனுடன் திரும்பினேன். அவனுக்கு நானும் ஐந்து 'கோப்பக்' கொடுத்தேன் என் உள்ளத்தில் என்றுமில்லாத அமைதி நிலவியது!

[மூலம் : அலெக்ஸாண்டர் புஷ்கின்]



# தம்பி

தங்கமணி

## ஏழாம் அத்தியாயம்

சைந்திரிபுரத்தைச் சார்ந்த சந்தனக்கல் மண்டபத்திற்கு வெகு தூரத்திலே ஒரு சுடுகாடு. அந்தப் பயங்கரச் சுடுகாட்டிலே வழிதவறிய ஓர் உருவம், பிண மேடுகளின்மீது தட்டுத் தடுமாறி விழுந்தெழுந்து தலைவிரி கோலமாக இடியிலே, மின்னலிலே, காற்றிலே, மழையிலே சிக்கித் தவித்துத் தாவியோடிக் கொண்டிருந்தது.

யார் அந்த உருவம்? பேயோ, பிசாசோ...?

திடீரென்று எழும்பிய ஓர் பயங்கரச் சப்தத்தைக் கேட்டதும், ஓடிக்கொண்டிருந்த அந்த உருவம் திடுக்கிட்டுத் திகைத்துத் திரும்பிப் பார்த்தது.

புகைந்து கருகிக்கொண்டிருந்த ஒரு சிதையின் அருகில் சூழ்ந்துநின்று, இருள் மண்டிய வானத்தைநோக்கி ஊளையிட்டுக் கொண்டிருந்த சுடுகாட்டுக்குள்ள நரிகள்—அந்த உருவத்தைப் பார்த்த அடுத்த வினாடி 'குபீர் குபீர்' என்று பாய்ந்தன. இந்த அசம்பாவிதப் பேராபத்தை உணர்ந்த அந்த உருவம் "ஆ...ஐயோ..." என்று வீறிட்டுக் கூவிக்கொண்டே பஞ்சாய்ப் பறந்தது.

உயிரைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பிய அந்த உருவம் ஓடோடி மறைந்தது. அந்த உருவத்தைக் கிழித்துக் குதறி உணவாக்கிக்கொள்ளப் பாய்ந்து வந்த பிணந் தின்னும் நரிகள் ஏமாந்து நின்று ஊளையிட்டன.

பயந்து பதறிச் சுடுகாட்டிலிருந்து பாய்ந்தோடிவந்த உருவம் வெகுதூரத்திற்குப் பின் சந்தனக்கல் மண்டபத்து வாசலில் வந்து கால் இடறித் 'தொப்' என்று வீழ்ந்தது. வீழ்ந்த உருவம் மறுபடியும் எழுந்திருக்கக் காணோம். அது மூர்ச்சையாகிப் போயிற்று!

வெகு நேரத்திற்குப்பின்—

மூர்ச்சித்து விழுந்துகிடந்த உருவத்திற்குக் கொஞ்சம் கொஞ்சமாக உணர்வுபிறந்தது; அது மெள்ள நெளிந்தது; உருண்டது; புரண்டது, எழுந்தது; மண்டபத்திற்குள் தள்ளாடி நடந்து சென்றது. மண்டபத்தின் நட்ட நடுவிலுள்ள சித்திரத் தூணில் பிணைத்துக் கிடந்த சத்தியமுத்துவைக் கண்டதும், அந்த உருவத்தின் உயிர் ஒரு குதி குதித்தது!

"ஐயோ...அண்ணா..." என்று உயிர் குலுங்கக் கூவித் தாவிப்

பாய்ந்துசென்று சத்தியமுத்து வைக் 'கப்' பென்று அணைத் துப் பிடித்துக் கட்டிக்கொண் டது...ஆம். தன் ஆருயிர் அண்ணனைத் தேடக் கிளம்பி அல்லலும் அவதியும் அடைந்த அன்புருவான கருணாமூர்த்தி தான்!

ஒரு கணம் உருகி மறைவதற் குள் இடி குமுறியது; மின்னல் பளீரிட்டது; காற்றுச் சீறியது; மழை உறுமியது; காலம் பறந் தது!

## எட்டாம் அத்தியாயம்

பொழுது புலர்ந்தது.

சைரந்திரிபுரத்தின் எல்லைக் கோடியிலே இடிந்து நொறுங்கி நாசமாகிக் கிடந்தது ஒரு தூண். அது பழங்காலத்து அசோகச் சின்னம்! அந்த அசோகச் சின் னத்திற்கு அடியில் சத்திய முத்து உயிர்சோர்ந்து அமர்ந் திருந்தான். அவன் காலடியில் அவனை அந்த இரக்கமற்ற பணக்காரப் பேய்களிடமிருந்து மீட்டுக்கொண்டுவந்த கருணா மூர்த்தி மனம் இடிந்து அமர்ந் திருந்தான். அவனுடைய ஒளி யிழந்த விழிகள் சத்தியமுத்து வின் வெளிறிக்கிடந்த முகத் தைப் பார்த்து ரத்தக் கண்ணீர் வடித்தன.

அன்பு குழைந்துநெளியத் தன் அருமை அண்ணன் சத் தியமுத்துவைப் பார்த்து "அண்ணா, வா அண்ணா. வீட் டிற்குப் போய்விடலாம்" என்று சொல்லிக்கொண்டே, அவ னுடைய முழங்காலைக் கட்டி யணைத்துக்கொண்டான் கருணா மூர்த்தி. அவன் தன்னை அறியா மலேயே விசித்து அழுதான்; தேம்பினான்.

தன் அன்புச் சகோதரன் அழுவதைக் கண்டு சத்திய முத்துவின் மனம் விம்மியது.



அவன் கருணாமூர்த்தியை அன்புடன் அணைத்துக்கொண்டு மௌனமாகக் கண்ணீர் உகுத்தான்.

"தம்பி, அழாதே...அன்பு கெட்ட பணக்காரப் பாவிகளின் விளையாட்டுப் பொம்மையாய்ச் சிக்கிச் சித்திரவதைக்குள்ளாகி, எப்படியோ உன்னால் உயிர் பிழைத்துவிட்டேன். இனி வீட்டிற்குப் போகவேண்டியது தானே. கொஞ்சம் இளைப்பாறிப் போவோம்..."

கருணாமூர்த்தியின் உயிர், தன் சகோதரனின் வேதனையை—உடல் முழுவதும் கிற்றுக் கீற்றாகக் கிடக்கும் சாட்டையடிக் காயங்களைக் கண்டு துன்பத்தால் துடித்துப் பதைத்தது.

"அண்ணா, இந்தா, இந்தப் பேனாவைநீயே வைத்துக்கொள். எழுந்திரு. வா, போகலாம். அப்பா அலைந்துகொண்டிருப்பார்" என்று மெல்ல எழுந்து நின்று, சட்டைப் பையில் பத்திரமாய் வைத்திருந்த அழகிய பச்சை நிறப் பேனாவைச் சத்திய முத்துவிடம் நீட்டினான் கருணாமூர்த்தி.

சத்தியமுத்து பேனாவை வாங்கினான். திருப்பித் திருப்பிப் பார்த்து, "ஹூம்! இந்தப் பேனாவினால் தானே எனக்கு இந்தக் கதியெல்லாம்!" என்று நெட்டுயிர்த்தான்.

அதே சமயத்தில்—

"அகப்பட்டுக் கொண்டாயா, கையும் மெய்யுமாக!"—பின்னாலிருந்து எழும்பிய 'கரகர'த்த உறுமலைக் கேட்டுத் திடுக்கிட்டு அண்ணனும் தம்பியும் உடனே திரும்பிப் பார்த்தார்கள்.

(தொடரும்)

## எகிப்து இலக்கியம்

எகிப்தியரின் இலக்கியங்கள் 'ஹெராட்டிக்' எழுத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ளன. நாலாவது அரச பரம்பரைக் காலத்து எழுத்தாளன் ஒருவனின் கல்லறை ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது. அதில் அங்கு அடக்கஞ் செய்யப்பட்டவன் புத்தக நிலையத்தின் எழுத்தாளன் எனக் குறிக்கப்பட்டுளது. அப்புத்தக ஆலயம் பழைய நூல் நிலையமோ அரசாங்க மூலஆவண நிலையமோ என்று அறிய முடியவில்லை. சமாதி நூல்கள் எனப்பட்ட பழைய நூல்களே கிடைத்துள்ளன. இவை ஐந்தாம் ஆறும் அரச பரம்பரையினரின் சமாதிச் சுவர்களில் எழுதப்பட்டுள்ளன. கி. மு. 2,000 முதல் எகிப்தில் பல நூல் நிலையங்கள் இருந்தன. நூல்கள் பைபிரஸ் தாளில் எழுதப்பட்டவை. அவை சுருட்டிச் சாடிகளில் வைத்துத் தட்டுகளில் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. நூல்களின் பெயர்கள் சாடிகளில் எழுதி ஒட்டப்பட்டன. இவ்வகைச் சாடி ஒன்றிற் காணப்பட்ட நூல் ஒன்றில் சின்பாட் என்னும் கடலோடியின் கதை காணப்படுகின்றது. பிற்கால இலக்கியங்களில் காதல், சமயம் முதலியன சம்பந்தப்பட்ட பாடல்கள் காணப்படுகின்றன. எகிப்தியர் இசையைப்பற்றி நன்கு அறிந்திருந்தார்கள்; பாட்டில் இசையும் உணர்ச்சியும் சிறந்தவை என அவர்களால் கொள்ளப்பட்டது. சில சமயங்களில் பாடல்களின் அடிகளின் முதல் சொற்கள் ஒரே வகையாக இருந்தன; சில பாடல்களின் சொற்கள் ஒரே வகையாக இருந்தன; ஆனால் சொற்களின் பொருள் வேறுபட்டிருந்தன.




# தேடாமல் கிடைத்தது

நா. ஜெகநாதன்

“என்னசார் இது! எத்தனை தடவை இந்தமாதிரிச் செய்திருக்கிறார்களோ?...எனக்குச் சந்தேகமாகத்தானிருக்கிறது. இந்தத் தடவை நீங்கள் தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால், நான் நிச்சயம் இதைப்பற்றி ரிப்போர்ட் எழுத நேரிடும்.” இது ஓர் இளம் பெண்ணின் முறையீடு.

“என்னம்மா இது! பதறாமல் மெதுவாகச் சொல்லுங்களேன்... என்ன செய்தார்கள்?” இது ஓர் ஆணின் அடக்கமான பதில்.

“வருகிற குழந்தைகளுக்கெல்லாம், கையை நீட்டுகிற குழந்தைகளுக்கெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு ‘பாலட்டை’க் கொடுத்து விடுகிறார்கள். நான் பார்த்திருந்து எதாவது சொன்னால், ‘ஓ ஐ ஆம் ஸாரி’ என்று கூறி அதைத் திருப்பி வாங்கிக்கொள்ளுகிறார்கள். நான் பார்க்காமல் விட்டுவிட்டவை எத்தனையோ? அவை அத்தனையும் எந்தப் பெட்டியில் விழுந்தனவோ? யார் கண்டது? இதைப்போல் நாலைந்து தடவை நான் பார்த்திருக்கிறேன். குழந்தையைக் கொண்டுவரும் தாய்மார்கள் தாங்கள் போடுகிற பெட்டியிலேயே தங்கள் குழந்தைகளின் கையில் இருப்பதையும் வாங்கிப் போட்டுவிடுகிறார்கள். உங்களிடம் இரண்டு மூன்று தடவை ரிப்போர்ட் செய்தும் நீங்கள் சும்மா இருக்கிறீர்கள். நீங்களே வந்து அவர்களைக் கேளுங்கள்” என்றாள் அந்தப் பெண்—அவள் ஒரு அபேட்சகரின் ஏஜண்டாக அந்த ஓட்டுச் சாவடியில் வேலை செய்கிறாள்.

“இதென்ன! பெரிய தொல்லையாகிவிட்டதே! நான் முன்னமே அவர்களைக் கண்டித்தேனே! அவர்கள் திருப்பியும் அந்தமாதிரிச் செய்

கிறார்களா?" என்று கூறியபடி எழுந்து அந்தப் பெண்ணோடு சென்றார் ஓட்டுச்சாவடியின் தலைமை அதிகாரியான நந்தகோபால்.

ரோகிணியை நெருங்கியதும், நந்தகோபால், "என்ன இது! உங்கள் மீது குறைகூற இடம் கொடுக்கிறீர்களே!" என்று ஆங்கிலத்தில கேட்டார். "எனக்கு உடம்பு சற்று பலக்குறைவாக இருக்கிறது. வேறு ஒரு கிளார்க்கைக் கூப்பிடுங்கள். நான் சற்று ஓய்வு எடுத்துக்கொள்கிறேன்; மற்றவைகளை உங்களிடம் தனியாகக் கூறுகிறேன்." என்று பதில் கூறினாள் ரோகிணி. அவள் பெண் வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டு கொடுக்கும்படி நியமிக்கப்பட்டவள்! அவளை ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு வேறு ஒரு பெண் கிளார்க்கை ரோகிணியின் வேலைகளைச் செய்யுமாறு பணித்தபின்னர் நந்தகோபால், ரோகிணி ஓய்வு எடுத்துக்கொண்ட அறைக்குச் சென்றார்.

"என்ன காரணம்? ஏன் இந்த மாதிரி நடந்துகொள்கிறீர்கள்? ஓட்டுக் கொடுக்கும் கிளார்க்குகள், கட்சி மனப்பான்மை இல்லாமல் நடந்துகொள்ளவேண்டும் என்பது தங்களுக்குத் தெரியாதா? நீங்கள் நடந்துகொள்வதைப் பார்த்தால் ஒரு கட்சியின் ஆதரவாளராக இருப்பதுபோல் தோன்றுகிறது. தேர்தல் விதிகளின்படி அது ஒரு பெரிய குற்றமாகுமே" என்றார் நந்தகோபால்.

"சார்! நான் ஏதோ ஒரு கட்சிக்கு ஆதரவாகத்தான் அந்தமாதிரி நடந்துகொண்டேன் என்று நீங்கள் நினைப்பது முற்றிலும் தவறு. கட்சிகளைப் பற்றியும் அவற்றின் கொள்கைகளைப் பற்றியும் எனக்கு ஒன்றும் தெரியாது. என்னைப் போன்ற அபலைப் பெண்களுக்கு அரசியல்வேறு ஒருகேடா? நான் உண்டு, என் பள்ளிக்கூடம் உண்டு என்ற நிலையில்தான் இருந்து வந்தேன். அப்போதுதான் என்னை இந்தத் தேர்தலில் போலிங் கிளார்க்காகப் போட்டிருப்பதாகக் கூறினார்கள்..." என்று ரோகிணி துவக்கினாள்.

நந்தகோபால் இடைமறித்து, "அப்படியானால் நீங்கள் ஏன் அந்தக் குழந்தைகளுக்கு ஓட்டுகளைக் கொடுத்தீர்கள்? தெரிந்து கொடுத்தீர்களா? தெரியாமல் கொடுத்தீர்களா? அம்மாதிரிக் கொடுப்பது குற்றம் என்பது உங்களுக்குத் தெரியாதா? அந்த ஏஜெண்ட் ரிப்போர்ட் பண்ணுவதாகக் குதிக்கிறாள்...எனக்கு ஒன்றும் புரியவேயில்லை..." என்றார் ஆவல் தொனிக்கும் குரலில்.

"சார்! பாழ்பட்ட என் வாழ்வின் ஒரு பகுதியை நான் உங்களுக்குக் கூறினால்தான் இந்த விஷயம் எல்லாம் உங்களுக்கு நன்கு விளங்கும்...அதைக் கூற இப்போது நேரமில்லை என்று நினைக்கிறேன்... ஒருநாள் சாவகாசமாக என் சோகக் கதையை உங்களிடம் கூறுகிறேன்... நான் ஓட்டுக்கொடுக்கும் வேலைக்குப் பதிலாக மற்ற வேலைகளைப் பார்த்துக் கொள்கிறேன். அந்தப் பெண்ணே தொடர்ந்து, ஓட்டுக் கொடுக்கட்டும்" என்று கூறினாள் ரோகிணி.

அவளது கழுத்தை உற்றுநோக்கி எதையோ கண்டுபிடித்துவிட்டவர் போல் வெளியேறினார் நந்தகோபால்.

அதற்குப் பிறகு ரோகிணி ஓட்டுக் கொடுக்கச் செல்லவே இல்லை; மற்ற வேலைகளைச் செய்துகொண்டிருந்தாள். தேர்தல் நேரமும் முடிந்துவிட்டது. பெட்டிகளைச் சீல் செய்து தலைமை அதிகாரியிடம் கொடுக்க வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் முடிந்துவிட்டன. எல்லோரும் விடைபெற்றுக்கொண்டு கிளம்பத் தயாராக இருந்தனர். அப்போது ரோகிணி, நந்தகோபாலிடம் "நாளைக்கு அவசியம் என் வீட்டிற்கு வருகிறீர்களா? என் கதையைக் கூறுகிறேன்" என்று கூறி, அவரிடமும், குறைசொன்ன அந்தப் பெண் தேர்தல் ஏஜண்டிடமும் தன் பெயர் பொறித்த விசிட்...

டிங் கார்டுகளைக் கொடுத்தாள். "அவசியம் வருகிறேன்" என்று இருவரும் ஏககாலத்தில் கூறினர்.

★

மறுநாள் விடுமுறை. ரோகிணி தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு அவர்களின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தாள். முதலில் வந்தது தேர்தல் ஏஜெண்டான அந்தப் பெண், கமலா. இரண்டாவதாக நந்தகோபால் வந்தார். இருவரும் சோபாவில் அமர்ந்தனர். நறுமணம் வீசும் சூடான காப்பியைச் சாப்பிட்ட பிறகு, பொதுவாக மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

கமலா ஆரம்பித்தாள். "ஆமாம், ரோகிணி! நேற்று என் குழந்தைகளுக்கெல்லாம் ஓட்டுக் கொடுத்தீர்கள்? எதற்காக எங்களை வரச்சொன்னீர்கள்?" என்று ஆவலாகக் கேட்டாள்.

"ஆமாம். அதைச் சொல்லத்தான் உங்களை எல்லாம் வரவழைத்தேன்" என்று கூறித் தன் சோகக் கதையைச் சுருக்கமாகக் கூறினாள்.

ரோகிணி நடுத்தர வகுப்பில் பிறந்தவள்; அவள் தகப்பனார் ஒரு ரிடையர்ட் தாசில்தார். ஊரில் சிறிது நிலமிருந்தது. அதிலிருந்து வந்த வருமானமும், பென்ஷனும் தான் ரோகிணியின் குடும்பத்திற்கு உணவு தந்தன. ரோகிணியை பி. ஏ. வரை படிக்க வைத்தார் அவளது தகப்பனார். அவள் படிப்பில் மிகக் கெட்டிக்காரி என்ற பட்டத்தை எளிதில் பெற்றாள். படிப்பில் மட்டுமல்ல கெட்டிக்காரி; அழகிலும் சிறந்தவள் என்றால் எத்தனை பேர் போட்டியிடமாட்டார்கள் அவளை மணந்துகொள்ள? கவலையே இல்லாமல் வளர்க்கப்பட்ட ரோகிணி, கள்ளங்கபடமில்லாமல் வளர்ந்து, கண்ணுக்கு விருந்தாக, பார்ப்பதற்கு லட்சணமாக இருந்தாள். அவளது படிப்பு முடிந்ததும், அவளது திருமணத்திற்கான ஏற்பாடுகளில் இறங்கினார் அவளது தகப்பனார்.

முதலில் எத்தனையோ பேர் ரோகிணியை மணந்துகொள்ளவும், ரிடையர்ட் தாசில்தாரோடு சம்பந்தம் வைத்துக்கொள்ளவும் முன்வந்தார்கள். வழக்கம்போல் பெண் பார்க்கும், நிகழ்ச்சிகள் வெகு முறுக்காக நடந்துவந்தன. ஆனால் பெண் பார்க்க வந்து, திரும்பிப்போய்க் கடிதம் போடுவதாகச் சொல்லிச் சென்றவர்களில் ஒருவராவது அவர் வீட்டைத் திரும்பிப் பார்க்கவில்லை. சிலர் மரியாதைக்காகப் 'பெண் ஜாதகமும், பிள்ளை ஜாதகமும் பொருந்தவில்லை, அதற்காக வருந்துகிறோம்' என்று கடிதம் எழுதினார்கள். மற்றும் சிலர் 'எங்கள் பிள்ளைக்கு உமது பெண்ணைப் பிடிக்கவில்லை' என்று எழுதிவிட்டார்கள். இப்படி ரோகிணியைத் தேடிவந்த வரன்கள் எல்லாம் ஒன்றுகூடப் பொருந்தாமல் போய்விட்டன.

கடைசியாக ஒரு வரனை மிகவும் பிடித்திருந்தது. ஆனால் மாப்பிள்ளை ஒருநாள் திடீரென்று மாரடைப்பால் மரணம் அடைந்துவிட்டதாகத் தெரிந்து, ரோகிணியின் வீட்டில் எல்லோரும் வருத்தமடைந்தார்கள். ஒரு வரன்கூடப் பொருந்தாமல் போய்விட்டதைக் கண்டு, ரோகிணியின் பெற்றோர், துயரத்தில் ஆழ்ந்தார்கள். அவள் வீட்டில் செய்த சொஜ்ஜிக்கும், பஜ்ஜிக்கும் கணக்கே கிடையாது. அவற்றைச் சாப்பிட்டுவிட்டுப் 'பெண் ஜாதகத்தில் தோஷம் இருக்கிறது' என்று கூறியவர்களுக்கும் ஒரு கணக்குக் கிடையாது.

ரோகிணியோடு படித்தவர்கள் எல்லாம் கல்யாணமாகி, ஒன்று, இரண்டு அல்லது கால் டஜன் குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டார்கள். அவர்களையெல்லாம் காணும் போது ரோகிணியின் உள்ளம் என்ன பாடு படும் என்று கூறவும் வேண்டுமா? அவள் உள்ளம் விம்மும்; உடல் உணர்ச்சி யிழக்கும்; உலகத்தையே மறந்துவிடுவாள்.

அவளது மனவேதனையை அறிந்து கொள்ளப் பெரிய 'ஸைகாலஜி' புத்தகங்கள் படிக்கவேண்டியதில்லை. ஆதலால் அவளது பெற்றோர்கள் தங்கள் மகள் ரோகிணி படும் துயரை அறியத்தான் செய்தார்கள்; அவர்களால் என்ன செய்யமுடியும்? ஜாதகம் பார்க்காமல், அது பொருந்தியிராமல் தங்கள் அருமை மகளுக்கு மணம் செய்துவைக்க அவர்கள் மனம் அவ்வளவுக்குச் சீர்திருத்தமடையவில்லை. ரோகிணி சாப்பிட வந்தால் அரை நிமிஷத்தில் கையை அலம்ப எழுந்துவிடுவாள்; சாப்பாடு செல்வதில்லை என்பதை அவள் தாய் அறிவாள். ரோகிணிக்காக வாங்கிவரும் ஹேர்ஆயில் புட்டிகளும், ஸ்னோ புட்டிகளும், க்ரீம்களும், ரிப்பன்களும் அப்படி அப்படியே வைத்த வைத்த இடத்தில் கவனிப்பாரற்றுக் கிடப்பதை அவள் தந்தை அறிவார். ரோகிணியின் உடல் சோகையுற்று வருவதை, அவள் முகம் வற்றிப்போய் வெளுத்துக் கிடப்பதை அக்கம்பக்கத்தார் அறிவார்கள். அவள் உள்ளத்தில் குமுறி எழும் உணர்ச்சிகளை, அவள் விடும் நீண்ட பெருமூச்சுகளை, அவள் காணும் இன்பக் கனவுகளை அவளது உறவினர் அறிவார்கள். ஆம். ஒரு பருவமங்கையின் உள்ளக் குமுறலை அறிந்துகொள்ளப் பெரும் ஆற்றல் தேவை இல்லை அல்லவா? அறிந்துகொள்ளத்தான் முடிந்ததே தவிர ஆவனசெய்ய அவர்களால் முடியவில்லை. 'துப்புக்கெட்டவள்' என்று தூற்றத் தெரிந்தது; 'அதிர்ஷ்டம் கெட்டவள்' என்று அழத்தெரிந்தது. ஆனால் ஓர் ஆணழகனைத் தேடி மணம் செய்து வைக்க மட்டும் முடியவில்லை.

ரோகிணி தன் தோழிகளின் குழந்தைகளைக் கண்டு கொஞ்சிக் கூத்தாடி மகிழ்வாள்; சொர்ண விக்கிரகம்போன்ற குழந்தைகளும், சொக்குத் தங்கத்தால் செய்யப்பட்ட குழந்தைகளும் அவளைச் சொல்ல முடியாத ஆனந்தத்தில் ஆழ்த்தி




ஆசிரியர்: இந்தக் கணக்குப் போடத் தெரியவில்லையே, ராமு. உன் வயதில் ஜார்ஜ் வாஷிங்டன் சர்வேயராக இருந்திருக்கிறான், தெரியுமா?

மாணவன்: ஸார், அவன் உங்கள் வயதில் ஐக்கிய நாடுகளுக்கே தலைவனாகிவிட்டானே......

---

விடும்; அக்குழந்தைகளின் பிஞ்சுக் கரங்களை, சிறு கண்களை, மெல்லிய விரல்களை, அழகிய முகங்களை அணைத்து அகமகிழ்வாள். தான் எப்பொழுது இப்படிப்பட்ட குழந்தைக்கு அன்னை ஆகப்போகிறோம் என்று எண்ணி அவள் உள்ளம் விம்மித் தணியும். என்றைக்குத் தனக்குத் தங்கவிக்கிரகம் போன்ற குழந்தைகள்—தன் அழகைப் பிரதிபலிக்கும் குழந்தைகள் பிறக்கும் என்று நினைத்து நீண்ட பெருமூச்சு விடுவாள். எந்தக் குழந்தையாக இருந்தாலும் எடுத்து அணைத்து மகிழ்வதில் இணையில்லாத இன்பமடைந்தாள். குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில் என்ற பழமொழியை உண்மையாக உணர்ந்தவள் ரோகிணிதான். ஆண்டுதோறும் குழந்தைகளைப் பெற்றுக் குடும்ப பாரத்தைப் பெருக்கிக் கொண்டு அவைகளை வளர்க்கத்-

தெரியாமல் அடித்து நொறுக்கி, 'சனியனே! செத்துத் தொலையேன்' என்று ஒப்பாரி வைக்கும் தாய்மார்களைக் கண்டால் ரோகிணி கோபம் கொள்வாள். அவர்களுக்குக் குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும் என்று கற்றுக்கொடுப்பாள். 'குழந்தையை வளர்க்கத் தெரியாதவர்கள் எதற்காக இப்படி பூனை குட்டிபோடுவதுபோல் ஆண்டிற்கு ஒரு குழந்தை பெறவேண்டும்?' என்று குத்திக்காட்டுவாள். தங்களிடம் அடம்பிடிக்கும் குழந்தைகள் ரோகிணியைக் கண்டதும் அகமகிழ்வானேன் என்று ஆச்சரியப்பட்டனர் பல தாய்மார்கள்.

ஒருநாள் ரோகிணியின் தந்தை தன் அறையில் ஒருவருடன் வெகு ரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தார். அந்த வழியே தற்செயலாக வந்த ரோகிணி தன்னைப்பற்றிப் பேசுவதைக் கேட்டதும் சற்று ஒதுங்கிநின்று கேட்டாள். "நான் கொஞ்சம் வெளிப்படையாகவே சொல்லிவிடுகிறேன். உங்க பெண் ஜாதகம் அப்படிப்பட்டது. இந்தப் பெண்ணுக்குக் கல்யாணமே நடக்காது; ஒரு காலத்திலும் நடக்காது. அப்படி நடந்தால், நான் இந்த ஜோஸ்யப் புத்தகங்களை எல்லாம் தூக்கி எறிந்துவிடுகிறேன்......" அதற்குமேல் ரோகிணியால் அங்கே இருக்க முடியவில்லை. அவள் அழுத கண்ணீர், அவளது தலையணையை எல்லாம் ஈரமாக்கிவிட்டது. "உங்கள் பெண்ணுக்குக் கல்யாணமே நடக்காது! உங்கள் பெண்ணுக்குக் கல்யாணமே நடக்காது!" என்று வீடெங்கும் எதிரொலி செய்வதுபோல் தோன்றியது அவளுக்கு. "நீ தாயாக ஆக முடியாது; அழகான குழந்தையின் தாய் என்ற பெருமையை நீ அடைய முடியாது" என்று அவள் மனம் இடித்துக்காட்டியது!

அழகின் உருவாயிருந்த ரோகிணி உடல் மெலிந்து, உள்ளம் சோர்ந்து, பஞ்சத்தில் அடிபட்ட பெண்ணைப் போல் காட்சியளித்தாள். "பாவம் ரோகிணியா இப்படி ஆய்விட்டாள்! எப்படியிருந்தவள் எப்படி ஆகிவிட்டாள்! காலாகாலத்தில் கல்யாணம் பண்ணினால் தானே!......" இப்படி உலகம் பேசியது. எத்தனை நாளைக்கு வீட்டில் உட்கார்ந்து மனம் வெடிக்க, வேதனையை அனுபவிப்பது? ஆகவே பி. டி. படித்து ஏதாவது ஒரு பள்ளியில் ஆசிரியையாகி மனக்கவலை மறைக்க முயன்றாள்.

இதற்கு நடுவில், நம்பிக்கையைக் கைவிடாமல், ரோகிணியின் தந்தை சில வரன்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்; அவள் தாயோ தன் மகளின் அவல நிலையை எண்ணி எண்ணி எலும்புருவாகி 'இன்றோ நாளையோ' என்ற நிலையில் இருந்தாள். தன் உடலிலிருந்து உயிர் பிரிவதற்குள்ளாக எப்படியாவது தன் அருமை மகளுக்கு மணம்செய்து வைத்துவிடவேண்டும் என்று எண்ணினாள்.

ரோகிணி பி. ஏ; பி. டி. ஓர் உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியையாகச் சேர்ந்து குழந்தைகளிடையே தன் காலத்தைப் போக்கிவந்தாள். பல வகையான மனோபாவம் படைத்த குழந்தைகள் அவள் உள்ளத்திற்கு ஆறுதலைத் தந்தன. அவள் உடல் சிறிது தேறிவந்தது. அவ்வப்போது அவள் மனம் 'நான் ஒரு மலடி' என்பதை எண்ணி நெகிழ்ந்துவிடும்; தாரை தாரையாகக் கண்ணீர் பெருகியபடி அப்படியே உணர்ச்சி அற்றுவிடுவாள். யாராவது வந்து நினைப்பூட்டினால்தான் உண்டு.

ரோகிணிக்கு வயது இருபத்தியாறையும் தாண்டிவிட்டது. 'இனி தனக்குத் திருமணம் நடப்பது என்பது வெறும் கானல்நீர் போன்றதுதான்' என்ற முடிவிற்கு வந்து, அதைப்பற்றிய நினைப்பையே ஒதுக்கி வந்தாள்......இச்சமயத்தில் தான் தேர்தல் வந்தது; அவளை ஒரு போலிங் கிளார்க்காக நியமித்திருப்பதாக ஒரு உத்தரவு வந்தது.

தேர்தலின்போது, இளங்குழந்தைகளைக் கண்டதும் தேங்கிக் கிடந்த அவளது பழைய நினைவுகள் பீறிட்டுக்கொண்டு கிளம்பின. தன் வாழ்வு பாழானது; தனக்குத் திருமணமாகாது என்று சோதிடர் கூறியது; தான் தாயாக முடியாது என்று எண்ணி ஆசிரியையாகியது;—இவை எல்லாம் அவள் உள்ளத்தில் ஓர் எழுச்சியை உண்டாக்கின. பிஞ்சுக் கரங்களை உடைய குழந்தைகள் மழலைமொழி பேசி, "எனக்குக் குடு" என்று கைநீட்டிக் கேட்டபோது, ரோகிணி தன்னை மறந்து, தான் இருக்கும் இடத்தை மறந்து, தான் செய்வது குற்றம் என்பதை மறந்து, இவ்வுலகையே மறந்து அக்குழந்தைகளுக்கும் ஓட்டுகளைக் கொடுத்தாள். குழந்தைகளிடம் அவள் கொண்டிருந்த ஒருவித பாசம், அவள் சோகக் கதையில் ஒட்டிக்கொண்டிருந்த ஒரு பாகம். இதுதான் அவளை மறக்கச் செய்தன. ஆகவேதான் அவள் தேர்தல் விதிகளின்படி ஒரு மாபெரும் குற்றத்தைச் செய்துவிட்டாள். ஏதாவது ஒரு அரசியல் கட்சியிடம் தொடர்பு கொண்டுதான் அவள் அம்மாதிரிச் செய்கிறாளோ என்று தேர்தல் ஏஜெண்டான கமலா கருதியதில் வியப்பில்லை அல்லவா?

—இக்கதையைக் கூறிமுடித்து ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள் ரோகிணி. பிறகு ஒருவித ஏக்கத்துடன், "என்வாழ்வை இப்படியே கழித்துவிட முடிவுசெய்துவிட்டேன்......என் பள்ளியில் உள்ள குழந்தைகளிடத்தில்தான் நான் உலகத்தையே கண்டு வருகிறேன். என் குழந்தை என்று கொஞ்ச உரிமை கிடையாது என்ற உணர்ச்சி அவ்வப்போது 'தலைதூக்கும். அதை ஒருவாறு அடக்கிக் கொள்வேன். அழகான ஒரு கணவன்......அன்புமொழி பேசும் ஒரு குழந்தை......இவை எனக்கு எவரஸ்ட்டு சிகரம்போல் எட்டாக் கனிகளாகிவிட்டன. என் அவல வாழ்வை அறிந்தும், என்னைக் கைப்பிடிக்க இனி ஓர் ஆண் வருவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை" என்று கூறிமுடித்தாள். சோகத்தின் ரேகைகள் அவள் முகத்தில் படரலாயின.

"எப்படி அதற்குள் நீங்கள் முடிவு செய்துவிடலாம்? யாராவது ஒருவர்—இவ்வளவு பரந்த உலகில் ஒருவர்—வராமல் போகமாட்டார்..." என்று கூறினார் நந்தகோபால்.

"ஆமாம். நானும் அதைத்தான் கூற விரும்புகிறேன். நம்பிக்கை என்றாவது ஒருநாள் பலன் தரும்... என் நம் நந்தகோபாலே ஒருசமயம் முன்வரக்கூடாது? அந்த நம்பிக்கை பலன் தருகிறதா இல்லையா என்று பாருங்கள்" என்று சற்று துணிச்ச




கண்மணி: அம்மா, அரை அணாக் கொடு. வாசலில் ஒருவன் சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறான்.

தாய்: அவன் என்ன சத்தம் போடுகிறான்?

கண்மணி: 'ஐஸ்கிரீம் அரை அணா' என்றுதான் சத்தம் போடுகிறான் அவன்.

லோடு தன் எண்ணத்தை வெளியிட்டாள் கமலா.

"என்ன!" என்று அலறினள் ரோகிணி.

நந்தகோபால் கமலாவின் சொற்களால் அதிகம் பாதிக்கப்பட்டவராகத் தெரியவில்லை. இலேசான ஒரு புன்னகை அவர் இதழோரத்தில் நெளிய, ஓரக்கண்களால் ரோகிணியைப் பார்த்தார். அவள் தலையைக் குனிந்துகொண்டாள்.

சிறிதுநேரத்தில் கமலாவும், நந்தகோபாலும் விடைபெற்றுக்கொண்டு கிளம்பினர்.

அவர் இப்படித் திடீரென்று கிளம்பிவிட்டதைக் கண்டு ரோகிணி மனம் வருந்தினள். கமலா கூறிய வார்த்தைகளால் அவர் உள்ளம் புண்பட்டுவிட்டதோ என்று எண்ணி அந்தத் துடுக்குக்காரப் பெண் ஏன் அந்த வார்த்தைகளைக் கூறி இருக்க வேண்டும் என்று அவளை மனதிற்குள் சபித்துக்கொண்டாள். பிறகு தன் டயரியில் இருந்த ஒருசிறு துண்டுத்தாளை எடுத்துப் படித்தாள். அதில் 'எஸ். நந்தகோபால் எம். ஏ., ஆராய்ச்சியாளர், இந்திய சர்க்கார் புதைபொருள் இலாகா' என்றிருந்தது. அதைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தாள்; பரவசமடைந்தாள்; அவள் உள்ளம் புளகாங்கிதமடைந்தது; உடல் பூரித்தது. அலை அலையான கிராப்பு, அழகான முகம், அருமையான சூட் இவைகளைக் கொண்ட நந்தகோபாலின் உருவம் அந்த விஸிட்டிங் கார்டில் காட்சியளித்தது.

அதே நேரத்தில் நந்தகோபால் தன் அறையில் ஒரு சிறு கார்டை எடுத்துப் படித்தார். அதில் 'ஆர். ரோகிணி, பி.ஏ., பி.டி., கார்ப்பொரேஷன் உயர்நிலைப் பள்ளி. சென்னை' என்று கண்டிருந்தது. முகத்தில் வந்துவிழும் தலைமயிர், மோகனப் புன்னகை, முல்லைப் பற்கள் இவை[illegible] கொண்ட ரோகிணியி[illegible] உருவம் அந்தக் கார்டில் காட்சியளித்து, அவரைக் கட்டிலடங்காத ஆனந்தத்தில் ஆழ்த்தியது.

மறுநாள் காலையில் கமலாவை நந்தகோபால் எதிர்பார்க்கவில்லை. என்றாலும் அவள் வந்த விஷயம் ரோகிணியைப்பற்றித்தான் இருக்கும் என்று அவருக்கு நிச்சயமாகிவிட்டது. அவர்களிருவரும் பேசிக்கொண்டிருந்ததன் பயனாக மறுநாள் காலை ரோகிணியின் பெற்றோரும் சென்னை வந்து சேர்ந்தார்கள். ஒரு வாரத்தில் ரோகிணி திருமதி. நந்தகோபால் ஆனாள். எந்தவிதமான பொருத்தமும் பார்க்காமல் தன் பெண்ணை மணந்துகொள்ளவந்த நந்தகோபாலை ரோகிணியின் பெற்றோர்கள் ஆச்சரியத்தோடு பார்த்தார்கள். ஜாதகத்தைப் பார்த்துப் பார்த்து அலுத்துப்போன அவர்களுக்கு மேலும் அம்மாதிரி பார்க்க மனம் வரவில்லை. தேடாமல் கிடைத்தவரை நழுவவிட அவர்கள் மனம் இடம்தரவில்லை.

★

ஒரு ஆண்டு ஓடோடி மறைந்தது. ரோகிணி தன் குழந்தையிடம் கொஞ்சிக் கொண்டிருந்தாள்; அவளருகில் ஒரு பக்கம் நந்தகோபாலும் மற்றொரு பக்கம் கமலாவும் உட்கார்ந்து கொண்டிருந்தனர்.

"இந்தத் தடவை தேர்தல் வந்தால் குழந்தைகளுக்கெல்லாம் கூட 'ஓட்' கொடுக்க மாட்டீர்களே?" என்று கேட்டாள் கமலா.

"ஒன்றுக்கு இரண்டாகவே கொடுக்கப் போகிறேன். நான் அந்தமாதிரிச் செய்யாவிட்டால் இந்தக் குழந்தைக்குத் தாயாக ஆகியிருக்க முடியாதல்லவா?" என்று கூறிக் குறுநகை புரிந்தபடி நந்தகோபாலைப் பார்த்தாள் ரோகிணி.

மூவரும் கொல்லென்று சிரித்தனர்; குழந்தை ஒன்றும் புரியாமல் விழித்தது.

Edited, Printed and Published by Murugu[illegible] Subramanian for Ponni Ltd., at Ponni Achakam, 16, Seni Amman Koil Street, Tondiarpet Madras-21.

# அழகிய புதிய வெளியீடுகள்!

**தபாலாபீஸ் விநோதங்கள்** விலை ரூ. 0—8—0

**க. சண்முகசுந்தரம்** எழுதிய கட்டுரைகள்

நையாண்டி கலவாத நகைச்சுவை உண்டென்றால் அது இந்தத் 'தபாலாபீஸ் விநோதங்கள்' தாம். புத்தகத்தைக் கையிலெடுத்தால் அதுவே நம்மைப் படிக்கச் சொல்லுகிறது.

—காண்டீபம்

**இலக்கியச் சந்தையில்** விலை ரூ. 0—8—0

**மு. அண்ணாமலை** எழுதிய கட்டுரைகள்

கட்டுரைகள் அனைத்தையும் படித்து முடித்தவுடன் சுவைமிக்க கதையை வாசித்து முடித்த திருப்தி ஏற்படுகிறது.

—ஈழகேசரி

**ராஜிநாமா** விலை ரூ. 0—8—0

**நா. இராசவேல்** எழுதிய நாடகம்

"மிக நன்று மிக நன்று ராஜிநாமா!
மிக்க இனிதான நடை!.........
அகம் தெளிந்த எழுத்தாளர் இராசவேலர்
அந்தமிழ் நாட்டார் நன்றிக்குரியாரானார்"

—கவியரசர் பாரதிதாசன்

**பாரதிதாசன் பண்புகள்** விலை ரூ. 0—3—0

**நா. இராசவேல்** தீட்டிய நூல்

புரட்சிக் கவிஞரின் பண்புகள் இவை எனக் காட்டும் வகையில் நண்பர் இராசவேல் வரைந்துள்ள இச் சித்திரம் கவியரசரின் நினைவு நம் உள்ளத்தில் 'முழுவடிவம்' பெற உதவுகிறது. நறுக்குத்தெறிந்தாற்போன்ற தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ள இச்சுவடி நல்ல வரவேற்புப் பெறுமென நம்புகிறேன்; விரும்புகிறேன்.

—முன்னுரையில் முருகு சுப்பிரமணியன்

விவரங்கட்கு:

**பொன்னி லிமிடெட்**

த. பெ. எண். 1165 :: சென்னை — 2


இப்பொழுது நடைபெறுகிறது...
ஸ்ரீ சுகுமாரின்
சின்னதுரை
சென்னை......
பாரகன்
லக்ஷ்மி
(பெரம்பூர்)
தங்கம்
பெங்களூர்.....
சென்ட்ரல்
நியூ அபேரா
பாரத்....
மற்றும்
தென்னிந்தியெங்கும்
வடுவூராரின்
"திருமண மோஹினிகள்"
கதையைத்தழுவியது..
டைரக்ஷன்
T.R. மஹாலிங்கம்
M.S. PICTURES
RELEASE
G.H. RAO
எம்.எஸ். பிக்சர்ஸ். ராயப்பேட்டை சென்னை, 14.